166
உமா
ஆசிரியர். ஜி. உமாபதி
UMA
4 அணா
MAR'56 பங்குனி

எல்லா வலி, நோவுகளையும்
மாயமாய்ப் போக்கடிக்கும்
ORIENTAL BALM
for all aches and pains
இதில் மாயாஜாலம் ஒன்றும் கிடையாது. 70 ஆண்டுகளின் அனுபவ அடிப்படையில் அமைந்த சரியான செய்முறைதான் தடவியதும் வலி, நோவுகளை போக்கடித்து இதமளிக்கச் செய்கிறது. தலைவலி, சீதளம், முடக்கு வாதம் மற்றும் எல்லா தசை வலிகளுக்கும் இன்றியமையாத நிவாரணி.
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்

இந்தியன் பாங்க்

லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

TRAR OF BOOKS

தலைமை ஆபீஸ்:

இந்தியன் பாங்க் கட்டிடம், வடக்கு பீச்ரோடு,
மதராஸ்-1

சென்னை நகர ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார் பேட்டை—தேனும்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம் பெரியமெட், ராயபுரம் & தாம்பரம் (சுற்றுப்புறம்)

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா மற்றும் புதுடில்லியில் கிளை ஆபீஸ்களும் சப்-ஆபீஸ்களுமிருக்கின்றன.

வெளிநாட்டு பிராஞ்சுகள் :

கொழும்பு, கோலாலம்பூர், மலாக்கா, பினங்கு & சிங்கப்பூர்.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,20,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	77,50,000
டிபாசிட்டுகள் (30-6-55உ அன்றுள்ளபடி)		ரூ.	27.69 கோடி

லண்டன் ஏஜண்டுகள் :—வெஸ்ட்மின்ஸ்டர் பாங்க் லிமிடெட்
நியூயார்க் ஏஜண்டுகள் :—நேஷனல் சிடி பாங்க் ஆப் நியூயார்க்.

வெளிநாட்டு பரிவர்த்தனை வியாபாரம் உள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

என். கோபால அய்யர்,
காரியதரிசி.

பிரஸிடெண்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில்,

ஸ்னோ, டால்கம் பவுடர்

உங்கள் எழிலை பாதுகாக்கும்

அழகு சாதனங்கள்.

RATHOD TRADING CO. MADRAS. 1.



சூரியன் மார்க்

படுக்கையறை விளக்குகளையும், விளக்குத் திரிகளையும் இந்தியாவில் மிக அதிக அளவில் உற்பத்தி செய்பவர்கள்.

★

சன்லாம்ப் இண்டஸ்ட்ரீஸ்

23, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1.

உற்பத்திசாலை :

26/27, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.



எமது சிறந்த
தயாரிப்பான
நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE BRAND
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
கபால் பெட்டி 518 - - - சென்னை-3
போன் 2182
தந்தி: "ஜாமா"

அழகுக்கு அழகு செய்யும்

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும் பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள், வாசனைத் திரவியங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அழகுள்ள 2 சைஸுகளுள்ள டப்பிகளில் கிடைக்கும்.

உங்கள் வியாபாரிகளிடம் விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், மதராஸ்-7

USE ALWAYS

KANGARU FEEDER

A TRIAL WILL CONVINCE YOU

DISTRIBUTORS:

HINDUSTAN TRADING COMPANY

MADRAS. I.

எனது இனப்பெயர்—தமிழன்
எனது தாய்நாடு — தமிழ்நாடு
எனது கோரிக்கை—தமிழரசு
எனது கொள்கை—சமதர்மம்
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது பண்பு—தெய்வீகக் கலாசாரம்
எனது சமரசநெறி — சர்வதேச சகோதரத்துவம்

உமா

ஆசிரியர் :
ஜி. உமாபதி

துணை ஆசிரியர் :
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 3 மலர் 11	மார்ச், 1956	மன்மத ஸூ பங்குனி மீ

பொருளடக்கம்

பண்பின் பாதுகாவலர்கள்	(தலையங்கம்)	....	9
சிங்களத் தீவினிலே தமிழ்	—	....	10
அரசியல் அறிஞரும் தமிழ் அறிஞரும்	—	....	11
உங்களுடன் ஒரு கணம்	—	....	12
எங்கள் இதயங்கள் பேசுகின்றன	—	....	13
மாயாவி (பேட்டிக் கட்டுரை)	பூவை எஸ். ஆறுமுகம்	....	15
வாழ்க்கை ஒரு கனவு (கவிதை)	ஜெயகாந்தன்	....	18
கனவு ஒரு கானல் (கவிதை)	வாணிதாசன்	....	19
எல்லைச் சக்தி	'பூவை'	....	23
ஆடி வெள்ளி (ஆரம்ப எழுத்தாளர் வரிசை)	ஆர். ஸி. மணி	....	28
ஆஹுதி	லா. ச. ராமாமிருதம்	....	31
நான் விரும்பும் எழுத்தாளர் (விவாத அரங்கம்)	'வேணி'	....	40
ரங்கூன் கமலம் (தொடர் கதை)	'எல்லார்வி'	....	44
என் முதல் கதை	ரா. ஆறுமுகம்	....	52
மன வண்டு	'மஹி'	....	54
அணைந்த வேள்வி	தமிழ் ஒளி	....	59
மதிப்புரை	பிறைசூடி	....	64
கோஹினூர் (சிறுவர் தொடர் கதை)	'பாலா'	....	65
முற்கால இந்தியர் அளித்த செல்வங்கள்	பெனடிக்ட்	....	71
ஏன் இந்தப் புனைபெயர்?	ஜெகசிற்பியன்	....	74
பட உலகம்	பைரவி	....	76

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

வனப்பையும், வசீகரத்தையும் பாதுகாக்க...

அழகு குறையாமல் இருக்க அவசியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் சருமப் பாதுகாப்பு ஆகும்.

ஓரியண்டல் ரோஸ் டாய்லட் ஸோப் உங்கள் சருமத்திற்கு மிருதுத் தன்மையும், பளபளப்பும் அளிக்கிறது. நாள் முழுவதும் நீங்கள் புதுமைப் பொலிவுடன் இருக்க உதவுகிறது.

OK

ஓ. கே
ஓரியண்டல்
ரோஸ்
டாய்லட் சோப்

தயாரிப்பவர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பனி (இந்தியா) லிமிடெட், மதராஸ் 1.

197214

உமா

பண்பின் பாதுகாவலர்கள்

தமிழினம் என்றவுடன் பொதுவாக எல்லா நாடுகளிலும் 'பண்பின் பாதுகாவலர்கள்' என்ற எண்ணம்தான் நிலவி வருகிறது. இத்தகைய தமிழ் இனத்துக்கு பிரதமர் நேரு அளித்த அநீதியான தீர்ப்பை எதிர்த்துத்தான், கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதியில் சர்வ கட்சிக்கூட்டணி, சரித்திரம் காணாத அமைதி கலந்த வேலை நிறுத்த-ஹர்த்தாலை நடத்தி, தமிழகம் தன் பண்பைப் பாதுகாத்திருக்கின்றது.

இதுபோன்ற ஹர்த்தாலை கல்கத்தா மக்கள் நடத்தியபோது, அரசாங்கம் முன் எச்சரிக்கையாக அலுவலகங்களுக்கு ஓய்வு கொடுத்தும், எல்லாவிதமான போக்குவரத்து வாகனங்களை ஓடாமல் நிறுத்தியும், அந்த மக்களை எதிர்த்தால் என்ன நடக்கும் என்பதைப் புத்திசாலித்தனமாகப் புரிந்து கொண்ட மேற்கு வங்க அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம்.

ஆனால், நம் சென்னை அரசாங்கமோ, பார்க்கும் இடங்களிலெல்லாம் பயங்கர ஆயுதம் தாங்கிய போலீஸ் படையை நிறுத்தி, 'எல்லாத் துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் தகுந்த பாதுகாப்புத் தருவோம்' என்று பறை சாற்றியுங்கூட, பாராட்டுக்குரிய தமிழ் மக்கள் அறம் கலந்த அமைதியுடன் உலகம் கண்டிராத ஊர்வலத்தை நடத்தி, ஒற்றுமை உணர்ச்சியை மாகாண ஆட்சிக்கும், மத்திய ஆட்சிக்கும் நன்கு எடுத்துக் காட்டிவிட்டார்கள். இந்த உத்வேகத்தின் எதிரொலி, என்றென்றும் ஒற்றுமையுடன் ஒலித்துக்கொண்டே இருந்தால், தமிழினத்துக்குத் தாழ்வு நினைக்க வேறு யாராலுமே முடியாது.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தமிழகத்தில் தமிழினம் உயர தொழிற்சாலைகளோ, அறிவுத் துறையில் முன்னேற்றமடைய போதிய வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை. இருந்தாலும், பலங்கொண்ட இந்தியாவின் இணைப்பிலேயே என்றும் வாழ வேண்டும் என்று துடிக்கும் நம் இதயங்கள் இக்குறைகளையும் பொறுத்துக் கொள்கின்றன.

ஆனால், நம் இனத்தைப் பிரித்து இன்னொரு இனத்துடன் இணைத்து, நம் கலாசாரத்தையே அழிக்க எண்ணும் இந்த அமைச்சர்களின் ஆட்சியிலே எங்களுக்கு நிம்மதியும் நியாயமும் எங்ஙனம் கிடைக்கமுடியும்? இவர்களது ஆதிக்கம் இப்படியே வளர்ந்து கொண்டிருந்தால், இந்தியாவில் தமிழினம் ஓர் அங்கமாக இருந்தது என்பதையே மறைத்து விடுவார்களோ என்ற மனப்புயலின் எதிரொலிதான் இப்போராட்டம்.

தன்னை முன்னே இந்தியனாகவும், பின்னே தமிழனாகவும் எண்ணி வாழும் பண்புள்ள மக்களின் கூட்டணி நாம் என்பதை இனியாவது மத்திய ஆட்சி உணருமென்றும், தன் சர்வதேசப் புகழுக்குப் பங்கம் வராமல் நேருஜி நேர்மையான நீதி வழங்குவாரென்றும் எதிர்பார்க்கின்றோம்.

'இனத்தால் ஒன்றுபட்ட தலைவர்கள் என்றென்றும் நீடூழி வாழ்க!' என்ற கூட்டுக்குரல் பண்புமிக்க தமிழர்களிடையே திக்கெட்டும் ஒலிக்கிறது. ஆம்; இந்த ஐக்கியத்தில்தான் தமிழகத்தின் உயர்வையும், தமிழினத்தின் பண்புமிக்க மாண்பையும் காணமுடியும்.

சிங்களத் தீவினிலே தமிழ்!

சிங்களம் தான் இலங்கையின் அரசாங்க மொழியாக வேண்டும் என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தீர்மானித்து விட்டார்கள். செய்தித் தாள்கள் தந்த இம் முடிவு கண்டு கொதித்தெழாத தமிழன் யாருமே இருக்க மாட்டான் – இலங்கையில் மட்டுமல்ல, நம் தமிழ் நாட்டிலும்தான்!

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் சம அந்தஸ்துடன் கௌரவிக்கப்படும் என்று அடிக்கடி உத்தாரம் தந்து வந்த திரு கொத்தலாவலையின் மனம் இப்படித் திடீரென்று திசை திருப்பப் பட்டு விட்டது விந்தையான நிகழ்ச்சியேதான்! சொல்லும் செயலும் வேறு என்பதைச் சுட்டிக்காட்டிய 'பெரிய மனிதர்'களிலே அவர் பெயரும் ஒன்றாகிச் சரித்திரத்தில் இடம் பெற்றுவிடலாகாதே என்ற நல்லெண்ணத்தில்தான் அவருக்கு இப்படி எச்சரிக்கின்றோம்.

இலங்கையில் தமிழுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பற்றி நம் அருமைத் தமிழ் நாட்டுச் செய்தித்தாள்கள் சூடான சொற்களைப் பிரயோகித்து தலையங்கங்கள் எழுதியுள்ளன. வரவேற்கிறோம்; அவர்கட்குக் கை கொடுக்கிறோம். அது நம் கடமை, பண்பாடு, உரிமை.

ஆனால், இங்கே–நம் தமிழகத்திலே–தமிழ் படும் பாட்டைப் பற்றிச் சிந்திக்க–சிந்தித்ததைப் பேனா மூலம் தூதனுப்ப இந்த அருமைச் சகோதரப் பத்திரிகாசிரியர்களுக்குத் துணிவு இல்லை. 'தமிழ் ஆட்சி மொழியாகித்தான் தீர வேண்டும்!' என்று ஒருமுகமாக எல்லாப் பத்திரிகைகளும் தலையங்கங்கள் தீட்டியிருக்குமேயானால், 'மூன்று குலத் தமிழ் மன்னர் மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்த' தமிழ்த்தாய் என்றோ அரியாசனம் அமர்ந்து, புகழ் ஏறிப் புவிமிசை என்றென்றும் பொலிவுற வாய்ப்பு ஏற்பட்டிருக்குமே!

அரசியல் அறிஞரும், தமிழ் அறிஞரும்

ஆச்சாரியா நரேந்திர தேவ் அவர்களின் மறைவு இந்தியாவுக்கு மாபெரும் நஷ்டம்.

ஆச்சாரியா தேவ் அகில இந்திய பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்; சிறந்த கல்விமான்; பெருந்தியாகி; கடமையில் சிரத்தைமிகுந்தவர்; புத்தமதத் தத்துவ ஆராய்ச்சியில் வல்லுனர்; அரசியலும் பொது அறிவும் இணைந்து சேர வாழ்ந்து காட்டிய தியாகச் சின்னம் அவர்; நாட்டின் சுதந்தர வாழ்விற்கு ஒளி ஏற்றி வைத்த கலங்கரை விளக்குகளிலே ஆச்சாரிய தேவ் குறிப்பிடத் தக்கவர்.

19–2–56ல் நடந்த திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்க முதல் ஆண்டு விழாவில். தலைவர் 'தேவனு'க்கு செயலாளர் 'அகிலன்' மாலை அணிவிக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்

வையாபுரிப் பிள்ளை அவர்களின் மரணம் தமிழ் நாட்டுக்கு ஈடுகட்ட முடியாத நஷ்டம்.

கன்னித் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அருந் தொண்டாற்றிய தமிழறிஞர் களிலே பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் பெறும் பங்கு கணிசமானது என்பதைத் தமிழகம் நன்கு அறியும்.

அவர் இயற்றியும் பதிப்பித்தும் வெளிவந்துள்ள நூல்களின் எண்ணிக்கை நாற்பதுக்கும் மேல் உயருகிறது. தமிழில் 'லெக்ஸிகன்' தயாரித்த பெருமை திரு பிள்ளைக்கு உரியது. கம்பராமாயண, தொல்காப்பிய ஆராய்ச்சி, மனோன்மணீய வெளியீடு, திராவிட மொழிகள் பற்றிய நுண்ணிய புலமை, காவிய காலம் குறித்த மதிப்பிடற்கரிய கருத்துகள் — இவை என்றென்றும் திரு பிள்ளையின் புகழ் பாடும் என்பது திண்ணம்.

அமரர்களாகிவிட்ட அரசியல் அறிஞர் திரு நரேந்திரதேவ் அவர்களுக்கும், தமிழ் அறிஞர் திரு வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும் எங்கள் வணக்கம் மிகுந்த அஞ்சலிகளைக் காணிக்கை செலுத்துகின்றோம். ★

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு

தலைவர்: திரு ஆர். மகாதேவன்.

துணைத் தலைவர்கள்: திருவாளர் ம. பொ. சிவஞான கிராமணி, ஏ. ஜி. வேங்கடாச்சாரி, நாரண துரைக்கண்ணன், எஸ். ஏ. பி. அண்ணாமலை.

பொதுச் செயலாளர்: திரு அழ. வள்ளியப்பா.

துணைச் செயலாளர்கள்: திருவாளர் கண. முத்தையா, எச். வைத்யநாதன்.

பொருளாளர்: திரு டி. கே. ஷண்முகம்.

உறுப்பினர்: திருவாளர் எஸ். பாஷ்யம், ரா. வேங்கடாசலம், கி.வா. ஜகந்நாதன், மீ. பா. சோமசுந்தரம், ம. ப. பெரியசாமித்தூரன், வ. உ. சி. சுப்பிரமணியம், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, சு. வேம்பு, எம். ஏ. வஹாப், கொடுமுடி ராஜகோபாலன், ப. ஜீவானந்தம், ஜி. உமாபதி, புத்தனேரி ரா. சுப்பிரமணியன், பி. எம். கண்ணன், ஸ்ரீமதி குகப்ரியை.

அட்டைப்படப் போட்டி விளக்கம்:

சென்ற இதழ் அட்டைப் படம் வரைய ஓவிய மன்னருக்கு எங்களால் அனுப்பப்பட்ட திருக்குறள்—அறத்துப்பால் பாடல் இதுவேதான்:

"சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை."

பரிசு பெறும் கீழ்க்கண்டவர்களுக்கு **பூவை எஸ். ஆறுமுகம்** எழுதிய **'வசந்த பைரவி'** என்ற நவீனம் ஏப்ரல் முதல் தேதியன்று அனுப்பி வைக்கப்படும்.

அரு. ஆறுமுகம்—ஆ. மங்களாம்பாள், விஜயபுரம்; கோ. நடராஜன், காஞ்சிபுரம்; சி. இராஜேஸ்வரி, இலங்கை; கே. வைரமுத்து, இலங்கை; ஏ. பூபதிராஜ், இலுப்பூர்; நா. திருமலை, உதகமண்டலம்; எம். ராமஸ்வாமி, இராஜபாளையம்; லெ. சின்னையா செட்டியார், இரங்கூன்; செ. ராமலிங்கம், மதுரை; எம். கோபாலன், சித்தூர்; எஸ். பத்மா, சென்னை-6; உ. கோவிந்தசாமி, திருப்பனந்தாள்; எம். பழனிவேலு, திருப்பனந்தாள்; எஸ். வி. தங்கராஜ், நிலக்கோட்டை; சுப. மாணிக்கம், அறந்தாங்கி; இராவண—இராமசாமி, திருவையாறு; பொ. கி. மூர்த்தி, சித்தூர்; அரு. சுப்பிரமணியம், லக்ஷ்மிபுரம்; என். செல்லையா, பம்பாய்-12; ஆர். மாத்ருபூதம், கல்கத்தா-26; வ. தே. சந்திரசேகரன், சென்னை-1; சு. கிருஷ்ணன், கீழ்ப்பூங்குடி.

உங்களுடன் ஒரு கணம்

கடந்த இதழ் 'உமா' அட்டைப் பட விளக்கப் போட்டிக்கு எங்களுக்கு வந்திருந்த கடிதங்களின் எண்ணிக்கை: 576. போட்டியின் முடிவு, பரிசு பெற்றவர் பட்டியல் ஆகிய விவரங்கள் வேறொரு பக்கத்தில் காத்திருக்கின்றன.

இந்த இதழ் அட்டைப் படம் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் நுட்பக் கருத்துகளை ஒரு பக்க அளவிற்குள் வரம்பு கட்டி எழுதி முடித்து, மார்ச் 20-ஆம் தேதிக்குள் அனுப்பி வையுங்கள். பல்வகையாலும் சிறந்ததென நாங்கள் தேர்ந்தெடுக்கும் கட்டுரைக்குப் பத்து ரூபாய் சம்மானம்.

'உமா' கல்லூரி மாணவர்-மாணவிகள் சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. முடிவு நாளான 29-2-56க்கு முன்னரே, இதழ் வேலைகள் பூர்த்தி பெற வேண்டிய நிலையில் இருந்ததால், அடுத்த இதழில்தான் போட்டிக்கு வந்த கதைகளின் எண்ணிக்கை, போட்டியின் முடிவு அறிவிக்கப்படும் நாள் முதலிய விவரங்களைக் குறிப்பிட முடியும்.

பிரசித்தி பெற்ற மறுமலர்ச்சி எழுத்தாளர் திரு லா. ச. ராமாமிருதம் 'எழுத்தாளர்கட்கு எழுத்தாளர்'. 'ஆஹுதி' என்ற அவருடைய அற்புதமான சிறுகதையை வெளியிடுவதில் நாங்கள் பெருமைப் படுகிறோம்.

தமிழ் எழுத்துலகில் இரண்டு ஆறுமுகம் உண்டு. அவர்களில் ஒருவர் திரு ரா. ஆறுமுகம். முதல் கதை வரலாற்றைப் பற்றி அவர் அழகாக எழுதியிருக்கிறார்.

'இன்பக்கலை' ஆசிரியர் திரு ஜெகசிற்பியன், தான் புனைபெயர் சூடிக் கொண்ட கதையைச் சுவை ததும்பச் சொல்லுகின்றார்.

திரு 'தமிழ் ஒளி'யின் நாடகம், திருவாளர் வாணிதாசன், ஜெயகாந்தன் ஆகியோரின் இருதுருவக் கவிதைகள், திருவாளர் 'மஹி', மணி, 'பூவை' ஆகியோரின் சிறுகதைகள் முதலியன வழக்கம் போலவே இலக்கிய மதிப்புப் பெற்று விளங்குகின்றன. திரு பெனடிக்டின் கட்டுரைகள் தொடர்ந்து 'உமா'வை அலங்கரிக்கும்.

திரு 'எல்லார்வி'யின் தொடர் கதையில் பின்னப்பட்டிருக்கும் சம்பவத் திருப்பங்கள் கதைக்குக் 'கனம்' ஏற்றுகின்றன.

சிறுவர்-சிறுமியர் தொடர்கதை 'கோஹினூர்' நிறைவுபெறுகிறது. ''யார் இந்த பாலா?''—உங்கள் விடைகளை மார்ச் 20-ஆம் தேதிக்குள் அனுப்பிவிடுங்கள். பரிசு வழக்கம்போல்.

'உமா'வில் விரைவில் தொடங்கவிருக்கும் புதிய தொடர்கதையை எழுதுபவர் மாயாவி. தொடர்கதையின் பெயர் வேண்டுமென்கின்றீர்களா? இதோ: 'வாடா விளக்கு.' மெய்தான்-மாயாவியின் பேட்டிக் கட்டுரை தருணம்பார்த்துத் தான் இடம் பெற்றிருக்கிறது.

வணக்கம். — ஆசிரியர்.

'உமா' ஏப்ரல் இதழில் ஆரம்பம்:

'மாதவியின் மாண்பு'

சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. எழுதும்

கட்டுரைத் தொடர்

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'ஆலவாய் அழகி'—இந்தப் பெயரில்தான் எவ்வளவு வசீகரம்!

கதைக்குப் பிள்ளையார் சுழியிட்ட வாசவன் அற்புதமாக 'ஆரம்பவிழா' நடத்தியிருக்கிறார்.

கணையாழியின் கைவண்ணம் பட்டு, நாகராஜனின் சரக்கும் சேர்ந்த போது, போக்கே மாறிவிட்டது. ஜடாதரன் சிக்கலைச் சற்று தெளிவாக்கினார். 'அபூர்வ மனிதர்'தான் அவர்!

கதைக்கு 'லாலி' பாடிய 'பூவை' யைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. 'அழகி'யை ஈன்ற அன்னையிடமே இறுதியில் அடைக்கலப் படுத்தி விட்டார். ஒரு குழந்தை என்ன 'ஆட்டம்' ஆடினாலும், இறுதியில் பெற்றவளிடம் வந்து தானே ஆக வேண்டும்?

சிறு கதையுலகில் இத்தகைய சிறந்த புதிய முயற்சிகளை நான் வரவேற்கிறேன்.

எச். ஏ. கான், வந்தவாசி.

*

திரு ஸ்ரீனிவாசன் அவர்களுடைய 'மணிக்கொடி', போல், திரு. கு. ப. ரா. அவர்களின் 'கிராம ஊழியன்' போல், திரு க. நா. சு. அவர்களின் 'சூறவளி' போல், திரு எம். வி. வெங்கட்ராமன் அவர்களின் 'தேனீ' போல் மறுமலர்ச்சி இலக்கிய வானில் தற்போது ஒற்றைத் தனி விண்மீனாய் ஒளி வீசுகிறது 'உமா'. தமிழ் வளர்க்கும் 'உமா'விற்கு என் நல் வாழ்த்துகள். உங்கள் முயற்சி வெற்றி பெறுவதாகுக.

மா. வரதராஜன், விஜயபுரம்.

*

பொங்கல் மலரின் ஒளி இந்த பிப்ரவரி 'உமா' இதழிலும் பிரதிபலிப்பதைக் கண்டேன்.

'மணிக் கொடி' பரிசளித்த எழுத்தாளர் திரு சிட்டியின் 'கல்லழகி' வெகு அற்புதம். இக்கதைக்கு ஓவியர் 'ரெஸாக்' வரைந்த சித்திரங்கள் உயிர் தந்தன. தங்களுடைய 'தம்பிக்கு' கட்டுரை வெகு அற்புதம்.

'ஆலவாய் அழகி'யின் ஐந்து பகுதிகளும் ஐந்து மணிகள். 'வாசவன்' 'பூவை' இருவரின் எழுத்துகள் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தன.

'கேதாரி'யின் 'காதல் திரை', என்ற கதையும் தி. ஜானகிராமனின் 'பாலசரஸ்வதியின் நடனம்' என்ற கட்டுரையும் உள்ளத்தைத் தொட்டன. கட்சி வேறுபாடற்ற முறையில் 'உமா' தொண்டு புரிவதை வரவேற்கிறேன். புனைபெயர் வரலாறு சுவைமிக்கதாக உள்ளது.

கே. மாலதி, சென்னை-9.

*

'உமா' டிசம்பர் இதழில் 'எங்கள் இதயங்கள் பேசுகின்றன' என்ற பகுதியில் திரு பி. சின்னச்சாமி பி. ஏ., அவர்கள் எழுதியிருந்த கடிதத்தை வாசித்தபோது என் உள்ளம் அலை பாய்ந்தது. 'உமா' பழைய இதழ்களைத் தேடிப் பிடித்து 'மணிக்கொடி' ராமையா, 'ஆர்வி' அகிலன், தி. ஜ. ர., த. நா. குமாரஸ்வாமி, 'சுகி' முதலிய நட்சத்திர எழுத்தாளர்களின் எழுத்துகளை எப்பாடு பட்டாவது வாசித்து விடுவது என்று உறுதி கொண்டேன்.

எஸ். கந்தைய்யா, சிலோன்.

*

இவ்வாண்டு பொங்கல் மலர் போன்று எவ்வாண்டும் வெளிவந்ததில்லை என்பது என் துணிபு. தலைவர் ம. பொ. சி. அவர்களின் 'இளங்கோ திருநாள்', ஜி. உமாபதி அவர்களின் 'தமிழகமே, கடமையைச் செய்!' மற்றும் 'உமா'வில் பங்கு கொண்டுள்ள அம்சங்கள் அனைத்துமே அறுசுவை உண்டி போன்று சிறந்து இனித்தன.

தியாகன், லான்மடோ, இரங்கூன்.

உங்களுக்கு எங்கள் நன்றி

ஆஸ்த்மாவா?

ஒரு நொடியில் அதை ஒழிப்பது

மல்டிமிக்ஸ்

தாராளமாக மூச்சு வரச் செய்து, தொண்டைக்கு இதமாக இருந்து, மூச்சடைப்பையும் இருமலையும் போக்குகிறது.

இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.,
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னல் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்ருல் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) **HOSHIARPUR, (P. B)**

மாயாவி

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் என்னுடைய மூன்றாவது சிறுகதைத் தொகுப்பொன்று வெளிவந்தது. பெயர்—'காதல் மாயை'. இத்தொகுப்பைப் படித்த தமிழன்பர்களிடம் ஒரு கணம் மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. என் உரையின் ஒரு சிறு பகுதியை மட்டும் இப்பொழுது இங்கே மீண்டும் எழுத வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன். கட்டுரைக்கு முன்னுரை வேண்டுமல்லவா?

''...வாழ்க்கையின் பொது நியதியை ஒட்டிய முறையில், தன் கண்களுக்குத் தெரிந்தபடி உலகத்தைப் பார்த்துத் தன் சிந்தனைக்குத் தோன்றிய விதத்தில் அதற்கு விளக்கம் கொடுத்து எழுதுவது தான் இலக்கியம். உலகப் படைப்புக்கு—அதை இறைவன் படைத்திருந்தாலும் சரி; இயற்கை படைத்திருந்தாலும் சரி—கன்ம வினைத் தொடர் என்றோ, காரண காரியச் சங்கிலித் தொடர் என்றோ விளக்கம் கூறுகிறார்கள். ஆனால், என் இதயப் படைப்புக்கு ஒரே வரம்பு-ஒரே முடிவு-எனக்கு அவை இஷ்டம் அளித்தன; இங்கிதம் அளித்தன; இன்பம் அளித்தன; காலத்தின் நெருக்குப் பிடியிலிருந்து 'சிருஷ்டி கர்வம்' என்ற வியன் வெளிக்கு என்னை அழைத்துச் சென்றன.''



இன்னொரு விசேஷம் என்னவென்றால், இந்தப் புத்தகத்திற்கு திரு மாயாவி அவர்கள்தான் முன்னுரை வழங்கினார். இலக்கியச் சந்தையில் 'காதல் மாயை' பவனி வந்த பிறகு, ஒரு பொன்னான வாய்ப்பு ஏற்பட்டது. 'பொன்னி'யில் நான் பணி புரிந்த போது, திரு மாயாவியின் சந்திப்பு கிட்டியது. அடுத்த சந்திப்பு கடந்த அக்டோபரில் ஏற்பட்டது. எங்கள் 'உமா' அலுவலகத்தில் சந்தித்தோம். எங்கள் ஆசிரியர், மாயாவி, நான்—மூவரும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தோம். அந்தத் தொடர்பில் அமைகிறது இந்தப் பேட்டிக் கட்டுரை.

இரண்டு பதிப்புகள் வெளி வந்து விட்ட 'அகதி' என்ற திரு மாயாவியின் சிறுகதைத்தொகுப்பு நூலில் திரு பி. எஸ். ராமையா இப்படிக் கூறுகின்றார்:

''நமது வாசகர்களுக்கு திரு 'மாயாவி'யை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே யில்லை. சமீப காலத்தில் தமிழின் முதல் தரப் பத்திரிகைகளில் அநேகமாக எல்லாவற்றிலும் அவருடைய கதைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தாய் நாட்டிலிருந்து நெடுந் தூரத்தில் போய் வசிக்கும் தமிழர்கள் முன் எழும் பிரச்னைகளையும், அந்தப் பிராந்தியத்து மக்களின் வாழ்க்கைப் பிரச்னை

பேட்டிக் கட்டுரை:

பூவை எஸ். ஆறுமுகம்

> தமிழ்ப் பெண்களுக்கு, இசையறிவு பயிற்சியால் வருவது மட்டுமல்ல; அது அவர்களுடைய பரம்பரைச் சொத்து. தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால், அக்கால மக்களின் வாழ்வு இசை மயமாகவே இருந்ததைப் பார்க்கிறோம். —ம. பொ. சிவஞானம்

களையும் கொண்டு அவர் கதைகள் கட்டுகின்றார். 'மாயாவி' புதுவழி இலக்கியப் பண்ணையில் பயிரிடும் ஒரு தீவிர எழுத்தாளர். தமிழில் அவர், தமிழ் நாட்டுக்கு வெளியே உள்ள, ஆனல் தமிழ் மக்கள் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமைகளைக் காட்டுகிறார். அவருடைய கதை அமைப்புகளில் அழகு இருக்கிறது. அவரது கதைகள் என் சிந்தனையைத் தூண்டி விட்டன.''

எழுத்துலகில் 'மாயாவி'யின் பெயரை அறிமுகம் செய்வித்த பெருமை 'சாமுண்டியின் சாபம்' என்ற சிறுகதைக்கே உரியது. கடந்த 1939 லிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட இருநூறு சிறுகதைகளுக்கு மேல் எழுதியிருக்கின்றார். இவருடைய சிறுகதைகளில் பல பிற இந்திய பாஷைப் பத்திரிகைகளிலே மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

நான் காணும் 'மாயாவி' இதோ: 'மாயாவி' என்ற பெயரைப் பார்த்தவுடன் அடுக்கடுக்கான சம்பவங்கள் தோன்றும்; அற்புதமான சூழல்கள் பிறக்கும்; உவமை நயம் இருக்கும்; வருணனையில் உயிர் இருக்கும்; கதைக் கருச் சிறப்புடன், மனேதத்துவமும் குரல் கொடுக்கும்; கதைகளை அமைத்துச்சொல்லுவதிலே புதுப் புது உத்திகள் கண் சிமிட்டும்; கருகிய மொட்டு மறுமலர்ச்சி பெறும்; சலனத்திற்குப் பின் சாந்தி நிலவும்; அன்பின் ஒலியில் ஜீவ ஒளி வீசும்; அன்புக்கு உருவம் தீட்டப் பெறும்; கதைக்குள் கற்பனை அடங்கும்; கற்பனையில் கதை விரியும்; வால் நட்சத்திரம் கதை சொல்லும்; கோமேதகக் கொலையில் துப்பு துலங்கும்; வாடாமலர் மணம் பரப்பும்; சிங்க மேட்டுப் பங்களாவில் நெடுங்கதை ஒலி பரப்பப்படும்; சமந்தரக் கோடுகளிலே காதல் தத்துவம் எதிரொலிக்கும்; ஜீவத்திரையில் வாழ்க்கைக் கதை திரையிடப்படும்; 'ஜெய் மாதுங்கா!' என்ற கோஷம் திக்கெட்டும் முழங்கும்; விதம் விதமான இனத்தவர்கள், கதை உறுப்பினர்களாவார்கள்; 'டக், டக்' கென்று திருப்பங்கள் உயிர் பெற்றெழுந்து நம்மையெல்லாம் திகைக்க வைக்கும்; குணச் சித்திரங்கள் புனையா ஓவியங்களாகப் பரிமளிக்கும்; சூருவளியும் பூகம்பமும் கைகுலுக்கிக் கொள்ளும்; சமூகம், வாழ்க்கை, காதல், அன்பு, பாசம்—அனைத்துக்கும் விடுகதை போடப்பட்டு, விடையும் சொல்லப்படும். மாயாவி அல்லவா? – அழகான புனைபெயர்!

வாழ்க்கையைப் படித்துக் கதை எழுதும் எழுத்தாளர்—ஆசிரியர் திரு மாயாவி.

'வாடாமலர்' என்ற நவீனம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரின் பரிசைப் பெற்றது.

பம்பாய்த் தமிழன்பர் திரு மாயாவியின் இயற்பெயர் எஸ். கே. ராமன்.

வைராக்கிய நிலையின் ஒலியையும் அன்பு நிலையின் ஒலியையும் ஒரே அரங்கில் ஆடவிட்டுப் பிறந்தது மாயாவியின் 'அன்பின் ஒலி'.

''என்னுடைய 'அன்பின் ஒலி' தொடர்கதை வெளி வந்து கொண்டிருக்கையில், இதில் நான் பொதுவுடைமைக் கட்சியைத் தாக்கி எழுதி வருவதாக இரண்டொரு அன்பர்கள் குறைப் பட்டுக் கொண்டார்கள். உண்மையில் எந்தக் கட்சியையும் தாக்கும் நோக்கம் எனக்கு எதுவும் இல்லை. எல்லாக் கட்சிகளிலுமே சில 'பெருச்சாளிகள்' இருக்கின்றன.

ஏதாவது ஒரு கட்சியில் புகுந்து சுரண்டுவதுதான் அவர்கள் தொழில். மதுவை இத்தகைய பெருச்சாளிகளில் ஒருவனுகச் சித்திரித்திருக்கிறேன். கட்சிக் கண்களோடு பார்க்காமல், கதாபாத்திரங்கள் வழியாகக் கதையைப் பார்க்கும்படி அந்த அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.''

'மாயாவி' கரூர்ப் பேர்வழி.

வால் நட்சத்திரம் தோன்றுவது சுபீட்சத்துக்கல்ல என்பதாக ஒரு நம்பிக்கை தென்னுட்டிலே தொன்றுதொட்டு ஊறிக்கிடக்கிற தல்லவா? இது பேதமையான நம்பிக்கை என்பது மாயாவியின் எண்ணம். விளக்கம் வேண்டுமா?— 'வால் நட்சத்திரம்' சொல்லும்.

நூல் வடிவு பெற்ற இவரது படைப்புகள் பின் வருமாறு:

சிறுகதைத் தொகுப்பு: 'சாமுண்டியின் சாபம்'; 'அகதி'; 'மாயாவியின் கதைகள்'; 'சூருவளி' நவீனம், நெடுங்கதை: 'மறுமலர்ச்சி; 'அன்பின் உருவம்'; 'வாடாமலர்'; 'வால் நட்சத்திரம்', 'கதையும் கற்பனையும்'; 'அவள்'; 'தெய்வம் தந்தது'; 'பாசக்கயிறு'.

ஆம்; தமிழ் எழுத்துலகுக்கு ஓஹென்றி ஒருவர் கிடைத்து விட்டார்.—அவர் 'மாயாவி'!

பேட்டி

"சமீப காலத்தில் தமிழ் இலக்கியத்தில் சிறு கதைகள், நவீனங்கள் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கின்றன வென்று நீங்கள் கருதுகிறீர்கள்?''

''தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகளும், நவீனங்களும் வெகு தூரம் முன்னேறி யிருக்கின்றன. சமீப காலத்தில் தோன்றி, தமிழ்த்தாய்க்கு மணி மணியான கதை மற்றும் நவீனங்களாலான மாலைகளைச் சாற்றி அவள் மேனியைப் பொன்னென மின்ன வைத்து வரும் எண்ணற்ற எழுத்தாளர்களும், பல்வேறு பத்திரிகைகளுமே இதற்கு அத்தாட்சியாகும். எழுத்தாளர்கள், அவர்களின் சிறுகதை, மற்றும் நாவல்கள், அவற்றை வெளியிட்டு வரும் பத்திரிகைகள் இவற்றின் தொகையைக்கொண்டு நான் முன்னேற்றத்தைக் குறிக்கவில்லை. தரத்தைக் கொண்டே சொல்கிறேன். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஓர் ஆரம்ப எழுத்தாளருடைய சிருஷ்டியையும் இன்றைய ஆரம்ப எழுத்தாளர் ஒருவரின் சிருஷ்டியையும் ஒப்பிட்டு நோக்கினுல். இன்றையச் சிறுகதை மற்றும் இலக்கியங்களின் முன்னேற்றத்தை மிக எளிதாகக் காணலாம்.''

'''அன்பின் ஒலி' என்ற தங்கள் நவீனத்தைப் படமாக்கப் போவதாகச் சொன்னீர்கள். மகிழ்ந்தேன். மேற்படி கதையின் உயிர் சிதைக்கப்படாமல் படமாக்கப்பட தாங்கள் கவனம் கொள்வீர்களல்லவா?''

''ஆம்; அது விரைவில் திரைப் படமாக வரலாம். அந்தக் கதையின் உயிர் நாடி அன்புதான். அதைச் சிதைத்து விட்டால், பின்னர் என் கதையை நாடி ஒரு படத் தயாரிப்பாளர் வருவதில் அர்த்தம் என்ன இருக்கிறது? ஆகவே, அதனைப் படமாக்க ஆவல் கொண்டுள்ள படத்தயாரிப்பாளர் கதையின் உயிரைச் சிதைக்க மாட்டார் என்றே நான் நம்புகிறேன். அதற்காக என் கதையை எழுத்துக்கு எழுத்து சரியாகப் பிலிம் சுருளில் கொண்டு வந்து விடுவார் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. மாறுதல்களை அவர்கள் புகுத்தலாம். ஆனுல் அம்மாறுதல்கள் அதன் உயிரைச் சிதைக்க மாட்டா; உயிருக்கு இன்னும் சோபையே ஊட்டும்.''

''தங்களது பெரும்பாலான எழுத்துக்களிலே வட இந்தியக் கதாபாத்திரங்களே காணப்படுகின்றனரே—ஏன்?''

இரு துருவக் கவிதை: 1

வாழ்க்கை ஒரு கனவு

வாழ்வு!

பிறவியுற்ற பின்னர்
பெருகி வந்த வாழ்வு
மறலி வரும் முன்னர்
மனம் லயிக்கும் கனவு.

உயிர்கள்!

'என்ன நடந்தது, என்ன நடந்திடும்?'
என்று திகைத்திடும் உயிரினமே
'இன்னும் நடந்திடும்! என்றும்
நடந்திடும்!'
என்று ஒலித்திடும் இக்கனவு.

துன்பம்!

மாயையான கண்ணிகளில்
மருட்டுகின்ற துன்பம்
மாயமாக மாறி மாறி
மயக்குகின்ற கனவு.

புகழும், சுவையும்!

பொய்க்கின்ற புகழ் உமது
பொன்னுன கனவு
கைக்கின்ற சுவை உமது
காதலெனும் கனவு.

விதி!

கருவுற்ற விதத்தில்
உருவற்ற உயிரை
எருவிட்ட விதியே
இங்குற்ற கனவு.

?

மனம்செய்த சித்தோ?–இது
மதியுற்ற பித்தோ?
கனவென்று சொல்வார்–அது
'கதை'யென்று சொல்வேன்!

—ஜெயகாந்தன்

''எழுத்தாளன், தன் கண்முன் நிகழும் சம்பவங்கள், காணும் பாத்திரங்கள் –இவற்றிலிருந்துதான் கதைகளை உருவாக்குகிருன் என்பது உண்மையாளுல், அந்த உண்மையிலேயே தங்கள் கேள்விக்கும் விடை அடங்கியிருக்கிறது.''

''தங்கள் நவீனங்களிலே சம்பவங்கள்தாம் முக்கியத்வம் பெறுகின்றன. அப்படியென்ருல் வெறும் சம்பவங்கள்தாம் நவீனத்துக்கு உயிர்நாடி என்று தாங்கள் கருதுகிறீர்களா?''

''ஆம்; சம்பவங்களே என் கதைகளுக்குச் சுவை தருபவை. எனினும் வெறும் சம்பவங்கள்தாம் கதைகளுக்கு உயிர்நாடி என்ற கருத்து உடையவனல்ல நான். என்னுடைய அறிவுக்கும் அநுபவத்துக்கும் எட்டிய வரையில், எழுத்தாளர்களிடையே மூன்று ரகத்தவரை நான் காண்கிறேன். ஒரு சிலர் அழகிய நடையினுல் தங்கள் சிருஷ்டிகளுக்கு உயிரூட்டுகிருர்கள்; இரண்டாவது ரகத்தவர் சம்பவப் பின்னல்களால் கதைக்குச் சுவையூட்டுகிருர்கள். இந்த இரண்டும் கலந்து எழுதும் எழுத்தாளர்களும் உண்டு. இந்த மூன்று வகைகளில் நடு வகையைச் சேர்ந்தவன் நான்.''

''தமிழில் மனேதத்துவ நாவல்கள் அதிகம் வெளிவர வேண்டுமென்ற என் கருத்தை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?''

''நிச்சயமாக ஆமோதிக்கிறேன். அத்துறையில் தமிழ் இலக்கியம்

அடைந்துள்ள குறைபாட்டை என்னுல் இயன்ற அளவு போக்க வேண்டுமென்று இரண்டு நெடுங்கதைகளைக்கூட நான் எழுதியிருக்கிறேன். மனுேதத்துவக் கதைகள் தமிழ் நாட்டுக்குப் புதியவை; ஆயினும், அவற்றுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதை அக்கதைகள் மூலம் நான் கண்டிருக்கிறேன்.''

''தாங்கள் எழுதிய கதை, நாவல்களில் தங்களுக்குப் பிடித்தமானவையாவை?''

''வேடிக்கையான கேள்வி! பெற்ற தாய்க்குத் தன் குழந்தைகளுள் யாரைத்தான் பிடிக்காமல் இருக்க முடியும்? நான் என் சிருஷ்டிகளிடம் ஓரவஞ்சம் உடையவன் அல்ல. என் உற்பத்திகளில் சிறந்தவை எவை, தாழ்ந்தவை எவை, என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பை நான் வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன். என் சிருஷ்டிகளில் எவை வாசகர்களை அதிகம் கவர்ந்தன என்பதை வேண்டுமானுல் நான் சொல்லக்கூடும். நாவல்களில் 'மறுமலர்ச்சி', 'அன்பின் ஒலி'; நெடுங் கதைகளில் 'கதையும் கற்பனையும்', 'சலனம்' தொடர்; சிறுகதைகளில் 'பாலம்', 'விஷக் கன்னி', 'கலையா? காதலா?', 'புதிர்' போன்றவையும் வாசகர்களின் பெருமதிப்பைப் பெற்றன.''

''இதுவரை வெளிவந்திருக்கும் தங்களுடைய கதைத்தொகுப்பு, நவீனங்களிலே அதிகமாக விற்பனையாயிருப்பவை எவை?''

இரு துருவக் கவிதை: 2

கனவு ஒரு கானல்

என் அன்னை ; சிற்றூராள் ; எழுதாத
பாடல் !
இல்லறத்தின் வழிகாட்டி; புகழ்ச்சியில்லை,
உண்மை.
மின்னலிடை ; தேயாத வெண்மதியம் !
நீங்கள்
விரும்புகின்ற என்பாட்டின் ஆதியவள் !
அந்தத்
தென்னவனைத் தீந்தமிழை என்னுயிரை
அன்பைச்
சிறுவயதில் நானிழந்தேன் ; ஆனுலும்
அந்த
முன்னவர்கள் தீந்தமிழை மறக்கவா
கூடும் ?
முழுநேரம் அவள்கனவே ! கனவுஒரு
கானல் !

என் தந்தை, என் தந்தை, என் தந்தை
என்றே
எழுதுகின்ற வேளையிலும், எண்ணுகின்ற
போதும்,
தென்னவர்கள் தமிழ்காத்த சிறுத்தைஇன
மக்கள்
தெரிகின்றுர் ; ஆனுலும் என் தந்தை போல
அந்நாளில் இருந்தாரோ என்கின்ற ஐயம்
அகத்திலெழும் ; அவர்பேச்சோ
என் காதில் கேட்கும்;
எந்நாளும் என்னருகில் ஏதேதோ பேசி
இருப்பதைப்போல் கனுக்காண்பேன் ;
கனவு ஒரு கானல் !

இளவயதில் தாயற்றுத் தத்தளித்த
போழ்து
யார்யாரோ சிரித்தணைத்துச் சிரிப்பூட்டப்
பார்த்தார்.
தளதளத்த என்பாட்டி அம்மாயி என்றன்
தனிச்சொத்து, நானவளின் தணியாத
காதல் !
உளத்தினிலே குடியேறிப் போனஅவள்
காட்சி
உயிர்பிரியும் வேளையிலும் நான்மறக்க
மாட்டேன்.
வளர்த்தஅவள் எனைப்பிரிந்தாள் ;
அவளன்பு சாயல்
மாருத பெருங்கனவு ! கனவு ஒரு கானல் !

— கவிஞர் வாணிதாசன்

"கதைத் தொகுப்பில் 'அகதி'யும், நாவல்களில் 'மறுமலர்ச்சி' மற்றும் 'அன்பின் உருவ'மும் மற்ற நூல்களைவிட அதிகமாக விற்பனையாகியுள்ளன."

"தாங்கள் தற்போது பணியாற்றும் 'பிலிம்ஸ் டிவிஷனு'க்கும் தங்களது இலக்கிய வாழ்வு முறைக்கும் சரிப்பட்டு வருகிறதா?"

"நான் தற்சமயம் பணியாற்றி வருவது என் மனத்துக்கு உகந்த வேலை. இவ் வேலையின் மூலம் இலக்கியமே எனக்குத் தற்சமயம் முழு உணவும் அளித்து வருகிறது. மத்திய அரசாங்கத்தின் செய்தி-ஒலிபரப்பு மந்திரி இலாகாவைச் சேர்ந்த பிலிம்ஸ் டிவிஷனில் தமிழ் படங்களுக்கு விளக்கவுரை எழுதிப் பேசும் பணியில் ஈடுபட்டுள்ள நான், அவ்வேலையின் மூலம் தமிழ் இலக்கிய அறிவைப் பெருக்கிக் கொள்வது மாத்திரமல்லாமல், இந்தியாவிலுள்ள பிரதான மொழிகளின் இலக்கியங்களைப் பற்றியும் சிறிது சிறிது தெரிந்து கொள்ளும் வாய்ப்பையும் என்னைப் போன்று பிற மொழிப் படங்களுக்கு விளக்க உரை எழுதிப் பேசும் காரியாலய நண்பர்களின் வழியே பெற்று வருகிறேன்."

"இலக்கியத் தொடர்பிலே தங்களது மனத்தில் பசுமை பெற்ற நினைவுகள் யாவை?"

"என்னை எழுத்துத் துறையிலே வேரூன்றச் செய்த மதிப்புக்குரிய ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன் அவர்களை நான் முதன் முதலாகச் சந்தித்த நாள் என்றும் பசுமையாக என் உள்ளத்திலே தங்கி நிற்கிறது. கலைமகள்காரியாலயத்தில் 1942ல் (அச்சமயம் கலைமகளில் என் கதைகள் நான்கு, ஐந்து வெளியாகி யிருந்தன.) ஒருநாள் அவருடைய வருகைக்காக நான் காத்திருந்தேன். நாங்கள் இருவரும் அதற்கு முன்பு ஒருவரை ஒருவர் படத்தில் கூடப் பார்த்துக் கொண்டவர்கள் இல்லை. காரியாலயத்தின் வெளித் திண்ணையில் போடப்பட்டிருந்த பெஞ்சியில்உட்கார்ந்து, வருவோர் போவோர் முகங்களைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தேன். ஒருவராவது என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கடைசியில் கட்டுக் குடுமியும், நெற்றி நிறையத் திருநீறும், கதர் ஜிப்பா, அங்கவஸ்திரமும் அலங்கரிக்க ஒருவர் வந்தார். வாசலிலிருந்து வரும்போதே என்னைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே வந்தார். அருகில் வந்ததும் நின்று, "நீங்கள் யாரைப் பார்க்கவேண்டும்?" என்று வினவினார்.

"கி. வா. ஜ. அவர்களை," என்றேன் நான்.

உங்கள் அதிருஷ்டம் 1956க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால்செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami

SATNARAIN JYOTISH ASHRAM
(U.M.) NAKODAR (Pb.)

''நான்தான் கி. வா. ஜ. நீங்கள் யார்?'' என்று கேட்டார்.

''பம்பாயிலிருந்து வந்திருக்கிறேன். 'மாயாவி' என்ற பெயரில் உங்கள் பத்திரிக்கையில் என் கதைகள் சில வெளியாகியுள்ளன,'' என்றேன். ''மாயாவி!'' என்று ஆனந்தம் பொங்க என் கைகளைப் பற்றிக் கொண்டார். அந்த ஆதரவளிக்கும் கைகள் இன்று வரை என்னைக் கைவிட்டதில்லை. இனியும் கைவிடாது. அந்தப் பொற் கரங்களை நானும் என் சந்ததியாரும் பசுமையுடன் மனத்தில் இருத்திப் போற்றி வருவோம்.''

''உங்கள் இதயத்தைக் கவர்ந்த கதாசிரியர்கள், நாவலாசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் யார், யார்?—வெளிப்படையாகத் துணிந்து சொல்ல வேண்டும்.''

''இறந்தவர்களை விட்டு விட்டு, இருப்பவர்களிடையே சொல்கிறேன். சிறு கதைகள்: திரு. 'அகிலன்'–அவருடைய அழகிய நடையினாலும்; திரு. தி. ஜானகிராமன் – அவருடைய ஹாஸ்யம் கலந்த நடைச்சித்திரங்களினாலும்; திரு. லா. ச. ராமாமிருதம்–தனது ஒவ்வொரு வாக்கியத்தின் மூலம் எனக்கு ஒவ்வொரு கதைக்குக் கருத்தை அளிப்பதினாலும் என் இதயத்தைக் கவர்ந்துள்ளனர்.

நாவல்களில் திரு. 'தேவன்', திரு. 'சாண்டில்யன்' இருவரும் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள்.

பத்திரிகை ஆசிரியர்களுள், திரு கி. வா. ஜ. அவர்களைப் போல் என்னைக் கவர்ந்தவர் எவரும் இல்லை.''

''தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இன்றைய இலக்கியம் வளர்ந்துள்ளதென்று தாங்கள் நினைக்கின்றீர்களா?''

''ஆம்; வளர்ந்து கொண்டிருக்கிறது. இடை இடையே காளானைப்போல் தோன்றிக் கொண்டிருக்கும் ஒரு சில 'மஞ்சள் பத்திரிகை'களையன்றி, தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பத்திரிகையும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கும் ஒவ்வொரு வகையில் உதவி புரிபவைதாம்.''

''அமரர்கள் கல்கி, புதுமைப் பித்தன், கு. ப. ரா.–இவர்களிலே ஒவ்வொருவரைப் பற்றிய தங்கள் கருத்து என்ன? மூவரில் தங்களுக்குப் பிடித்தமான எழுத்து யாருடையது?''

''கல்கி–இன்றையத் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சிக்கும், தமிழ் எழுத்தாளர் வளர்ச்சிக்கும் நீரூற்றியவர். புதுமைப் பித்தன்–அஞ்சாமல் சமூகத்தின் இழுக்குகளுக்குச் சாட்டையடி கொடுத்தவர். கு. ப. ரா.–ஆடம்பரம் இல்லாத அதிசய சிருஷ்டிகர்த்தா. மூவருள்ளும் 'கல்கி' அவர்களின் எழுத்துக்களுக்கே நான் அடிமை.''

''ஆரம்ப எழுத்தாளர்களின் அறிமுகத்தை 'உமா'வில்தொடங்கியுள்ளோம். இது பற்றிய தங்கள் எண்ணமும், அவர்களின் வளர்ச்சிக்கு தாங்கள் கூறும் ஆலோசனைகளும் வேண்டும்.''

''மிகவும் அவசியமான முயற்சி. சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். ஆரம்ப எழுத்தாளரின் வளர்ச்சிக்கு என் அனுபவத்திலிருந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் நான் கூறும் ஆலோசனைகள் இவைதாம்: 'தமிழில் வெளிவரும் ஒவ்வொரு பத்திரிகையையும் படியுங்கள். படித்தவற்றைச் சிந்தியுங்கள். ஆனால் 'மாரீசத் தன்மை' உங்களை அடிமை கொண்டு விடாமல் ஜாக்கிரதையாக இருங்கள். தோல்வி மனப்பான்மை உதவாது. குழந்தை ஆயிரம் தடவை அடி சறுக்கிய பிறகுதான் நடக்கத் தொடங்குகிறது. வெற்றி தோல்வியைக் கவனியாமல் எழுதுங்கள்; எழுதிக் கொண்டே இருங்கள்'.''

''சென்னைத் தமிழ் எழுத்துலகத்திற்கும் பம்பாய்த் தமிழ் எழுத்துலகிற்கும் தங்கள் பேனா தரும்

மதிப்பு, தராதர எடை, கண்ணோட்டம் எப்படி?''

''சென்னைத் தமிழ் எழுத்துலகுக்குத்தான் நான் அதிகமான மதிப்பு அளிக்கிறேன். எழுத்தாளர்களின் எண்ணிக்கைக்கு பம்பாயை உள்ளங்கைக்குச் சமமாகவும், சென்னையை (அதாவது தமிழ் நாட்டை) பரந்த வானத்துக்குச் சமமாகவும் நான் மதிக்கிறேன். வானத்துத் தாரகைகளோடு உள்ளங்கையளவு வீசும் ஓரிரு தீபங்கள் போட்டி போட்டுவிட முடியாது.''

''பிறமொழிகளிலே 'விமரிசன இலக்கியம்' அடைந்துள்ள வளர்ச்சிக்குத் தமிழில் வளரவில்லை என்று நான் சொல்கிறேன். தங்கள் வாதம் யாது? விமரிசன இலக்கியம் வளர வழி என்ன?''

''நீங்கள் சொல்வது சரிதான். தமிழில் உண்மையான விமரிசன இலக்கியம் வளர வேண்டுமானால், பிற நாடுகளில் எழுத்தாளனுக்கு எத்தனை மதிப்பு இருக்கிறதோ, அத்தனை மதிப்பு தமிழ் எழுத்தாளனுக்குத் தன் நாட்டில் ஏற்பட வேண்டும். மனத்தில் தோன்றியதை வெளிப்படையாகச் சொன்னால், வாயில் மண்ணைக் கவ்வ வேண்டிய நிலை தமிழ் நாட்டில் நிலவும் மட்டும், விமரிசன இலக்கியம் இங்கே வளரவே முடியாது.''

''இன்றையப் பெண் எழுத்தாளர்களிலே தாங்கள் மதிப்புக் கொடுக்கும் பெயர் எதெது?''

''அநுத்தமா; ராஜம் கிருஷ்ணன்.''

'''மாயாவி' என்ற புனை பெயரை தாங்கள் வைத்துக் கொண்டது ஏன்?''

''இதற்குக் குறிப்பிட்ட காரணம் எதுவுமில்லை. நான் எழுதத் தொடங்கிய காலத்தில் எழுத்தாளர்கள் புனை பெயரைச் சூடிக் கொள்வது வழக்கமாக இருந்தது. அதையொட்டி நானும் 'மாயாவி' ஆனேன்.'' ★

உமா

அடுத்த இதழில்:

★

பேட்டி:
'சோமு'

என் முதல் கதை:
கேதாரி

எழுத்துலகில் நான்:
ஜீவா

ஏன் இந்தப் புனைபெயர்?
'மாறன்'

வாழ்க்கை வாழ்வதற்கே!
(ரேடியோப் பேச்சு)
ஜி. உமாபதி

இரு துருவக் கவிதை வரிசை:
மா. வரதராஜன்
ப. நா. கணபதி

கவிஞர் தரும் காட்சி:
ந. சஞ்சீவி

நவரஸ பாவங்களிலே நடிகைகள்:
பத்மினி – ராஜசுலோசனா
'பெனடிக்ட்'

பட உலகம்
என் கனவு:
எம். என். ராஜம்

சிறுகதைகள்:
நா. பார்த்தசாரதி
எம். கே. சீனிவாசன்
'நாவேந்தன்'
கே. எஸ். பி.; பூவை
ஜே. ஆரீஸ்; சுவாதி

சிவபெருமான் – பார்வதி நடனம் புராண ஏடுகளிலே விசித்திரமானதொரு திருப்பந்தான்! — ஆனல், இந்தப் பார்வதி – துரைராஜன் நடனம்....?

எல்லைச் சக்தி

'பூவை'

"விந்தையான விமரிசனம். ஆமாம்; உன் சிந்தை தடுமாருமல் பார்த்துக்கொள். உண்மையிலேயே நீ என்னைவிட ஆடலில் சிறந்தவளென்ருல், நீ சற்று முன் பெண்ணுள் ஆணுகிச் சூளுரைத்தாயே, அந்தச் சூளுக்கு – சவாலுக்கு – சபதத்துக்கு வெற்றி சொல்ல வேண்டுமென்ருல், நீ அந்தப் பார்வதியாகிவிடக் கூடாது. நினைவில் கிறுக்கி வைத்துக்கொள். உன் பேதை மனம் கிறுக்காகிவிடப் போகிறது, உஷார்! – சிவபிரானுல் சிந்தையொடுக்கப்பட்ட சக்தியாகி, தில்லையில் போய் எல்லைக்கல் பதித்துவிடக் கூடாது!.... நடன உலகம் அப்பால் உன் பெயருக்குப் பாரதம் பாடிவிடும்....! அது மட்டுமா? பரணியும் புனைந்துவிடுவார்கள். நிஜமாகவே உன் விமரிசனத்திலே விந்தை என்ற சொல்லை அடைமொழியாக்கிவிடாதே!.... போட்டியிடப் போகிறவனே தன் எதிர்க்கட்சிக்காரிக்குப் பாடம் படித்துக் கொடுக்கிருனே யென்று எண்ணி அப்படி உன் மீன் விழிகள் துடிக்கின்றனவோ?– சொல், உன் கண்களிடம்: நான் நாளை உன்னைச் சந்திக்கிறேன்–நடன அரங்கிலே! அல்ல, அல்ல!.... எல்லையிலாப் பெருவெளிக்கு எல்லை கிழித்துக் கிடக்கும் மயானத்திலே, சக்தியின் அகந்தை ஒடுக்கக் கால் மாறிக் குனித்துக் குழை நக்கிய பிஞ்ஞகனுக நாளை உன்னைச் சந்திக்கின்றேன்.... ஹ ஹ் ஹா!.... ஹஹ் ஹா!...."

"மறந்து விடாதீர்கள், உங்கள் சபதத்தை – சூளுரையை – வாதத்தை!.... நடன ரஸிகர்கள் தீர்ப்புச் சொல்லட்டும்; நாளை விடியட்டும். துரைராஜன் நடனத்தில் சிறந்தவரா? இல்லை, பார்வதி சிறந்தவளா? –அதோ, கைலையங்கிரியிலே, வெள்ளைப் பனிமலை மீதிலே–ஏன், அந்த அலகிலா விளையாட்டுடையானின் முகத்தில் கூட இந்தக் கேள்விகளுக்குப் பதில் பிரதிபலிக்கிறதே?.... என் மாதா பராசக்திகூடச் சொல்லாமல் சொல்லி என்னை ஆசிக்கிருளே, வெற்றி என் பக்கம்தானென்று! சந்திப்போம், நாளை!....ஹஹ் ஹா! ஹஹ் ஹா!.... இந்தப் பார்வதிக்குத்தான் வெற்றி, வெற்றி, வெற்றி!"

* * *

"இந்தத் துரைராஜனைச் சுட்டெரித்து, அவன் சாம்பலைப் பூசிக்கொண்டுதான் நிற்கப் போகிறேன். அப்பொழுதுதான் என் நாட்டியம் நிறையும். ஆமாம்; வெற்றி எனக்கேதான்! நான் பார்வதியல்லவா? என் அகந்தையை அந்தச் சிவனேகூட மாற்றவோ, மாற்றுக் குறைக்கவோ முடியாது. நான் பார்வதி!..."

"நிஜமாகவா?"

"ஆம்; என்னுடைய அன்னைசக்தியின் மேல் ஆணை.... இது மெய்யான சேதி, சகுந்தலா."

"அப்படியென்ருல், நீ சோமநாதனைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போகிருயா? உனக்கு நடனம் பயில்வித்த–உன்னைக் காதலித்த துரைராஜனைக் கைவிட்டு விடத் தீர்மானித்து விட்டாயா, பார்வதி?...."

"ஆமாம்; நூற்றுக்கு நூறு உண்மை. போட்டியாம்—போட்டி! நாட்டிய உலகம் என்னை வானளாவப் புகழ்கிறது; இந்தத் துரைராஜன் என்னை வாய்கொண்ட மட்டும் தூற்றுகிறான். பார்க்கிறேன்!.... இன்றைய நடனப் போட்டியிலே எனக்கேதான் வெற்றி!.."

"அப்படியென்றால், உன் மலர் மாலை...?"

"சோமநாதனின் அழகுக் கழுத்துக்கேதான்!"

* * *

"சபாஷ், நீலகண்டா! உன் புத்திசாலித் தனத்துக்கு யாம் பெரிதும் மெச்சினோம். இந்தா, பிடி உத்தரீயத்தை!"

"நான் தப்பித்தேன், துரை. அந்தி நெருங்குகிற தல்லவா? தில்லையிலே கல்லுருவாகச் சமைந்து நிற்கச் சபித்த அந்த ஒரிஜினல் பிராணாகவே நீ வடிவெடுத்து, ஒரு சாபம் இட்டது போதாதென்று, எங்கே என்னையும் வேறு சபித்துவிடப் போகிறாயோ என்று உயிர் நடுங்கிப் போனேன். நல்லவேளை, நான் தப்பித்தேன், பிழைத்தேன்!"

"அஞ்சேல்...."

"அபயம்!"

"பேஷ், பேஷ்!"

"சோமநாதன் வாயில் மண் போட வேண்டும்!"

"அதை நான் ஏன் சொல்ல வேண்டும்? என் வாயில் நீ சர்க்

கரையைப் போட்டு விடுவாயல்லவா ....?''

'' ஓ ....!''

''நண்பா, வெற்றி எனக்கேதான். தீட்டிய இடத்திலேயே பதம் பார்க்கக் கனவு காண்கிருள் பேதை பார்வதி. எனக்கு வெறி ஏறுகிறது—அது புகழ் வெறி; கலை வெறி! நான் பயில்வித்தேன். அவள் புகழ் பெறட்டும்; ஆட்சேபணம் ஏதும் எனக்குக் கிடையாது. ஆனாலும், பெண் பிறவிக்கு அகந்தை கூடாதல்லவா? பார்க்கலாம், யாருக்கு வெற்றி என்று ....! தமிழ்க்கலைக் கூடம் இன்று இரவு வழங்கப் போகும் தீர்ப்பைக் கண்டு உலகம் மூக்கில் விரலை வைக்கப் போகிறது. அவளுடைய விசிறிகளுக்கு உண்மையான விசிறிகள் தேவைப்படத்தான் போகின்றன.... நீலகண்டா, நல்ல காலம், அந்த சிவசக்தி நடனத்தை எனக்கு நீ நினைவு படுத்தினய்!''

'' ஆமாம் ....''

''வெற்றி இந்தப் பார்வதி கொழுநனுக்கேதான்!''

''என்ன, பார்வதி கொழுநனு?'',

'' ஆம்; சிவன் என்று அர்த்தம்!''

'' ஓஹோ!''

* * *

'' ஆஹா, அற்புதம்!.... தாம் தித்தாம், தை தத்தை! — வெகு நேர்த்தி!....''

'' சிவபிரானும் பார்வதியுமே நேரில் பூலோகத்துக்கு விஜயம் செய்து விட்டார்களா, என்ன? ஆஹா! தேவர்கள், நாரதர், இன்னரர்! மயானத் தாண்டவம் ...!''

'' அதோ, சிவனுக்கு வெறி மூண்டு விட்டதே....?''

"பார்வதியின் பாதங்களிலே எத்தகைய இந்திர ஜாலம்! என்ன குழைவு! ஸ்வரஜதியில்தான் எத்துணை ஜீவன், கற்பனை!"

"தன்னை மறந்த லயம் என்கிறார்களே, இதுதானா? சிவனுக்கும் போட்டி வெறியா? சக்தியைத் தோற்கடிக்கச் செய்யும் சாகஸமா? ஆ, குழை நழுவி விட்டதே?"

"சங்கரியின் கண்களிலே ஏன் இந்தக் கலக்கம்?.... சக்திதான் பெரிதா?...."

"ஆஹா, அதோ, ஆதி கால் தூக்கி ஆடி அந்தக் குழையைப் பாதத்தால் எடுத்துக் காதில் அணிந்து கொள்கிறாரே?"

"சக்தி தோற்று விட்டாள்! அவள் பெண்தானே? அவளால் அப்படி முடியுமா, பாவம்?"

"ஐயா. ரசிகரே? அதோ பாரும், சிவனுக்குப் போட்டியாக சக்தி காலைத் தூக்கி ஆடிவிட்டாள்....! சக்திதான ஜெயித்தாள். அவள் எங்கள் இனமல்லவா?..."

"ஆ!"

"ஐயோ, அக்ரமம்! புராணம் ஏடு திருப்பப்பட்டு விட்டதா?"

"ஊழி தொடங்கி விட்டதோ?"

"நடனத்திலா?"

"இல்லை, நடப்பு உலகத்துக்கு."

"விசித்திரமான புராணக் கற்பனை!"

"அதிசயமான போட்டி!"

"அர்த்தமில்லாத காதல்!"

"அற்புதம்!"

"மோசம்.... படுமோசம்!"

* * *

"நீ பெண் அல்ல!.... பேய்! காளி! இவ்வளவு பெரிய ஜனக் கூட்டத்திலே நீ அந்தப் பயலுக்குப் போட்டியாகக் காலை தூக்கிச் சமமாக நடனம் ஆடி விட்டாயே? நிருத்ய ஆசிரியரின் மகனை நானா—இந்தச் சோமநாதனா இனி உன்னை ஏறெடுத்துப் பார்ப்பேன்? அது வெறுங்கனவு. சிவபிரானுடன் போட்டியிட்டுத் தோற்ற அந்தக் கல்லழகி—எல்லைச் சக்தி கூட உன்னுடைய இந்தத் துணிச்சலைக் கண்டு தலை கவிழ்ந்திருப்பாளே? நீ பெண்ணா? நீ காளி!... மகா துர்க்கை!........ ஓடு, திருவாலங்காட்டை விட்டுத் தில்லைக்கு ஓடு!...."

"ஆண்மையுள்ள ஆணழகரே, நிறுத்துங்கள் உங்கள் சொற்பொழிவை. நான் பெண்; அசல் தமிழ்ப் பெண். உலகம் தெரிந்தவள்தான் நான். அந்தத் தில்லைச் சக்தியா நான், அப்படிக் கால் தூக்கி நடனம் ஆடாமல் இருக்க? நான் பார்வதி அல்லவா? பார்வதி ஒரு நாளும் அந்த துரைராஜனுக்குத் தோற்றவள் அல்ல! ஞாபகம் இருக்கட்டும், மிஸ்டர் சோமநாதன். தாங்கள் இனி என்னை ஏறெடுத்துப் பார்க்கவே வேண்டாம்; கண்களை மூடிக் கொண்டு ஜபம் செய்யுங்கள். நீங்கள் கண்ணை மூடுவதற்குள்

எவளாவது ஓர் அபலை வந்து உங்கள் கண்களைத் திறப்பாள்....''

''வார்த்தைகள் அளவுக்கு மிஞ்சிக் கனம் பெறுகின்றன. அப்படியென்றால், நடன நாடகம் என்ன ஆவதாம்? அதன் உயிர்க் கருத்து என்ன ஆவதாம்?''

''அது தூசுக்குச் சமானம். சிவனுக்கு அந்தச் சக்தி தோற்றிருக்கலாம். இந்தப் பார்வதி நடனத்தில் எவனுக்கும் சளைக்க மாட்டாள்; தோற்கமாட்டாள்; என் சபதம், சூளுரை, வெற்றி பெற்று விட்டது. நான் நடன ராணி பார்வதி!....''

''இந்தப் பதிதையின் நிழல் பட்டாலே நமக்குப் பாவம்....வாருங்கள், அப்பா!....''

''ஓடுங்கள்!.... இல்லையென்றால், உங்களைச் சபித்துவிடுவேன். உள்ளத்தைப்புரிந்துகொள்ளத்திராணியில்லாத-நடனத்தின் ரகசியத்தை அறிந்துகொள்ள மூளை இல்லாத நீங்கள் எங்கள் தமிழ் நாட்டுக்குத் தேவையேயில்லை. ஆனல் ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்: இந்தப் பார்வதி பண்பை உயிராகக் காக்கும் தமிழ்ப் பெண்.''

* * *

''பார்வதி, நடனத்திலே நான் தோற்றேன் என்றே வைத்துக் கொள்; நான் வருந்தமாட்டேன்... ஆனல், நான் போட்டியிலே வெற்றி பெற்றுவிட்டேன். தோற்றவன் வெற்றி பெற்ற கதைதான் இங்கேயும் நடக்கிறது. எப்படியோ, என் நாடகம் பலித்துவிட்டது.... ஆமாம்; காதல் போட்டியிலுங்கூட நான்தான் உனக்குச் சமம்?.... இந்தத் துரைராஜன் அந்தச் சோமநாதன் அல்லவே?...''

''அன்பரே, என்னை எல்லைச் சக்தியாக ஆக்கத் தீர்மானித்துவிட்டீர்கள் போலும்!.... நான் தமிழ்ப் பெண் பார்வதி!.... நீங்கள் எனக்கு நிழல் தர விரும்பினல், அது என் பூஜாபலன்தான்!'' ★

'உமா'வின் முதல் விருந்து:

ஏப்ரல் முதல் தேதி

வெளிவருகிறது!

புதுமை கொழிக்கும்

சிறந்த நவீனம்

(முன்னுரை: பி. எம். கண்ணன்)

O

விலை அணு எட்டு

விற்பனையாளர்கள் தேவைப்படும் பிரதிகளுக்கு 25% கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். தனிப்பிரதி வேண்டுவோர் பத்தணு தபால் தலைகள் அனுப்பவேண்டும்.

O

விவரங்களுக்கு:

'உமா வெளியீடு'

தபால் பெட்டி எண் 1377,

4/32, தாதா முத்தியப்பன் தெரு,

சென்னை-1

ஆரம்ப எழுத்தாளர் வரிசை :

ஆடி வெள்ளி

ஆர். ஸி. மணி

'ஆடி வெள்ளி'யில் வாழ்க்கையின் விளக்கம் கதை சொல்கிறது. மனோதத்துவத் திருப்பம் கதையை முடிக்கிறது. திரு மணி விரைவிலேயே 'வித்துவான்' ஆகி விடுவார். 'சுவாதி' என்ற புனை பெயரையும் சூடிக்கொள்ளுகின்றார்.

வாழ்க்கையைப்பற்றி—அதன் புதிர் விளக்கத்தைப் பற்றி—எத்தனையோ கதைகளை நான் இதற்குமுன் படித்தது உண்டு. ஆனால், அந்தச் சம்பவம் – ஏன், அந்த ஆடி வெள்ளி–உண்மையான கதையாக, நடந்த கதையாகவல்லவா என்வரைக் காட்சியளிக்கிறது....!

வேலையின் நிமித்தம் இமய மலைச் சாரலில் உள்ள டார்ஜிலிங்கில் குடியேறிய நான், எனது குடும்பத் தொல்லை காரணமாக மிகவும் கஷ்டப்பட்டேன். பணத்தைக் கொடுத்தாலும் பண்டங்கள் சரியாகக் கிடைப்பதில்லை.

இப்படி ஒரு நாளா, இரண்டு நாளா? – மாதங்கள் பல! அப்போதுதான் எங்கிருந்தோ ஒரு வாலிபத் துறவி வந்தார்; எங்களுக்கு உதவினார்.

இதுதான் நடந்த கதை.

அன்று ஆடி வெள்ளி. என் மனைவி சாவித்திரி ருசியாகச் சமையல் செய்திருந்தாள். எதிர்பாராத விதமாய் துறவியாரும் அன்று வீடு வந்து சேர்ந்தார். அவரைச் சாப்பிடக் கூப்பிட்டேன். அவர் சாப்பிட மறுத்துவிட்டார். ''வெள்ளி எனக்கு வேதனை தரும் நாள்!'' என்று கூறிவிட்டுச் சென்று மறைந்துவிட்டார். அதற்கப்புறம் மீண்டும் அவர் வரவே இல்லை. அவர் எங்கு போனாரோ? அந்த இளந் துறவியின் பாக்கிக் கதை என்னவோ?....

துறவி மறைந்த ஒருவாரத்தில் என் தகப்பனாருக்குக் கடுமையான ஜுரம் என்று கடிதம் வந்தது. நானும் என் துணைவியும் எங்கள் ஊரான தஞ்சைக்கு வந்து சேர்ந்தோம்.

அன்று கடைசி ஆடி வெள்ளி. எங்கள் வீட்டில் மிகுந்த தடபுடலாக ஆராதனைகள் நடந்து கொண்டிருந்தன. சாப்பாட்டு வேலை நெருங்கிக்கொண்டிருந்தது. எல்லோரும் சாப்பிடச் சென்று விட்டார்கள். ஆனால், வயதான ஒருவர் மட்டும் சாப்பிடச் செல்லவில்லை. அவரிடம் சென்று ''வாருங்கள் சாப்பிட....'' என்று கூப்பிட்டேன். மறுத்தார். அதற்குள் என் தாயார் வந்து, ''அவருக்குத் தொந்திரவு கொடுக்காதே; வெள்ளிக்கிழமையில் அவர் சாப்பிடுவதில்லை...'' என்று சொன்னாள். 'சரி' என்று சொல்லிவிட்டு நான் போய்விட்டேன். ஆனால், அந்த 'வெள்ளிக்கிழமை' என்ற வார்த்தை என் நெஞ்சில் சிறிது சலசலப்பை ஏற்படுத்திவிட்டது; அந்த இளந் துறவியும் 'வெள்ளி வேதனை தரும் நாள்' என்று கூறினாரே....?

ஆடி வெள்ளி!—என் மனத்தில் இந்தச் சொல் பல தடவை எதிரொலித்துக் கொண்டிருந்தது.

மாலைப்பொழுது. உலகத்துக்கு ஒய்வுப் பொழுதை நினைவூட்ட அந்திச்சூரியன் தன் வெம்மைக் கதிர்களுக்கு 'பனிக்கட்டி ஒத்தடம்' கொடுத்துக் கொண்டிருந்தான்.

காப்பி கொண்டு வந்து கொடுத்தாள் என்னை ஈன்றவள்.

''அம்மா, அந்த மனிதருக்கும் ஆடி வெள்ளிக்கும் என்ன சம்பந்தம்?.... மனிதனின் வாழ்க்கைப்

புத்தகத்தையே ஏடு திருப்பச் செய்யும் சக்தி படைத்தது அந்த ஒருநாள் என்ருல், அதை என்னிடம் சொல்லேன், அம்மா...!'' என்று நான் மன்ருடிக் கெஞ்சினேன்.

என் அன்னே தந்த வரலாறு இது தான்: என் நடையில் மேற்படி வரலாற்றைக் கதையாக வடித்துத் தருகின்றேன்.

கீழையூரிலேயே பெரிய பணக்காரர் ஸ்ரீமான் மூர்த்தி. அவருக்கு ஒரே பிள்ளை. பெயர் கணபதி. செல்லமாக வளர்த்துப் பட்டணத்தில் எம். ஏ. படிக்க வைத்தார். பையனும் நன்ருகப் படித்துப் பட்டமும் பெற்ருன். ஆனல்....?

அவன் கொஞ்சம் கொஞ்சமாக மனித சமுதாயத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருந்தான். நல்லது, கெட்டது எதிலும் சேருவதில்லை. பாவம், சதா சிந்தனையிலேயே லயித்திருந்தான்.

பெற்ருேர்கள் மிகவும் பயந்தார்கள். ஜோசியர், வைத்தியர், மாந்திரியர் முதலானேர் அந்த வீட்டிற்கு வரத் தலைப்பட்டார்கள். அவன் இதைப் பற்றி 'என்ன, ஏன்?' என்றுகூடக் கேட்கவில்லை.

ஊரிலுள்ளோர் அவனுக்குச் சித்தப்பிரமை என்ருர்கள். ஒரு சிலர் கல்யாணம் செய்து வைத்தால் சரியாகிவிடும் என்ருர்கள். அவனது தந்தை அவனுக்கு கல்யாணம் செய்து வைத்துவிடுவதென முடிவு கட்டினர். பக்கத்துக் கிராமத்தில் உள்ள பெரிய மிராசுதார் ஒருவரின் பெண்ணை நிச்சயம் செய்தார்.

கல்யாணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே பிள்ளை வீட்டுக்காரர்கள் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று விட்டார்கள். மாப்பிள்ளை அழைப்பு தினம் நெருங்கியது. அப்பொழுதுதான் திடீரென அந்தச் சம்பவம் ஏற்பட்டது.

மாப்பிள்ளையைப் பார்ப்பதற்காகப் பெண் வீட்டிலிருந்து வந்தார்கள். அவன் யாருட்னவது பேச வேண்டுமே!.... ஊஹும், கிடையாது! பெண் வீட்டார்களுக்கு இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

ஊர் வாய்க்கு என்ன கேடு?.... வெறும் வாய்க்கு அவல் கிடைத்தால் போதாதா?

இவர்கள் பேசுவது கல்யாணப் பெண்ணின் காதுகளுக்கு எட்டி விட்டது. அவள்—சகுந்தலா அழுதாள்.

கலியாணப்பெண் தன் தம்பியைக் கூப்பிட்டாள். ஒரு கடிதத்தைக் கொடுத்து, ''இதை மாப்பிள்ளையிடம் உடனே கொண்டு போய்க் கொடு,'' என்று உத்தர விட்டாள். மாப்பிள்ளையிடம் கடிதம் சேர்க்கப்பட்டு விட்டது.

ஆடி வெள்ளி கதை சொல்ல, அவர்கள் கேட்கிருர்கள்....!

அவன் கடிதத்தைப் படித்தான். உண்மையாகவே இப்பொழுது தான் சித்தப் பிரமை அடைந்து விட்டவன் போல் இருந்தான்.

"ஐயா, நமஸ்காரம். உங்களை எப்படி அழைப்பது என்றுகூடத் தெரியாத இக்கட்டான நிலையிலிருக்கிறேன். தங்களை மணக்கப் போகும் அபலைதான் இக்கடிதத்தை எழுதுகிறேன். தங்களுக்குச் சித்தப்பிரமை யென்றும், இனந்தெரியாத ஏதோ வியாதி என்றும் பலவாறு சொல்கிருர்கள். தாங்கள் மட்டும் அதனுல் கஷ்டப்பட்டால் போதாதா? கல்யாணம் செய்து கொண்டு தாங்கள் படும் அவஸ்தையைப் பேதைப் பெண்ணுன நானும் படவேண்டுமா? இந்தக் கல்யாணம் அவசியந்தானு? யோசித்து முடிவு செய்யுங்கள்.... உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு!

அபலை,
சகுந்தலா."

அன்று வெள்ளிக்கிழமை!

மாப்பிள்ளை அழைப்பிற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஆனுல், மாப்பிள்ளை அங்கிருந்தால் தானே....?

காலம் கடிது சென்றது. அவனது பெற்றேர்கள் ஊர் ஊராக அவனைத் தேடி அலைந்தார்கள். தகவல் இலலை. அச்சமயம் அவர்களுக்கு ஒரு கடிதம் டில்லியிலிருந்து வந்தது.

"க்ஷேமம்.
கணபதி."

இந்த ஒருவரிக் கடிதம் மட்டுமே வந்தது. அக்கடிதத்தில் அவனுடைய இருப்பிடத்தின் விலாசம் கூடக் குறிக்கப்படவில்லை.

இந்தச்சம்பவம் நடந்து வருஷங்கள் எத்தனையோ ஓடிவிட்டன. அந்தக் கணபதியைப் பற்றிய தகவல் எதுவுமே அப்புறம் அந்தப் பெரிவருக்குக் கிடைக்கவில்லையாம்! அதிலிருந்து வெள்ளி என்ருல் வேதனைதானும்....! ஆம்; இந்தப் பெரியவர்தான் அந்த இளந் துறவியின் அப்பாவாம்!

அவனுக்குப் பெண்கள் என்ருலே வெறுப்பு போலும். அதனுல்தான் அவன் மறுபடியும் கலியாணமே செய்து கொள்ளவில்லையாம்.......! அவன் மனத்தில் ஏற்பட்ட அதிசயமான விரக்தி மனப்பான்மை தான் காரணமாம். ஒருவேளை எல்லாப் பெண்களுமே அந்தச் சகுந்தலா மாதிரியே சுயநலம் மிகுந்திருப்பார்கள் என்ற அச்சமோ, என்னவோ!

நான் பெருமூச்சு விட்டேன். என் உதடுகள் முணு முணுத்தன. உலகம் விந்தை உருண்டை; மனித மனங்களும் விந்தைக் கோளங்களாகத்தான் சுழல்கின்றன.

அன்று ஆபீசுக்குப் போனவன், மத்தியான்னமே வீடு திரும்பி விட்டேன். தலைவலி பொறுக்கவில்லை.

அப்பொழுது என் உயிர்த் துணைவி சாவித்திரி என் அம்மாவிடம் மெல்லப் பேசிக் கொண்டிருந்த பேச்சு என் காதுகளில் கேட்டது: "மாமி! நீங்கள் அந்தப் பெண் பெயரை சகுந்தலா என்று மாற்றிச் சொன்னீர்களோ, நான் தப்பித்தேனே? அந்தத் துறவியே தான் என்னுடைய கணவராக வாய்க்கவிருந்த கணபதி என்ற ரகசியத்தை இவர் அறிந்தால், ஒருவேளை என் சுயநலத்தை—நான் அன்று அவருக்குக் கடிதம் எழுதி அவர் மனசை மாற்றிய நிலையைத் தவருகப் புரிந்து கொண்டாலும் கொள்வார். ஆண் மனங்களின் விசித்திரத்தை நம்மால் அறிந்து கொள்ளவே முடியாது. ஆமாம்; என்வரைக்கூட அந்த ஆடிவெள்ளி மறக்க முடியாத நாளேதான்....! என் வாழ்விலே ஆனந்தத் திருப்பத்தைத் தந்தவர் அவரேயல்லவா? அவர் இல்லையென்ருல், எனக்கு உங்கள் மருமகளாகும் பாக்கியம் எப்படிக் கிட்டியிருக்க முடியும்? அவர்—கணபதி—அந்தத் துறவி என் கூடப் பிறவாத சகோதரர்!"

அடித்து வைத்த சிலையாக எத்தனை மணி நேரம் நான் நின்றேனே, யாருக்குத் தெரியும்? ★

ஆஹுதி

லா. ச. ராமாமிருதம்

யாவதையும் உற்பவிப்பவனும், எல்லாவற்றையும் ஆள்பவனும் இயற்கையை அதன் அநந்த கோடி சாயைகளுடன் தன் இடது கைச் சுண்டுவிரலில் சுற்றியவனும், எல்லாவற்றிலும் எல்லாமாயும், எல்லாவற்றிலிருந்து ஒதுங்கியவனும், கிருபா சமுத்திரமாயும் சம்ஹார மூர்த்தியாகவும், நிர்க்குணனையும், இல்லாமலே இருப்பவனையும், சகல ஜீவாதாரனும், சர்வ லீலாகாரனுமான ஆண்டவன், ஒய்வு ஒழிவற்று நடத்தி வரும் பிரபஞ்ச ஆராய்ச்சியின் கதியில் அழகானதோர் இதயத்தைச் சிருஷ்டித்தான். பல லக்ஷிய குணங்களை அவ்விதயத்தின் உள்ளும் மேலும் சாறு பிழிந்தான்.

ஆண்டவன் அவ்விதய உருண்டையைக் கையில் தாங்கி அதன் வேலைப்பாடுகளை வியந்தபடி அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கையில், அது நகையைப் போல் மின்விட்டது.

ஆனால் அதையே எவ்வளவுநேரம் அழகு பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அவனுக்கு க்ஷணப்போது ஒய்வு ஏது? அதற்குள் எத்தனை ஜீவன்கள் பிறக்கவும், சாகவும், உய்யவும், விசுவகர்ப்பத்தில் காத்துக்கொண்டு, அந்தப் பொடிநேரத்துள் யுகவேதனையைப் பட்டுத் துடித்துக்கொண்டிருக்கின்றன? அந்த நினைவிலோ, அகஸ்மாத்திலோ, அவ்விதயம் அவன் விரல்களிலிருந்து கீழே நழுவியது. அண்ட கோசங்களின் அகண்ட வேகச்சுழலில் அகப்பட்டுச் சுழன்றுகொண்டே ககன வழிக் கீழிறங்கிச் செல்கையில், குனிந்து அதை எட்டிப் பிடிக்கவும் அவனுக்கு நேரமில்லை. க்ஷணந் தடைப்பட்டாலும், யுகப்பிரளயமாய் வீங்கிப்போன தன் கர்மாவைப் பின் தொடர்ந்து பிடித்து நிறைவேற்றுவதில் கவனந் திருப்பிக்கொண்டான். அவன் பெருமூச்சே பெரும் புயலாய் அதைக் கீழே தள்ளி அடித்துக்கொண்டு போயிற்று.

லட்சியமான லக்ஷணங்களாலாகியும், நிர்க்கதியாய்ப் போன அவ்விதயம் தன்னுருவைத் தானே தேடிக்கொள்ளும் நிலையை அடைந்து அண்டகோசங்களின் கனவேகமான கடையலில் முடங்கி அழுந்தி, ஜனனப் பிரவாகத்தில் தானும் ஒரு முளையாய் முளைக்கத் துடிக்கும் வித்தாகி, விசும்பின் வழி சுழன்றுகொண்டே பூமியில் இறங்கி, ஆங்கு அடர்ந்ததோர் காட்டில் ஓர் அருவியின் அருகில் மரநிழலில் புற்றரையில், நான்கு கால்களையும் நீட்டிப் படுத்துப் புதுப்பிறப்பில் தவித்துக்கொண்டிருக்கும் ஒரு காராம்பசுவின் கருவை யடைந்தது.

தன் கருவில் திடீரென நேர்ந்த புரட்சியை அத் தாய் உணர்ந்தது. புரியாதவொரு புது கனம் அதன் வயிற்றை அழுத்தியதும், பயமும் வேதனையும் பொறுக்காமல் வீரிட்டது. அந்த நாபி அலறல் காற்றில் மோதியதும் ஆகாய வெளியில் கற்பகற்பங்களாய் மௌனாகாரத்தில் நீந்திக்கொண்டிருக்கும் நாத பிந்துக்கள் உடைந்து எதிர் அலறின. மரத்தின் இலைகள் அசைவு கெட்டு நின்றன. பூமியின் அசையும் நின்று மறுபடியும் துவங்கியது. ஓரிரு மலைகள் எங்கோ நிலை குலைந்து தலை கவிழ்ந்தன. பூகம்பம் உண்டானது.

இத்தனை கோலாகலத்துடன் அவ்வித்து உருவாகி, உயிராகி வெளிப்பட்டு, தாயின் வயிற்றை உதறிக்கொண்டு, பூமியில் தானும் ஒரு தனியாகி விழுந்ததும், விழுந்த கன்றை நக்கிக் கொடுக்கக்கூட அதன் தாய்க்குச் சக்தியில்லை. ஆனால் ஈசுவரனுக்கே ப்ரீதியான அதன் பால், தாய்மையின் மகிமையில், அந்த ஈசுவரனுக்கும் கிட்டாத இனிப்பை யடைந்து, மடி புரண்டு அருவியாய் ஓடிப் பூமியை நனைத்தது. அந்த மஹாப்பிரசவத்தில், அந்தத் தாய் விழுந்துகிடந்த புற்றரையில், பச்சைப் புற்களின் நுனிகளில் பால்த் துளிகள் முத்து மகுடங்கள் கட்டி நின்றன.

அருவியும் பாலாய் ஓடிற்று.

கன்று மண்டியிட்டே நகர்ந்து நகர்ந்து வந்து, மடியில் தலையை முட்டி முட்டி, காம்புகளைப் பச்சை வாயால் பற்றியதும், தாய் அந்த இன்பத் தவிப்பில் மூர்ச்சை ஆயிற்று.

ஆனல், அதற்குப் பிறகு வெகு நாள் அந்தத் தாய்க்கு உயிரோடிருக்க முடியவில்லை. அது ஈன்ற வித்து அதன் கருப்பையைவிட மிகமிகப் பெரியதாய் இருந்தபடியால், அதன் வயிறு உள்ளே நார் நாராய்க் கிழிந்திருந்தது. தன் கன்று தானே ஒரு புல்லைத் தன் வாயில் அதுக்கிக் கடிக்க அதற்குச் சக்தி வரும் வரை, தாய்ப்பசு தன் உயிரைத் தன்னோடு கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தது.

பிறகு ஒரு நாள், உயர்ந்த கரைகளின் நடுவில் புரண்டு ஓடும் காணற்றில் தண்ணீர் குடிக்கத் தாய்ப்பசு மெதுவாய் இறங்கி ஜல விளிம்பின் மேல் தலை குனிகையில், குளம்பு பாசியில் வழுக்கி விட்டது.

'' அ-ம்-மா....!''

கரைமேல் மேய்ந்து கொண்டிருந்த கன்று, காற்றின் அலைகள் தாங்கி வரும் அவ்வபயக் குரலைக் கனவில் கேட்டதுபோல் கேட்டுத் தலை நிமிர்ந்து தன்னைச் சுற்றிலும் ஒரு முறை நோக்கியது. ஆனல் அது என்னென்று புரிந்து கொள்ளு முன் அதன் தாயின் தலைச் சுழிமேல் வெள்ளம் சுழித்து விட்டது. தொட்டிலை ஆட்டிக் குழந்தையை நினைவு மறக்கடிப்பது போல், மெல்லிய காற்றில் மரங்கள் மெதுவாய்ச் சாய்ந்தாடின. செழித்து ஓங்கிய கோரைப் புற்கள் பூமிமேல் திரை ஆடினாற் போல் காற்றில் படபடத்து மிதந்தன.

கன்று குனிந்து மறுபடியும் சாவதானமாய் மேய ஆரம்பித்தது.

அதன் எந்த அங்க அசைவிலும் அதனுல் அழகாயும் கம்பீரமாயும் இல்லாமல் இருக்க முடியவில்லை.

குனிகையிலோ, நிமிர்கை யிலோ, தலையை ஆட்டுகையிலோ, கழுத்தைத் திருப்பி, நீண்டு சுருளும் நாக்கால் தன் உடம்பை நக்கிக்கொள்கையிலோ, அல்லது தன்னைச் சூழ்ந்த காட்சியைச் சிந்தித்த மாதிரி அசைவற்று வெறுமென நிற்கையிலோ—அதன் எந்த அங்க அசைவிலும் அதனுல் அழகாயும், கம்பீரமாயும் இல்லாமல் இருக்க முடியவில்லை.

சீக்கிரமே அது தன் முழு வளர்ச்சியை அடைந்து விட்டது. அவ்விடத்தின் செழுமையோ, அதன் தாய்ப்பாலின் மகத்துவமோ, அதன் மகிமை தானு, அதனின்று வெளிப்பட்டு அதனைச் சூழ்ந்த காம்பீர்யத்தின் மத்தியில், அது நடு நாயகமாய்ப் பிரகாசித்தது. அதன் தோற்றத்தை வெறும் கம்பீரம் என்று மாத்திரம் முடிப்பதில் முழுமையில்லை. அதற்கு ஒரு தனி சமூகம், ப்ரஸன்னம், விலாசம் இருந்தது. வெள்ளமோ, தீயோ பரவி வருகையில், தாம் பரவும் இடத்தை வெறுமென அழித்துக் கொண்டு மாத்திரம் வருவதில்லை. தம்முடையதே ஆக்கிக் கொண்டு விடுகின்றன. அம்மாதிரி, அக்காளை, தான் புழங்கிய இடத்தை, தான் என்ற அறிவோ நினைவோ இல்லாத தன் தோற்றத்தினுலேயே அத்துடன் இழைந்து தன்னுடைய தாக்கிக் கொண்டு விட்டது.

வயிறு புடைக்க மேய்ந்து விட்டு, அந்தி வேளையின் செஞ்ஜோதியில் தானே வேள்விக் குண்டத்திலிருந்து சரிந்ததோர் பெரியதோர் கொள்ளி போல் பிரகாசித்துக் கொண்டு குன்றுத் தொடர்களுக்கிடையில் அடிவானத்தைப் பொக்கை வாயில் மென்று குதுப்பிக்கொண்டே, மெதுவாய்ப் புதையும் சூரியனை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தபடி, அத்தனை தாவரங்களிடை தான் மாத்திரம் தனி நடை உயிராய் லயித்து நிற்கையில், அம்மரங்களும் புல்வெளிகளும் நடுவில் உருவிய ஜரிகைபோல் ஓடும் அருவியும் செவ்வானமும் குன்றுத் தொடர்களும் எல்லாமே அதற்கெனவே, அது காணுமுறையில், அதன் ராஜ்யமாய் விளங்கின.

அம்மாதிரி வேளையில் அவ்விடம் எப்பவுமே சூழ்ந்த மௌனுகாரம் ஒரொரு சமயம், தாய் விலங்கு தன் குட்டியைக் கவ்வுவதுபோல், அதன் அகண்டவாயில் அதைக் கவ்வுகையில், காளையின் இதயத்

டாக்டர்: "உங்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை தேவை. 'ஆரோக்கியமாக வாழ்வதுஎப்படி?' என்ற புத்தகம்புதிதாக வெளி வந்திருக்கிறது. அதை அவசியம் வாங்கிப் படியுங்கள். பலன் கிடைக்கும்!"

நோயாளி: "அதை எழுதியது நான் தானே, ஸார்!"

தில் அதற்குப் புரியாத சாயா ரூபங்கள் தோன்றின. தலையை உதறிக்கொண்டு, உடலை நெறித்து, ஒன்றும் புரியாமல், இளமையின் களியில் வெகு வேகமாய், நாலு கால்ப் பாய்ச்சலில் ஓடுகையில் அதன் குளம்புகள் தவறற்ற தாளத்தில் பூமியில் பட்டுப் பட்டெழும் போது, யௌவனத்தின் ஜய பேரிகை முழங்கிற்று. நிமிர்ந்து வளைந்து நிமிர்ந்த வால் நுனியின் குஞ்சம் கொடி பறந்தது. அந்த உன்மத்தத்தோடேயே ஓடி வந்து ஒரு மரத்தை முட்டிற்று. கிழ மரம் உடல் முழுவதும் புல்லரித்துக் கிளைகள் குலுங்கின. ஆனந்த பாஷ்பத்தில் புஷ்பங்களும் இலைகளும் உதிர்ந்தன.

அந்தக் களிவெறி இன்னும் கலையாமலே, காளை அப்படியே திரும்பி 'திடுதிடு'வென பூமியதிரச் சறுக்கிக் கொண்டே வேகமாய்க் கானுறில் இறங்கியது. நுரை கக்கிச் சுழித்தோடும் ஜலத்தைக் கிழித்துக் கொண்டு எதிர் நீச்சலில் பிரவேசித்து வெள்ளத்தைக் கலக்கி நன்கு துளைத்த பின், தலையை உதறி, உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு எதிர்க்கரைக்கு ஏறுகையில் இருபக்கங்களிலும் ஜலஸ்படிகங்கள் விசிறி உடைந்து பூமியில் சிதறின. மேனி மின்னிற்று. கல்லுருண்டை போன்ற திமில்மேல், அழகுகள் புடைத்து வழிந்து விளையாடின. சிந்தாத தன் ஆண்மையின் தூய்மையில் அது ரிஷிகுமாரன் போல் ஜ்வலித்தது. நீண்ட கொம்புகள் அஞ்சலியில் எழுந்த கைகள் போலும் ஒன்றையொன்று நோக்கி வளைந்தன.

கரைமேல் ஓங்கிய ஓர் அரசின் கீழ் அது சாய்ந்து படுத்து, அது தன் அசையை மெல்லத் துவங்கிற்று. எதிர் விரிந்த புல்வெளிகளின் மேல் படர்ந்து சாயும் இரவில் குன்றுத் தொடர்கள் ஓங்கித் திமிர்த்து நின்றன. அவைகளின் உச்சிகளில் நட்சத்திரங்கள் தங்கிக் களைப்பாறின. காளை கண்ணயர்ந்தது.

அடிவானம் செவ்வானமாகிக் கொண்டு வரும் பின்னணியில், அக்குன்றுகளை ரிஷபம் தான் கண் விழித்த முதற் காட்சியாய்க் கண்டதும் அதன் விழிப்பு புது விழிப்பாயிருந்தது. புரியாதவோர் ஆவல் உந்த, காளை குன்றுகளை நோக்கி நடந்தது. புல்வெளிகளைக் கடந்து நெருங்க நெருங்க, குன்றுகளை அவற்றின் முழுமையில் பார்க்கையில், அண்டப் பட்சிகள் குதறி எறிந்த பிரும்மாண்டப் பழம் போல், அவை சிதறிக் கிடந்தன. அவை மேல் செடிகளும் சிறுமரங்களும் தலைகளை ஆட்டி ஆட்டிப் புது விருந்தாளியை வரவேற்றன. ஆனால், அந்தப் பிரும்மாண்டமான பழத்தின் கொட்டையின் முகடு போல், அவற்றினிடையில் ஒரு மலை நின்றது. அதன் அடிவாரத்திலும், உடல் மேலும் பாறைகள் முண்டு முடிச்சுமாய், அசிங்கமாய், ஆனால் ஆத்திரமாய் எழுந்தன. ஆனால், மலை உயர உயர, அது இட்டுக் கொண்ட சிகரம் கீழ்கிடப்பனவற்றின் பௌருஷத்தைத் தூண்டிப் பழித்தது. அந்த இடத்தில் மாத்திரம் வானம் பொத்துக் கொண்டு மலையுச்சிமேல் நீலம் பெய்து கொண்டிருந்தது.

காளை முகந்தூக்கி, அந்தக் காட்சியைத் தரிசிக்கையில், அதன் கழுத்து மடிகளுக்கடியில் நெஞ்சு நெகிழ்ந்து தவித்தது. சமாளித்துக்கொண்டு அதை வணங்குவது போல் தலை குனிந்து மூச்சுப் பிடித்து மலைமேல் ஏற ஆரம்பித்தது. அதன் பலத்துக்கு ஈடான சோதனையில் ஈடுபட்டு மேலேறுகையில், அது ஒரு தனிப் பரவசத்தில் ஆழ்ந்தது. இதுவரை பழக்கமில்லாத இடங்களையும் உயிர்களையும் சத்தங்களையும் அது காண்கையிலும் அதன் வியப்பு அடிக்கு அடி அதிகரித்துக் கொண்டே வந்தது. ஓர் இடத்தில் ஒரு பாறையின் சந்தில் ஒரு கொடி சுருண்டு கிடந்தது. அதைக் கடிக்கக் காளை கழுத்தை நீட்டிற்று. அக்கொடி திடீரெனச் சுருள் கழன்று சரசரென வளைந்து ஓடிப் பாறையின் மறுபுறத்தில் ஒளிந்து கொண்டது. அந்தண்டையிலிருந்து "புஸ்—புஸ்" என சீறல்கள் கிளம்பின. காளைக்கு இந்த விந்தை புரியவில்லை. அது தலை நிமிர்ந்து குன்றினிடுக்கில் முளைத்திருந்த ஓர் இலைக் கொத்தை வாயில் பற்றி இழுத்தது. அந்தச் செய்கையில் அதன் பார்வைக்கெதிரில் மலையின் மறுபக்கத்துப் பிரதேசம் திடீரெனக் குதித்தெழுந்தது. காளை பறித்த இலையைக் கடிக்க மறந்தது. ஒன்றும் பாதியுமாய் இலைக் கொத்து அதன் வாயிலிருந்து தொங்கிற்று.

மலைச் சிகரத்திற்கும் அதற்கும் இன்னும் கொஞ்ச உயரமேதான் பாக்கி. படிபோல் உயர்ந்து இடங்கொடுத்த ஒரு கல் முடிச்சின்மேல் முன் இரண்டு கால்களை வைத்தபடி ஒரு குறுகிய பாறை மீது பின்னங் கால்களை ஊன்றிக் கொண்டு நடு முதுகு சற்று உள் நெளிந்து இன்னமும் முன்னேறும் நிலையில் நிற்கையில், அப் புதுஉலகம் அதன் மேலுறை கழன்று விழுந்தாற் போல் திடீரெனத் தென்பட்டது. அந்தப் பிரமிப்பில் அந்த நிலையிலேயே காளை கல்லோடு கல்லாய்ச் சமைந்தது. வானத்தின் பசுமையே கீழிறங்கி யிருந்தது. அது இதுவரை கண்டிராத ஒரு செழிப்பு கண்ணுக்கெட்டிய வரை மலையடியில் கொழித்தது. கண்ணுக்கெட்டியவரை கண்ணுக்கு விருந்தாய் அவ்விடம் பரவிய தாவரங்களையும் தளிர்ப்புல்ப் பரப்புகளையும் பார்க்கையிலே காளைக்கு நாக்குச் சுவைத்தது. 'திடுதிடு'வென்று பூமி யதிரும் கோஷத்தோடு எதிரே இரு குன்றுகளிடைச் சரிவிலிருந்து ஓர் ஆறு நெளிந்து கீழே யிறங்கிக் கொண்டிருந்தது. மாரளவு உயர்ந்தோடும் புற்களுக்கிடையில், புரியாத நிழல்கள் ஒளிந்து விளையாடின. நின்றவிடத்தில் நின்றபடி மண்ணே கண்ணுக்குத் தெரியவில்லை. எங்கும் பச்சை, பச்சை, பச்சை.

'கொடு' என்று யாசிப்பது இழிந்தது; அப்படி ஒருவன் யாசிக்க 'அவனுக்குக் கொடுக்க மாட்டேன்' என்று சொல்லுவது அதைவிட இழிந்தது. 'இதைப் பெற்றுக்கொள்' என்று ஒருவனுக்கு ஒன்றைக் கொடுத்தல் உயர்ந்தது. அப்படி ஒருவர் கொடுக்கும்போது, 'எனக்குத் தேவையில்லை, ஆகையால் வாங்க மாட்டேன்' என்று சொல்லுதல் அதைவிட உயர்ந்தது.

— புறநானூறு

இக் காக்ஷியைக் கண்ணோட்டமிடுகையில் தன்னை யாரோ கவனிப்பதுபோல் ஒரு அச்சத்தை யடைந்து சட்டென அப்படியே தலை மாத்திரம் திரும்பிற்று. அதைப் போலவே ஒரு பிராணி. மலைச்சரிவில் அதைவிடச் சற்றுத் தாழ்ந்த இடத்தில் நின்று அதைக் கவனித்துக் கண்டிருந்தது. எத்தனையோ முறை காளை அருவியில் தன் நிழலைக் கண்டிருக்கிறது. ஆயினும், இவ்வளவு தெளிவாய்த் தன் போன்ற உருவைக் கண்டதில்லை. தன்னைப் போலவே இது

இருந்தும், தன்னிலும் வேறுரும் இருந்தது. இதன் கொம்புகள் சிறுத்து, நுனி மிகவும் கூரிட்டிருந்தன. தொடையில் பெரும் கருந்திட்டு. கால்கள் அவ்வளவு நீளமில்லை. கட்டையாய்த் திடமாய்க் குளம்புகள் பாறை மீது ஊன்றிப் பிடிப்பாய் நின்றன. வால் சுழன்று ஆடியது.

> கருத்து வேற்றுமை காரணமாகப் பகையைப் பாராட்டுவதும், கேடு செய்வதும் அறியாமை.
>
> — திரு வி. க.

ஒன்றையொன்று சற்று நேரம் உறுத்து நோக்கிக் கொண்டிருந்த பின், புது மாடு ஓர் அடி முன்னெடுத்து வைத்தது. காளை அசைந்து கொடுக்கவில்லை. கல்லாலடித்தாற்போல் நின்றது. கண்கள் மாத்திரம் பளபளவென்றன. கொஞ்சங் கொஞ்சமாய் ஊறும் நம்பிக்கையுடன் புது மாடு அடி மேல் அடி வைத்து, கிட்டவே வந்துவிட்டது. வந்து, காளையின் முகத்தை முகர்ந்தது. முகர்ந்து, சத்துரு இல்லை என்று அறிந்ததும், பெருமூச்செறிந்து, தன் கழுத்தைக் காளையின் கழுத்தோடு உராய்ந்து கொண்டது. சகிக்க முடியாத ஓர் இன்பத்தில் ஈருடல்களும் விதிர்விதிர்த்தன. சகல உயிர்களுக்கும் பொதுவாய், அவையவைகளின் ஜன்மேதி ஜன்மமாய்த் துடிக்கும் மூலநாடி புடைத்தெழுந்து அவற்றினை அப்படித் திடீரென ஊடுருவுகையில், அந்த அதிர்ச்சி சாமானியமானதாயில்லை. இப்படி இரண்டும் முகத்தோடு முகம் வைத்து, கழுத்தோடு கழுத்து உராய்ந்து கொண்ட இந்தச் சைகையே ஒரு முத்திரையாய்த் தான் அமைந்தது. இப்படி, ஒன்றையொன்று அறியாமலே பிறந்து, வளர்ந்து இத்தனை நாட்களுக்குப் பின், ஒன்றுக்கொன்று தெரியாமலே ஒன்றையொன்று தேடி வந்து இப்போது ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டது இயற்கையின் சத்திய ஏற்பாட்டின் முத்திரை. அந்த ஆதார சத்தியத்தின் உக்கிரம் காளையின் நாபியில் உறங்கிக் கிடந்து, சுருள் கழன்று, இப்போது சட்டென விழித்தெழுந்ததும் அந்த விழித்திறப்பில் அதன் நெற்றி நடுவில் மின்னற் கொடிகள் பின்னிப் பளீரிட்டன. ஒரு கணத்தின் யுகநேரம், மலையும் பாறைகளும் காற்றில் காற்றாடி மிதந்தன. காளை அந்த அதிர்ச்சியில் கண் கூசி கண்மூடிக் கொண்டது. கண் திறப்பதற்கு முன் இன்னொரு உருவம் அதன் பார்வைப் பரப்புக்குள் புகுந்துவிட்டது.

இன்று அதன் ஆச்சரியங்களுக்கு முடிவில்லை. காளைதான் அதைக் கண்டது. அது இன்னும் காளையைக் காணவில்லை. மலையடிவாரத்தில் ஒரு பாறையின் பின்னிருந்து அது வெளிப்பட்டது. அதைக் கண்டதும் காளையின் திமில் தானே சிலிர்த்தது.

> எவ்வெவர் எவ்வெப் பொருளால் கடவுளை அழைப்பினும், எவ்வெவ் விலக்கணங்களைக் கடவுளுக்கு ஏற்றினும் கடவுள் எப்போதும் ஒருவரே.
>
> —வ. உ. சி.

விளம்பலற்ற ஒரே கோட்டில் எழும்பி வளைந்து முடிந்து, உயிராகி, ஒரே லகுவிலும் லயத்திலுமே இழைத்த உடலில் வரிக் கோடுகள் கட்டுக் கட்டாய் எழும்பின. ஆறாத பசியில் நீண்டு குறுகியவயிறு. தீராத கோபம் கொதித்துக் கொதித்து, நீறுபூத்த தணல் விழிகள் எப்பவும் எதையோ

தேடிக்கொண்டேயிருந்தன. அந்த ஓயாத தேடலில், அதன் மீசையும் வாலும் அசைந்தபடியிருந்தன. இந்தப் புது தரிசனம் தன்னிலும் உரம் மிகுந்தது, அதன் வழியில் தன்னிலும் உயர்ந்தது என்று காளை தெளிவாய் அறியாவிடினும், தீவிரமாய் உணர்ந்தது. அவ்வுருவம், எந்தப் பாறையின் மறைவிலிருந்து வெளிப்பட்டதோ, அந்தப் பாறையை ஒருமுறை தேடலில் சுற்றிவந்தது. அந்த நடையின் லகுவும் பிகுவும் உள்ளடங்கிய பரபரப்பும் காளையின் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது. காளை திகைத்து நின்றது.

காளையின் திகைப்பு புரியாமல் காளை நோக்கின் வழி பசுவும் நோக்கியபோதுதான் அந்த உருவைக் கண்டது. கண்டதும் கதி கலங்கி மிரண்டது. அதன் அங்கங்களைத் திடீரென ஆயிரம் பேய்கள் கவ்விப் பிடித்துக்கொண்டன. மலையின் மறு சரிவில் கடக்க முயன்றது. ஆனல் அதன் வழி குறுக்கே, காளை கல்லாலடித்தாற் போல் நின்றது. பசுவின் கண்ணோரங்களில் சிவப்பு சீறி எழுந்தது. தலையைப் பின்வாங்கி, பசு தன் முழு கனத்தின் முழு வேகத்துடன் காளையின் வயிற்றில் முட்டிற்று. எதிர்பாராது அப்படித் தாக்கியதும், காளையின் கால்கள் சறுகி நிலைபிசகின. உடனே சமாளித்துக் கொள்வதற்கு அதற்கு இடவசதியில்லை. சந்தர்ப்பமுமில்லை. அதற்குள் இன்னொரு முட்டு. கொம்புகள் தன் தொடைச் சதையைக் கிழித்துக்கொண்டு உள்ளிறங்குவதைக் காளை உணர்ந்தது. உணர்ந்து கொண்டிருக்கையிலேயே அது மலைச்சரிவில் அப்படியே அடியோடு உருண்டது. பசுவின் முழு கனத்தின் உந்தலோடு அது கீழ் நோக்கி விழும் தன் கனத்தின் வேகமும் சேரவே, பந்துபோல் நீட்டிக்கொண்டிருக்கும் மலைப் பறுகளில், ஒன்று – இரண்டு – மூன்று முறை தெறித்து, எகிறித் தெறித்து, எகிறி, தடாலென்று மலைச்சரிவிலேயே இரண்டு பாறைகளுக்கு நடுவில் விழுந்து ஆப்பு அறைந்தாற்போல் மாட்டிக் கொண்டது.

ஆனல் அதற்கு அப்போது நினைவில்லை.

பசு எங்கோ விழுந்தடித்து ஓடிவிட்டது.

*

உச்சிவேளைக்குப் பாறைகளில் ஏறிய வெய்யில் கொதிப்புதான் அதை ஸ்மரணைக்கு மீட்டது. வெப்பம் கண்ணைத் துருவிற்று. காளை புரள முயன்றது. ஆனல் உடம்பு



இம்மிகூடக்கிணுங்கவில்லை. இசை கேடாய் சிக்கிக் கொண்டிருந்தது. அந்த முயற்சியில் தொடைத் துவாரத்திலிருந்து இரத்தம் 'குபுக் குபுக்'கென்று கொட்டிற்று. அந்த வலியின் நினைவு திரும்பிய பயங் கரத்தில், காளை வாய்விட்டு அல றிற்று. ஆனால் அதன் குரலாகவே யில்லை. பூமியையே மட்டை உரித் தாற்போல் ஒரு விபரீத சப்தம். மலைச்சரிவிலிருந்து பாறைக் கற் கள் ஒன்றிரண்டு உதிர்ந்தன.

காளையின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிந்துகொண் டிருந்தது.

செழித்து ஓங்கிய பேய்ப்புற் களின் மேல் காற்று சீறி விளையா டும் சத்தம் செவியில் மோதிற்று.

காளையின் வயிறு முதுகோடு ஒட்டிக்கொண்டிருந்தது.

''திடுதிடும்.... திடுதிடும்.... திடு திடும்....''

பூமியின் தாகத்தையே தணிக்க விரைவது போல மலையிலிருந்து அருவி இறங்கும் சப்தம்.

காளையின் நாக்கு வீங்கித் தடித்து, பாம்புபோல் சுருண்டு, தொண்டையை அடைத்துக் கொண்டிருந்தது.

இந்தப் பரிகாசம் காளைக்குப் புரியவில்லை. வெகுண்டு மற்று மொருமுறை தன்னை விடுவித்துக் கொள்ளத் தன் முழு வன்மை யோடு தவித்தது. அதன் ரத்தத் தில் மறைந்து ஓடும் கோடி காளை ஜன்ம வித்துக்களும் அப் பவே எல்லாமே முளைக்கத் துடிப்பது போலும் குதித் துக் கொதித்து எழுந்தன. ஆனால் பாறைகளின் எமப் பிடி தளரவில்லை. இப்படி அதை அழுத்திப் பிடித்துக் கொண்டு அதன் வேளைக்கு அவை அசைவற்று காத் துக் கொண்டிருக்கும் தன் மையிலேயே, ஒரு விரக்தி யான சிரத்தையும் இரக்க மின்மையும் தெளிவா யிற்று. இப்படித்தான் பூமியில் பொருள் எனத் தோன்றியவை எல்லாம் – அசைவனவோ அசை யாவனவோ–தம்தம் பொருட்டை நிறைவேற்றி வருகின்றன என்று காரியத்தில் காளைக்கு உணர்த்து கையில் அதன் கண்களுக்கெதிரில் இருள் தூலங்கள் மாறி மாறிப் படர்ந்து அதன் மேல் இடிந்து வீழ்ந்தன. மறுபடியும் அது பிரஞ்ஞை யிழந்தது.

மறுபடியும் கண் திறந்தபோது, இரவு இடத்தைப் போர்த்த ஆரம் பித்து விட்டது. மரத்தடியில் பூக்கள் சிதறிக் கிடப்பதை எத்த னையோ முறை அது பார்த்திருக் கிறது. தின்றுமிருக்கிறது. அதே மாதிரி வானில் இப்பொழுது பூக்கள் வாரி இறைந்திருந்தன. ஒன்றன்கீழ் ஒன்று ஒரே அளவில் இரு பறவைகள், கண்ணெதிர் உயரத்தில் பறந்துகொண்டு தம் கூட்டிற்கு விரைந்து கொண்டிருந் தன.

நேரம் ஏறஏற பகலின் சப்தங் கள் ஒவ்வொன்றாய் அடங்கிப் போயின. உட்புலனுக்கு மாத்திரம் புலனாகும் அர்த்தக் கருக்களுடன், இரவின் நாதவடிவுகள் ஒவ்வொன் றாய் முளைக்க ஆரம்பித்தன. புதர் களில் ஒரு சலசலப்பு. இலைகளின் பெருமூச்சு. திடீரென்று இர வையே இரண்டு துண்டங்களாய் வெட்டி, இரவே கூக்குரலிட்டாற் போன்ற அலறல் ஒலி. ''கெக் கெக்கெக்கேகே–கக்கடகக்கடகட கட''– மரங்களிலிருந்து ஒரு பற வையின் சமயமற்ற சிரிப்பு.

> வேளைக்கு வேளை நாவிற்கு ருசியான உணவு கொடுத்து, தூங்கும் பொழுது கால் பிடித்துவிட்டு தொந்தரவு செய்யா மலிருப்பதே மனைவியின் லட்சணம்.
>
> —புதுமைப்பித்தன்

> சூரியவெளிச்சம் இன்றி ஒரு மரத்திற்கு உரமபோட்டால் எப்படிப் பிரயோஜனமில்லையோ, அது போன்றுதான் குழந்தைகளுக்கு வெறும் எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுப்பது.
>
> —ராஜாஜி

"திடும்திடுதிடும் திடு திடும்திடும்திடுதிடும்—"

இவை எல்லாவற்றிற்கும் ஆதாரஸ்ருதியாய் நீர்வீழ்ச்சியின் ஓங்காரம். பகலில் உள்ளுக்கு வாங்கிக்கொண்ட கொதிப்பை பாறைகள் வெளிக் கக்க ஆரம்பித்தன. தன்மேல் முலுமுலுவென ஏதோ ஊறுவதுபோல் காளைக்குத் தோன்றிற்று. அரிப்பு தாங்க முடியவில்லை. அந்த ஊறல் கழுத்தில் ஏறி சாரி சாரியாய் வயிறுவழியிறங்கி தொடைப் புண்ணுள் நுழைந்து வெடுக்கெனப் பிடுங்கிற்று. அந்த வலியில் துடிப்பதற்குக்கூட அதற்கு உரிமையில்லை. பாறைகள் தம் இடுக்கில் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தன. காளை ஒருமுறை தன் விழியைஉருட்டிப் பார்த்தது. அதன் விழியளவு பெரிய உயிர்கள் ஒழுங்கான அணியில் தன்மேல் மொய்த்துக் கொண்டிருந்தது வான் வெளிச்சத்தில் தெரிந்தது.

ரணஜன்னியில் உயிர் ஊசலாடுகையில், பசி, தாகம், வலி முதலிய உணர்ச்சிகள் கூட மரத்துவிட்டன. அதற்கே, தன் கால்கள் கீழே பரவாமல் விடுபட்டு, லேசாய் உயர உயரக் காற்றில் மிதந்து கொண்டு போவது போல் தோன்றிற்று. தன் மலஜலத்தில் உழன்று கொண்டு மலையிடுக்கில், பல் விதங்களிலும் துன்புற்று இன்னும் உயிரோடு தவிக்கும் தன்னுடலையே அதனின்று ஒதுங்கிப் பார்ப்பது போலும் தோன்றிற்று. அப்போது, இதுவரை தெரியாத, தோன்றாத, புரிந்தும் புரியாத, அதற்குச் சம்பந்தங்கூட இலாத பாஷையும், விஷயமும் கேள்வியுமாய்த்தானே அமைவது போலும் அதற்குத் தோன்றிற்று.

"நான் ...."

"நான் யாராயிருப்பினும் சரி, நான் என்னுருவில் நல்லுருவாய்த்தான் நானானேன். ஜன்மத் தொடர்பின் அழுக்கில் புழுத்து நான் எழவில்லை. என் பிறவி என்னாலல்ல. நேரே உன் கைகளிலிருந்தே உன் ஆசையில் உண்டானேன். உண்மையுள் உள்ளுண்மையில் என் பிறவியும் நானும் உன்னாலேயே உன்னுடையதே! உன் லக்ஷியங்களின் லக்ஷணங்களோடு நான் உருவானதால், உன் விதிப்படியே நான் அப்பிறவிக்கு அழகு செய்ய வேண்டியவனே. ஆனால் ஏன் இப்படி, என் முதல் பிறவியிலேயே, என் பிறவியின் அவமானச் சின்னமாக்கி யிருக்கிறாய்?

வானத்தில் நட்சத்திரங்கள் வெட்கிக் குனிந்து ஒன்றன் பின் ஒன்றாய் அவிந்தன. மேகப் படலங்கள் சூழ்ந்தன.

"நான் பிறவியை மறுக்கவில்லை. இறப்பையும் மறுக்கவில்லை. எனக்கு இயங்குந் தன்மையை அளித்து என்னையும் ஒரு தனியாக்கிய பின், நான் வாழ்வை மறுக்க முடியாது. ஆனால் என்னை வாழ விடாது என் வாழ்க்கையை வியர்த்தமாக்கியது ஏன்? மெய்யெனவே என் வித்தைப் பாறைமேல் சிதறி விட்டாய். நீ என்னைப் பிறப்பித்தாய். நான் உன் குழந்தை. ஆனால் நீ என் தாய் அல்ல. நீ உன் குழந்தையை விட்டு ஓடி விட்டாய். என்னைப் பெற்றவள், என் பிறப்பில் தன் உயிரைக் கொடுத்து வெள்ளத்தில் மறைந்து போனாள். அவள் செத்தாள். நான் இருக்கிறேன். நான் இப்போழுது செத்துப் போய்க் கொண்டிருக்கிறேன். நீ ஓடிப் போய் விட்டாய். நீ ஓடிப்போன தாய். சத்தியத்

தின் நித்தியத்தையே பொய்யாக்கின உனக்கு விமோசனமே கிடையாது. எனக்கு உண்டு. எனக்கு ஒரு ஜன்மத்தைக் கொடுத்து, அதை வீணாயும் அடித்து, அதுவே காரணமாய் அதற்கு ஒரு தொடர்பை நீ ஏற்படுத்தி விட்டாலும், அந்த ஜன்ம ரீதியிலேயே நான் வளர்ந்து வளர்ந்து ஒரு சமயத்தில் உன் தேவையே இலாது உன்னிலும் பெரிதாகி விடுவேன். ஆனால் நீயோ, நீ பிடித்துப் பிடித்துப் போட்ட மண்ணை அழித்து அழித்துப் பிசைந்து, அதையே தின்று கொண்டிருப்பாய். இது வித்து விருட்சத்திற்கு இடும் சாபம்.... வீண் போகாது – வீண் போகாது....!''

இடி குமுறி உடைந்தது. எங்கோ ஒரு மரத்தில் ஒரு கிளை 'மொளமொள'வென்று முறிந்தது.

''நான் ....''

''நான் யாரை இப்படி எதற்காகத் தூற்றுகிறேன் ....?''

வானம் வெட்கத்தில் உகுத்த கண்ணீர் போல், மழைத்துளிகள் காளை முகத்தில் ஒன்றும் இரண்டுமாய் உதிர்ந்தன. காளைக்கு நெஞ்சு இரைத்தது, கண்கள் நிலைகுத்திவிட்டன. ஆனால் உயிரும் நினைவும் இன்னும் விடாது உடலோடு கெட்டியாய் ஒட்டிக் கொண்டிருந்தன.

'பொலபொல'வென பொழுது புலரும் வேளையில், காளையின் கண்ணெதிர் உயரத்தில், திறந்த வாய் போன்ற இரு பாறைகளின் இடைவெளியில், வானத்தின் செந்திட்டின் பின்னணியிலிருந்து சூரியனுக்கு முன்னால் அவ்வுருவம் உதயமாயிற்று. தன் திமிலின் சிலிர்ப்பில், காளை அதை அடையாளம் கண்டுகொண்டது. அந்தச் சமயத்திலேயே அதுவும் அதைக் கண்டது. அதன் மீசை துடித்தது. அதன் உடல் ஒரு கணம் பதுங்கலில் ஒடுங்கிக் குறுகிற்று. அவ்வளவுதான்.

காளையின் இதயம் நெஞ்சுவரை எழுந்தது.

மலையை உதைத்துக் கொண்டு பாய்ச்சலில் எழும்பிய வேகத்தில் திகிரி மாதிரி அந்தரத்தில் நீந்திக் கொண்டே, அவ்வுருவம் நேரே மாட்டின் மேல் இறங்கிற்று. ஆனால் அதன் உடல் படுமுன், ரிஷபத்தின் இதயம் வெடித்து விட்டது. ★

நான் விரும்பும் எழுத்தாளர்

எழுத்தாளர்கள் அனைவருமே ஓர் இனம்தான். கொள்கைகள் பற்றிய வர்ண பேதங்களை எங்கள் 'உமா' விவாத அரங்க'க் கண்ணாடி பிரதி பலிக்காது. ஆகவே, உங்கட்குப் பிடித்தமான எழுத்தாளர்கள் யாரைப் பற்றி வேண்டுமானாலும் தாராளமாக எழுதியனுப்பிக் கொண்டிருங்கள். கட்டுரைகளின் சிறப்புக்கு மட்டுமே முதல் இடம் தரப்படும். தொடர்ந்து இடம் பெறும் பகுதிகளுள் இதுவும் ஒன்று.

'தேவன்'

"கதைக்குள் கதை" —இந்த வகையில் எத்தனையோ கதைகளை இன்று நாம் படிக்கிறோம். அவற்றில் பெரும்பாலான கதைகளின் தாரக மந்திரம் காதல், காதல் காதல்தான்!

இந்த வகைக் கதைகளுக்குப் புத்துயிரும் புதுச் சுவையும் தந்தவர்களிலே ஒருவர் திரு. தேவன். ஆயிரமாயிரம் 'கதைக்குள் கதை' வகையில் சீரழியும் இந்த நாளில் கூட திரு 'தேவன்' எழுதும் இவ்வகைக் கதைகள் என்றால் ஒரு தனிச் சுவை இருக்கிறது; வாசகர் மனத்திலே ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. கதைகள் சொல்ல ஆரம்பிக்கும் போது, மல்லாரி ராவின் கைக் கட்டை விரல் துடிப்பதைப் போலக் கதையைப்பற்றி அறிந்து கொள்ள வாசகர் இதயம் துடிக்கிறது. எடுத்த கருத்தைச் சுருக்கமாகவும், விறுவிறுப்பாகவும், சந்தேகத்துக்கு இடமின்றியும் சொல்ல 'தேவன்' கையாளும்—'தேவன்' மட்டுமே கையாளும்—தனி வகை, கதையை ஒருவர் சொல்ல மற்றும் சிலர் கேட்பது போல அமைப்பது. இவ்வாண்டு 'விகடன்' தீபாவளி மலரின் 'சுந்தரம்மாவின் ஆவி' கூட இவ்வகைக் கதைதான். இதுவே புதுமை யுகம்; எதிலும் புதுமை வேண்டுகிறோம் நாம். எழுத்துத் துறையில் புதுமையைப் புகுத்தி, அப்புதுமையின் வெற்றியில் பங்கு பெறக் கருதிப் பல எழுத்தாளர்கள் அப்புதுமையைப் பின்பற்றி அதைப் பழைமையாக்கி விட்டாலும் கூட, தமக்கே உரிய தனிமுறையில் சுவை குன்றாமல் எழுதி வருபவர் 'தேவன்'. இதற்குச் சான்றாகத்தான் 'கதைக்குள் கதை' வகையைச் சொன்னேன்.

கதையின் விறுவிறுப்புக் கெடாமல், கதையின் போக்கு முன்னேற வேண்டுமானால், 'தேவன்' ஒரு புது வழியைக் கையாளுகிறார். கதையின் உப பாத்திரங்கள் தம் உறவினருக்குக் கடிதங்கள் எழுதுவது போல அமைக்கிறார் இவர்; இத்தகைய கடிதங்களின் மூலமே இவரது கதா பாத்திரங்களின் குணச் சித்திரங்களை நாம் கணிக்க இயலுகிறது. சமீபத்தில் வெளிவந்த 'லக்ஷ்மி கடாக்ஷம்' என்ற தொடர் கதையில் (விகடன்) இந்த முறையைக் காண்கிறோம்; ரொம்ப ரசமான முறை.

பின்னால் வரும் நிகழ்ச்சிகளின் மேலோடான

கருத்து :
'வேணி'
லால்குடி.

மத, பொருளாதார, அரசியல் நிலைகளில் ஏதாயினும் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொழுதெல்லாம், 'மதத்துக்கு ஆபத்து' என்று கூச்சல் எழுப்புவது என்கிற துர்ப்பாக்கிய நிலை இந்நாட்டில் ஏற்படுவது வழக்கமாகிவிட்டது!

— ஒ. பி. இராமசாமி ரெட்டியார்

நோக்கைக் கதைப் போக்கின் சுவை கெடாமல் காட்டுகிறார் 'தேவன்'. இதற்கும் பல புது முறைகள். 'நாடி ஜோதிஷ'த்தைப் பற்றி எழுதுவது ஒருமுறை. 'லக்ஷ்மி கடாக்ஷ'த்தில் நாடி ஜோதிஷ ஏடுகளில் அங்காரகனும் புதனும் பாத்திரங்களின் எதிர்காலம் பற்றிப் பேசுவதாகக் காட்டுகிறார். 'லக்ஷ்மி கடாக்ஷ'த்தைக் கதைமேல் உச்சத்திலிருந்து அடி உச்சத்திற்குக் கொண்டுவாராமலும், நாசூக்காகக் கதாபாத்திரங்களின் பிற்காலம் பற்றி வாசகர்கள் சலிப்பின்றி அறிந்து கொள்ளவுமே இம்முறை கையாளப்படுகிறது. 'சம்பத்-சரஸ்வதி' என்ற உத்கிருஷ்டமான நாடிசாஸ்திரம் கதாபாத்திரங்களின் எதிர்காலம் பற்றிப் பேசுவதை அழகுறக் காட்டுகிறார்.

எழுத்தாளனுக்கு என்றுமே ஓர் அன்பு இதயம் வேண்டும்; சமரச நோக்கு வேண்டும். துவேஷத்தையும் குரோதத்தையும் தூண்டிவிடும் எழுத்துகள் புகழ் பெறலாம்; ஆனால், அவை அழியாத சிரஞ்சீவி இலக்கியம் ஆக முடியாது. 'தேவ'னின் கதைகள் அந்த வகையில் அல்ல; அன்பென்ற அழகான தத்துவத்தின் பாடப் புத்தகங்கள் அவை. இலக்கிய மாணவர்கள் விரும்பிப் படிக்கும் அன்புக் களஞ்சியம்; அவர் காட்டும் அன்பு, காதல், தெய்விக அன்பு; பக்தி — தீம்பழந்தன்னில் சுவையாகவும், தெய்வத்தை எண்ணும் நினைவாகவும் மிளிர்கிறுளே அந்தச் சக்தியின் வழிபாடு—முருகனின் உபாசனை. அவர் கதைகளிலே திருச்செந்தூர் முருகனின் திவ்ய தரிசனம் காண்கின்றோம்; நீலச் சிகண்டியின் மேல் நின்று வலமும் இடமும் வள்ளியும் குஞ்சரியும் காட்சி தர, சந்தனத்தால் அபிஷேகிக்கப்பட்டு தெய்வீகத் திருஉலாக் காட்சி தருகிறான் முருகன். சிக்கில் உறை சிங்கார வேலனை, பழனிப்பதி வாழ் பால குமாரனை, ஆவினன் குடியில் வாழும் அழகான தேவனை, தின்னியம் சுப்ரமண்யனை அவர் எழுத்துகளின் ஊடே காண்கின்றோம்; பங்கஜாக்ஷித் தாயாரை மனமாரச் சேவிக்கின்றோம். அவர் கதைகள் இலக்கிய மதிப்பற்ற வெறும் பக்தி நூல்கள் அல்ல; ஸ்தல புராணங்களல்ல; அவர் எழுத்திலே, இலக்கியத்திலே, அவரையும் அறியாமல் பக்தி இடம்பெறுகிறது. 'தேவ'னைப் படிக்கையில் நாம் நம்மையும் அறியாமல் உணர்ச்சி வசப்படுகிறோம்; பக்திப் பரவசமாகிறோம்; ஆம்; இதுதான் உண்மை இலக்கியம்.

இவர் எழுத்துகளில் வார்த்தைக்கு வார்த்தை ஹாஸ்யமும் குறும்பும் தவழ்கின்றன. மிகவும் உயர்தரமான ஹாஸ்யத்தைச் சர்வ சாதாரணமான விஷயத்தைக் காணுவது போலக் கூறி வெடிச் சிரிப்பில் ஆழ்த்துகிறார் இவர். 'கோமதியின் காதல'னில் விழுந்து விழுந்து சிரிக்கிறோம்; வேதராம ஐயரின் 'பிராஸ'மும் போக்கிரி மணியும் பக்கிரியும், 'தொடாதே; அபாயம்', 'வண்டியை நிறுத்தச் சங்கிலியைப் பிடித்து இழு; அகாரணமாய் உபயோகித்தால் ஐம்பது ரூபாய் அபராதம்' என்று ஹாஸ்ய வெடியுடன் வரும் சிறுவனும், 'எள்' வியாபாரியின் 'ஹே'யும் நமக்கு நகைப் பூட்டுகின்றனர். 'துப்பறியும் சாம்பு'வின் அசட்டுத்தனமான செயல்கள் அவருக்கு சந்தித்த யாரையோ நினைவு படுத்து

கிறார்கள்—நமக்கு மிகவும் பரிச்சயமான பாத்திரங்களாகத் தென்படுகிறார்கள். இவருடைய மெல்லிய ஹாஸ்யத்தையும், நடைச் சிறப்பையும் பார்த்து இவரைத் 'தென்னாட்டு டிக்கன்ஸ்' என்கிறார்கள் சிலர். நான் அவர்களோடு ஒப்பவில்லை. மேனாட்டு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் உயர்ந்திருந்தனர். இவரோ எல்லாத் துறைகளிலும் ஈடற்றவராக விளங்குகிறார்.

தொடர் நாவல் எழுதும் துறை மட்டுமல்ல; சிறு கதை, கட்டுரை—இப்படி உரை நடையின் எல்லாத் துறைகளிலும் 'தேவன்', 'தேவ'னாகவே விளங்குகிறார். சென்ற ஆண்டு ஏதோ ஒரு மலரில் வெளிவந்த 'மின்னல்' என்ற சிறுகதை என் உள்ளத்தைப் பறித்தது. புதுமுறையானது அது. இவ்வாண்டு 'கலைமகள்' மலரும் இவரது சிறுகதைவிருந்தொன்றை வழங்கியிருக்கின்றது.

முதன் முதலாகக் கட்டுரை எழுதும் துறையில் இவரது உயர்வை நான் அறிய உதவியது, 'ஐந்து நாடுகளில் அறுபது நாள்' என்ற பிரயாணக் கட்டுரை — தொடர்ச்சியாக 'விகட'னில் வெளியாயிற்று. பிரயாணக் கட்டுரைகள், சாதாரணமாக திருச்சி—கரூர் வழியில் செல்லும் 'பிராட் கேஜ்' வண்டியைப் போலத் தூக்கத்தை உண்டு பண்ணக் கூடியவை. ஆனால்.... ஆனால், என்ன விசித்திரம்! இந்த வகை இலக்கியத்திலும் அல்லவா ரம்மியப் புரட்சி செய்துவிட்டார் திரு தேவன் அவர்கள்! விழுந்து விழுந்து சிரித்தோம்; சுவை கண்டு அனுபவித்தோம்—'தேவன்' ஓர் எழுத்தாளர்!

'தேவன் தொகுப்புகள்' என்று ஒரு நூல் வெளியிட்டால், ஓர் அருமையான 'இலக்கிய அதிருஷ்டப்பை' ஒன்று உருவாகலாம். ★

எங்கும் புகழ்பெற்றது!

விநாயகர்

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை.1.

-V-

ரங்கூன் கமலம்

"எல்லார்வி"

முன்கதை இவ்வளவுதான் :

கோபு எடுப்பார் கைப்பிள்ளை—காதல் விஷயத்திலே. இல்லையென்றால், தன் உரிமைப் பெண் பத்மாவை மறந்து, எங்கிருந்தோ வந்த ரங்கூன் கமலத்தின் மையலில் ஈடுபட்டிருப்பானா? பாலு அவனுக்கு உடந்தை – அவனை உருப்படாமல் ஆக்குவதற்கு! பாலு என்றால், பட்டணத்து ரௌடி என்று அர்த்தம்.

இளம் தாரகை ஜானா-ரகு காதல் தொடர்கதை அத்தியாயம் அத்தியாயமாக வளர்ந்து வருகிறது.

கமலம் – கோபு காதல் நாடகம் பல ஒத்திகைகளுக்குப் பின் அரங்கேற்றப்பட்ட நாடகம் மாதிரியே 'ஜாம் ஜாம்' என்று நடைபெறுகிறது.

பாலுவைத் தேடுகிறான் போலீஸ்காரன். குடியானவன் ஒருவன் பாலுவை நையப்புடைத்து விட்டதாகத் தகவல் கிடைக்கிறது.

கோபுவின் தமையன் ராஜு பலவகையிலும் மனம் குழம்பிக் கொண்டிருக்கையில், ரகு தோன்றி, கோபுவைக் கையுடன் அழைத்து வருவதாகப் பட்டணத்திற்குப் புறப்படுகிறான்.

அப்பொழுது கோபு கீரனூரைக் குறியிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

இதற்கிடையில், பூரணி அம்மாள் பத்மாவுடன் எங்கோ புறப்பட்டுவிட்டதாகத் தகவல் அறிந்து துடிக்கிறான் ராஜு.

அண்ணனுக்கும் தம்பிக்கும் வாதம் முற்றுகிறது. அன்று இரவு, ராஜு கத்திக் குத்துக்கு ஆளாகிறான்.

சற்றுநேரம் கழிந்ததும், கோபுவைப் பிடித்து 'தர தர' வென்று இழுத்துக்கொண்டு போலீஸ் அதிகாரி தோன்றுகிறார்.

14. "நான் இல்லை, ஸார்!"

உயிருக்கு ஆபத்தில்லையென்று டாக்டர் மூலம் தெளிவானதும், கூடியிருந்தவர்களுக்கு மற்ற விஷயங்களில் நினைவு ஓடலாயிற்று. ராஜுவுக்குத் தக்க மருந்திட்டுக் கட்டுப் போட்டார் டாக்டர். தர்மாம்பாள் இடி விழுந்தவள் போல ராஜுவின் அருகில் உட்கார்ந்திருந்தபடி மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். கிலி பிடித்த நிலையிலிருந்த ஜானு அவளோடு ஒட்டி உட்கார்ந்து அவளை அணைத்தபடி இருந்தாள். ராஜுவின் முகத்தையோ, அவனது தோள் பக்கம் உள்ள ரணத்தையோ, கூடத்தில் சிந்தியிருந்த ரத்தத்தைக் கழுவிய இடத்தையோ, விளக்கொளி படாத இருட்ப் பிரதேசத்தையோ காண அவளுக்கு அச்சமாக இருந்தது.

எஞ்ஜினியரின் உறவினராக, கிராமத்தின் விருந்தினராக இருந்த எஞ்ஜினியரின் மைத்துனர் இப்போது பக்காப் போலீஸ் அதிகாரியாக விளங்கினர். முதன் முதலில் அவர் டாக்டரிடம் தான் பேசினர். "இந்தச் சம்பவம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன, டாக்டர்?" என்று கேட்டார்.

டாக்டர் மிக நிதானமாகவும் அழுத்தமாகவும், "இது கொலை முயற்சி என்று தோன்றவில்லை. தற்காப்பின் விளைவாக நிகழ்ந்த கத்திக்குத்துதான். காயமும் அது பட்டிருக்கும் இடமும் அப்படித்தான் சொல்கின்றன," என்று சொன்னர்.

அதிகாரி அந்தப் பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டு, குடியானவத் தெருவிலிருந்து வந்தவர்களிடம் செய்தி என்ன வென்று வினவினர். பக்கிரியின் வீடு தீப்பற்றி எரிந்ததாகவும் பெரும் பிரயாசையின் பேரில் தீ அணைக்கப் பட்டதாகவும் கூறினர்கள்.

அதிகாரி துண்டைப் பெற்றுக் கொண்டார். அதைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை.

"சரி, யார் அந்த ஆள் என்று தெரியுமா?" என்று வினவினர்.

"வேறெ யாருமில்லிங்க. பட்டணக்கரையிலேந்து வந்து இங்கே வட்டமிட்டுக்கிட்டிருக்கிற பாலு ஐயா தாங்க!"

பலர் ஒரே சமயத்தில், 'ஆ!' என்றனர்.

பாலுவின் வீட்டை அடையாளம் கண்டு, அவனை இழுத்துவர ஒரு ஜவான் ஓடினன்.

காவலில் இருக்கும் கோபுவைக் கொண்டு வருமாறு பணித்தார் போலீஸ் அதிகாரி. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் 'கிடு கிடு' வென்று நடுங்க அவரின் எதிரே வந்து நின்ற கோபு அழுகை பீறிடும் குரலில், "ஸார், சத்தியமாக என் அண்ணனை நான் கத்தியால் குத்தவில்லை ஸார்....!" என்ருன்.

எஸ். ஐ. கோபமாகச் சிரித்தார்; பிறகு சொன்னர்:

"பிடிபட்டது முதல் நீ இந்த ஒரே பல்லவியையே என்னிடம் பாடி வருகிருய். இதனல் நீ தப்பித்துக் கொண்டுவிட முடியுமா? கேட்கிற கேள்விகளுக்கு ஒழுங்கான முறையிலே பதில் சொல். உண்மை எனக்குத் தன்னலே விளங்கும். நீ நிரபராதி என்று பட்டால் இந்த நிமிஷமே உன்னை விட்டு விடுகிறேன்."

"நான் குளக்கரையிலிருந்து வந்த போது நீ உன் வீட்டு வாயிற்படியிலே வேகமாக வந்து இறங்கினையல்லவா? வேகமாக வந்த நீ ஏன் திரும்பி உட்புறம் ஓடினய்?"

கோபு பதில் சொல்ல வகையின்றித் திணறினன். பிறகு ஏதோ சொல்ல வாயெடுத்த போது, அருகே இருந்த ஒருவர், "இவன் தன் தமையனேடு சச்சரவிட்டுக்

கொண்டு போனவன், சாயங் காலம் வரையில் இங்கே நடமாட்டமே இல்லை. திடீரென்று ராத்திரி வேளையில் வீட்டுக்குள்ளிருந்து வெளிப் படவாவது? மகா பாவி! தகப்பனுக்குச் சமான மான, பரம உத்தமனை ராஜுவைக் கொன்றுவிடவென்றே....'' என்று ஆத்திரத்துடன் கூறிக் கொண்டே போகையில் அதிகாரி இடை மறித்தார்.

''நீங்கள் இப்படியெல்லாம் குறுக்கேபேசுவது எங்கள் வழிக்கு முரணானது. இது கிராமம். நீங்கள் முதியவர். இந்த ஒரு முறை பொறுத்துக்கொள்கிறேன். தயவு செய்து இனி எதுவுமே பேசாதீர்கள். உங்களைக் கேட்கிறபோது நீங்கள் உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லாம்,'' என்று கூறி விட்டுக் கோபுவிடம், ''நீ வந்த முறையையும் திரும்பி ஓடின முறையையும் என்னைப் பார்த்து விட்டே அவ்வாறு ஓடுகிறாய் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். கவனியாதவன் போல் சென்றேன். நான் கவனிக்கவில்லை என்று எண்ணி நீ மெல்ல வீட்டினின்றும் வெளிப்பட்டு நடந்தாய். நான் திரும்பி உன்னைத் தொடர்ந்தேன். சந்து முனை திரும்புகிற போது என்னைப் பார்த்து விட்டே நீ ஓடத் தலைப்பட்டாய். உண்டா, இல்லையா? அது ஏன்? நான் ஓடி வந்து உன்னைப் பிடித்ததும், நீ சொன்ன வார்த்தைகள் என்ன? 'ஐயோ, நான் இல்லை' என்பவையே அல்லவா? அவற்றின் பொருள் என்ன? ஏதாவது சொல்வதானால் சொல்....'' என்று அதட்டினார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''உன் தாய் செய்த புண்ணியத்தால் உன் தமையன் உயிர் பிழைத்தான். இல்லையானால் இரண்டு பிள்ளைகளையும் இழந்து விட நேர்ந்திருக்கும்.......''

இப்படி நயமாகப் பேசி வந்தவர் திடீரென்று, ''ஏன் கொலை செய்யத் துணிந்தாய்? சொல்! சீக்கிரம் சொல்!'' என்று மீண்டும் கர்ஜனை செய்தார்.

கோபு அழுதான். அழுது கொண்டே, ''இல்லை ஸார். சத்தியமாக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை, ஸார்....'' என்றான்.

அதிகாரி விசுவரூபம் எடுத்து விட்டார். ''முன்னால் கேட்ட கேள்விகளில் ஒன்றுக்குக்கூட வாய் திறவாமல் இருந்து விட்டு முடிவான இந்த ஒரே பல்லவியை மட்டும் பாடிக் கொண்டிருந்தால் முடியுமா? போலீஸ் கொட்டடியில் நிறுத்தி எங்கள் மாமூல் முறைப்படி 'பேச வைத்தால்' தான் நீ பேசுவாய். ஏய், இவனைப்பந்தோபஸ்தாக வைத்திருந்து காலையில்....'' என்று அவர் சொல்லிக் கொண்டே வருகையில், கோபு இடை மறித்து ''ஸார், ஸார்'' என்று கெஞ்சினான்.

''நடந்ததை நடந்தபடியே சொல்லி விடுகிறேன், ஸார். எட்டரை மணி ரெயிலில் மாயவரத்திலிருந்து வந்தேன். வீட்டினுள் நுழைந்தபோது என் அண்ணனின் அவல நிலையைக் கண்டேன். உடனே வெளியேறினேன். நீங்கள் எதிர்ப்பட்டீர்கள். விஷயம் சிறிது பொறுத்து வெளியானால் நீங்கள் என்னைக் கண்ட சம்பவத்தை ஆதாரமாக்கி என்னையே குற்றவாளியெனக் கருதுவீர்களே என்று பயந்துதான் உங்களைக் கண்டதும் உள்ளே ஓடினேன்'' என்று விம்மினான்.

''நிறுத்து. நீ சொல்வதை எவருமே நம்பமாட்டார்கள். ஒரு மனிதன் கத்தியால் குத்துண்டு கிடப்பதைக்கண்ட யாருக்குமே உடனே தன்னை மறந்து கூச்சலிடத்தான் தோன்றும். உனக்கோ அவர் நேர் அண்ணன்; ஒரே ரத்தம். அவர் நிலை கண்டு நீ எப்படித் துணிந்து ஓடி மறைய முயன்றாய்? மனம் வருமா?''

''அண்ணனுக்கும் எனக்கும் மனஸ்தாபம் என்பது ஊரறிந்தது. நாங்கள் இரண்டு நாள் முன் சண்

டையிட்டுக் கொண்டதும் எல்லாருக்கும் தெரியும். இத்தகைய நிலையிலே யாரும் என்னைத்தான் சட்டென்று சந்தேகிப்பார்கள். அதனால்தான் அவ்வாறு ஓட முயன்றேன்...''

''அண்ணனின் நிலையைக்கண்டு உன் உயிர் துடிக்க வில்லையா ?''

''துடித்தது. ஆயினும் அந்நிலையில் நான் என்ன செய்வது ?''

''எதற்காகச் சண்டையிட்டுக் கொண்டு போனாய் ?''

''பாகப் பிரிவினை கோரி.''

''மீண்டும் எதற்காக வந்தாய்?''

''திரும்பவும் அதைப்பற்றி வற்புறுத்திப் பேச.''

''நீ வருகிறபோது வீட்டுத் தெருக் கதவு திறந்தா கிடந்தது?''

''ஆமாம். கொலை பாதகன் எவனோ என் அண்ணனைக் குத்திவிட்டு ஓடியிருக்கிறான். உடனே நான் வந்திருக்கிறேன்.''

''பட்டணத்திலிருந்து வந்திருக்கும் பாலுவுக்கும் உனக்கும் நட்பு உண்டா ?''

''உண்டு; நெருங்கிய நட்பில்லை.''

''நீ அவனை எப்போது பார்த்தாய் ?''

கோபு தயங்கினான். குரல் தழுதழுத்தது.

''பொய் சொல்லாதே !''

''இல்லை ஸார். சத்தியமாக....''

''இன்று காலையில் மாயவரம் ஆனந்த விலாசம் ஓட்டலில் யாரோடு அந்தரங்கச்சம்பாஷணை செய்துகொண்டு பலகாரம் காப்பி சாப்பிட்டாயாம் ?....'' என்று இடி முழக்கம்போல் கேட்டுவிட்டு 'பளீர்' என்று அவன் கன்னத்தில் அறைந்தார் போலீஸ் அதிகாரி.

15. ''ஐயோ, பத்மா !''

உடலிலும் உள்ளத்திலும் உரம் ஏறியவன் ராஜு. கத்திக் குத்தினால் ரத்தச்சேதம் ஏற்பட்டாலும், அது அவனை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. மேலும், கைதேர்ந்த டாக்டர் ஊசி வழியே உள்ளுக்குச் செலுத்தியிருந்த மருந்து நல்ல பலனைக் கொடுத்தது. அதனால் அவன் விரைவிலேயே பிரக்ஞை தெளிந்தான். வலியை உணர்ந்தான். வலியின் உபாதை அதிகம் தெரியாமல் இருப்பதற்கும் டாக்டர் மருந்து உபயோகித்திருந்தார். அதனால் பொறுக்கவும் முடிந்தது.

திறந்த கண்ணெதிரே தாயைக் கண்டான். அவள் 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டாள். ''மனசை அடக்கு, அம்மா. பொதுவாக நம் குடும்பத்திற்கு இப்போதுபோதாதகாலம். படவேண்டிய வேளை. இனி ஒன்றுமில்லை....'' —இப்படி தாய்க்கு ஆறுதல் சொல்லிக் கொண்டே வந்தவனின் பார்வை தாய்க்கு அப்பால் இருந்த தங்கையின்மீது விழவே உணர்ச்சி வசப்பட்டவனாய், ''ஹும் ! நல்ல காலம் ! அநியாயமாக என் தங்கத்தை ஒரு பேராசைக்காரன் கையில், ஒரு கொலைகாரன் கையில் பிடித்துக் கொடுக்க இருந்தேனே? நல்ல வேளை, குழந்தை தப்பினாள் !'' என்று வார்த்தைகளைக் கொட்டிவிட்டான்.

தர்மாம்பாளும் ஜானுவும் அவன் என்னவோ பிதற்றுகிறான் என எண்ணினார்கள். ஜானு கேட்டே விட்டாள்.

''என்ன அண்ணா, பிதற்றுகிறாய் ?''

குருடன் போல் கண்ணை மூடியபடி ராஜு சிரித்தான்.

''பிதற்றவில்லை, ஜானு. தெளிவாகத்தான் பேசுகிறேன். உன்

ளைப் பிடிக்க வென்று சுற்றியலைந்த சனியன் இன்றோடு விட்டது. நய வஞ்சகன்! துரோகி! அடுத்துக் கெடுக்கும் சண்டாளன்!''

''யாரைத் திட்டுகிருய், ராஜு? ரகுவையா?....பட்டணத்தில் இருப்பவனை எதற்காக ஏசுகிருய்?....... உனக்கு....சரியான நினைவு...''

''சரியான நினைவோடு தான் பேசுகிறேன், அம்மா. அவன் பட்டணத்தில் இல்லை. போக்குக் காட்டி விட்டு இங்கேயே தான் இருந்திருக்கிருன். என்னை இந்தக் கதிக்கு உள்ளாக்கினவன் அவனே....''

''கோபு அண்ணுவைப் பார்த்து விட்டு....''

''கோபுவா?....''

''ஆமாடா, ராஜு. அவனைப் பார்த்துப் பயந்து இவள் உளறினுள். உடனே இங்கே வந்து பார்த்தால் நீ அலங்கோலமாகக் கிடந்தாய். டாக்டர் வந்து பார்த்துக் கொண்டிருந்த போது எஞ்ஜினியர் மைத்துனர் போலீஸ் இனஸ்பெக்டர் கோபுவை எங்கிருந்தோ பிடித்துக் கொண்டு வந்தார்....''

''எ...ன்....ன?....''

''ஆமாம். விசாரணைக்கு அவனைக் கொண்டு போயிருக்கிருர். ஒரு பிள்ளை உசிருக்கு மன்ருட, அதே சமயம் இன்னெரு பிள்ளை போலீஸ் விசாரணையில் நிற்க....... ஐயோ, என் உயிர் இன்னும் போகாமல் இருக்கிறதே?....''

தர்மாம்பாள் பிரலாபித்துக் கொண்டே போனுள். ராஜுவின் செவியில் எதுவும் ஏறவே இல்லை. தான் அருகே ரகுவைப் பார்த்திருக்க, கோபு குற்றவாளியாகி நிற்பதாவது என்ற குழப்பம் அவனை வாட்டத் தொடங்கிற்று. இதில் ஏதோ சுழிப்பு இருக்கிறதென்று உணர்ந்து கொண்டான். உடனே அவனுக்குத் தன் இரும்புப் பெட்டியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. தட்டுத் தடுமாறியவாறு எழுந்து உள்ளே சென்ருன்.

''ஐயோ! முப்பதாயிரத்துச் சொச்சம் ரூபாயாச்சே! அப்படியே திருடு போய்விட்டதே?'' என்று அலறினுன் ராஜு.

தர்மாம்பாள் ராஜுவின் அருகே நின்றபடி, ''ரகு....'' என்று ஏதோ சொல்ல வந்தாள். உடனே ராஜு, ''அம்மா'' என்று கூவி ஜாடை செய்து அவள் பேசுவதைத் தடுத்து விட்டான்.

சர்ப்பம் சீறுவது போல நீண்ட பெருமூச்செறிந்தான் ரகு. உணர்ச்சிகளின் கொந்தளிப்பினுல், சிந்தனையின் சிக்கல்களினுல் அவன் உடம்பு சூடேறியிருந்தது; நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

முன்னுள் இரவு சென்னையிலிருந்து கிளம்பிய ரகு ஒரு பெரிய தவறு செய்துவிட்டான். நேரே கீரனூர் வராமல் மாயவரத்தில் இறங்கினுன். கமலாவுக்குக் கோபு எழுதியிருந்த கடிதத்திலுள்ள விலாசத்திற்குச் சென்று கோபுவைத் தேடினுன்; கிடைக்கவில்லை. பகல் முழுவதும் வீண் பிரயாசை. இரவு ஊருக்குக் கிளம்பினுன். பஸ்ஸில் வந்தான். ஊர் எல்லையில் ரெயில்வேப் பாதையருகில் முட்டாக்கிட்ட ஓர் உருவத்தைக் கண்டு பின் தொடர்ந்தான். அந்த உருவம் கோபுவினுடையது போல் இருந்தது. அசப்பிலே பாலுவின் உருவம் போலவும் இருந்தது. ரகு பின் தொடர்ந்தான்.

ஆற்றங்கரை இறக்கத்தைச் சமீபித்தபோது—அதை விதி என்ற பெயரில்தான் குறிப்பிடவேண்டும் – அந்த விதியின் திட்டத்தால் அவன் சிறிது பின்தங்க நேர்ந்தது. ஆற்றில் இறங்கிக் கை கால் கழுவிக் கொண்டு அவன் பறக்கப் பறக்க ஊருக்குள் விரைந்தபோது அந்த உருவத்தைக் காணவில்லை.

ஆனுல்—

ராஜுவின் வீட்டுக் கொல்லைப் புறத்தைச் சமீபிக்கும் போது அதே முட்டாக்கிட்ட உருவம் எதிர்ப்படவே உஷாரானுன். அவனைப் பார்த்துவிட்ட அந்த உருவமும் உஷாராகி விட்டது. ஒன்றையொன்று தீர்க்க ஆயத்தமாக நிற்கும் காட்டு விலங்குகளைப் போல் நின்றிருந்த இரு உருவங்களில், முட்டாக்கிட்ட உருவமே முந்திக் கொண்டு பாய்ந்தோட முயன்றது. ரகு உடனே எட்டிப் பிடித்தான். மல் யுத்தம்!

டாக்டர் தம்மோடு வந்த ஆசாமியைக் கோயிலடிக்கு விரட்டினுர். அவன் அங்கு போய்ச் சொன்னதும் எல்லோரும் வந்தார்கள். போலீஸ் அதிகாரி தக்க சாட்சிகளை வைத்துக் கொண்டு அறையைச் சோதனை செய்தார்; பிறகு வீடு முற்றும் நோட்டமிட்டார். கொல்லைப் புறத்துக் கதவு திறந்து கிடப்பதைக் கண்டார். மேலும் பார்வையிட்டுக் கொண்டு கொல்லைச் சந்து வரையில் சென்றபோது அங்கே ஏதோ ஒரு பொருளைக் கண்டெடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டார். நட்ட நடு இரவிலே ஹரிகேன் விளக்கின் ஒளிகொண்டு எவ்வளவு பார்வையிட்டுவிட முடியும்? சந்தில் காலடிகள் சில மண்ணிலே பதிந்திருந்தன. சென்றதும் யாரோ இருவர் கட்டிப் புரண்டு எழுந்தது போலவும் மண்ணில் அடையாளங்கள் தென்பட்டன. அருகே இருந்த வேலிக் கால் அருகில் பளிச்சென்று வெண்மையாக இன்னெரு வஸ்துவைக் கண்டார். மறுபடியும் வீட்டின் உட்புறத்தைப் பார்வையிட்டபோது முற்றத்துச் சுவரில் கெட்டியான நூல் கயிற்றின் நுனியைக் கண்டு ஸ்தம்பித்து நின்ருர். கயிற்று நுனியில் இருந்த கொக்கி முற்றத்து இரும்புக் கம்பிப் பந்தலில், ஒரு கம்பியிலே மாட்டிக் கொண்டிருப்பதையும், இடைவெளி அதிகம் உள்ள வாரி ஓரத்திலே இரண்டு கம்பிகள் விலக்கப் பெற்றுப் பிரயாசையுடன் ஓர் ஆள் உள்ளே புக வழி செய்யப் பட்டிருப்பதையும் உணர ஒரு நிமிஷம் கூட ஆகவில்லை.

*

சில நிமிஷங்களில் முட்டாக்கு உருவம் தன்னை விடுவித்துக் கொண்டு ஓடியே போய் விட்டது. சந்து முனையில் இருந்த சர்வேக் கல்லில் மோதி முழங்காலிலும் கணுக்காலிலும் ரத்தக் காயம் ஏற் பட்டுக் கொடிய உபத்திரவத்திற்கு உள்ளாகி விட்ட ரகுவால் தொடர்ந்து ஓட முடியவில்லை. 'சிக்கிய இரைதான் தப்பிவிட்டது; அங்கே எந்த நிலையில் இருக்கிறது என்பதையாவது கவனிக்கலாம்' என்று கொல்லை வழியே உள்ளே சென்றான்.

கொல்லைக் கதவு திறந்தே இருந் தது. கூடத்தை அடைந்தபோது ரத்தக் கறைபட்ட கத்தி கண்ணில் பட்டது. அதை எடுத்துக்கொண்டு நடுக் கூடத்திற்குச் சென்றபோது ராஜுவின் நிலை தென்பட்டது. விடி விளக்கின் மங்கின ஒளியில், விழித் துக் கொண்ட ராஜு தன் அருகே கத்தியும் கையுமாய் ரகு நிற்ப தைக் கண்டான். ''அட பாவி, நீயா?'' என்றான்.

அதே சமயத்தில் தெருப்பக்கத் திலிருந்து யாரோ வருவது போல் சந்தடி கேட்கவே சட்டென்று பின் னுக்குச் சென்று இரண்டாங்கட்டு ரேழியை அடைந்தான். அப்போது 'ஆ! கோபு அண்ணு!' என்ற ஜானுவின் குரல் சமையற் கட்டி லிருந்து ஒலித்தது. தொடர்ந்து தர்மாம்பாளின் பேச்சும் கேட் கவே. 'இனி இங்கே நிற்க லாகாது' என்று முடிவு செய்து கொல்லைப்புறம் வழியாக மறைந்து சென்றான்.

இருள் ரகுவுக்கு உதவியது. நட வடிக்கைகளின் போக்கை எல்லாம் யாரும் அறியாமல் மறைந்திருந்து கவனித்தான். குற்றம் கோபுவின் மீது உருவாகி வருவதை அவனுல் சகிக்க முடியவில்லை. வெளிப்பட்டு, கோபு கமலாவுக்கு எழுதிய கடி தத்தைக் காட்டி இவ்வளவும் பாலு வின் வேலை என்று வாதிக்கலாமா என்று பலமுறை எண்ணினன். கடிதம் வெளிப்பட்டால் கோபு வின் மீது குற்றம் ஸ்திரப்பட ஏது வாகுமோ என்ற அச்சம் தலை காட்டிற்று. 'சந்தர்ப்பங்களின் விளைவாக ஒருவேளை, தன்னையே குற்றவாளியாக ராஜு தவருக எண்ணி யிருந்தால்....?' என்ற எண்ணம் தோன்றிய போது, அவன் அழுதே விட்டான்.

ரகுவின் உள்மனம் பேசியது :

'...இனிமேல் என்ன செய்வது? ஆமாம்; நான் கொஞ்ச நாளைக் குத் தலைமறைவாக இருந்து கொண்டுதான் சில காரியங்களைச் செய்யவேண்டும்........அப்பொழுது தான் சிக்கல்கள் தீரும்....!'

*

''உங்களைப் பற்றி நான் நிரம் பவும் கேள்விப் பட்டிருக்கிறேன். உங்கள் தம்பியைப் பற்றியும் இப் போது கேள்விப் படுகிறேன். வடி கட்டின அசடு அவன். உங்கள் வேண்டுகோளைப் புறக்கணிக்க எனக்கு மனம் வரவில்லை. ஆனல் அதற்காக முறை பிசகி நடக்கவும் சட்டம் இடம் தரவில்லை. நேருக்கு நேராக அவனை நானே பிடித் திருக்க அத்தனை சுலபமாக விட்டு விட முடியுமா? முதலாவது சட்டம். இரண்டாவது அவனும் கொஞ்சம் பட்டால்தான் திருந்துவான். மூன்ருவதாக நீங்கள் என்னிடம் மறைக்கும் விஷயம். இந்த மூன்றி னுலும் நான் அவனை விடுவிப்ப தற்கில்லை. 'கத்தியும் கையுமாக ஒருவனைப் பார்த்தேன்; அவன் என் தம்பி கோபு அல்ல' என் கிறீர்கள். பின் யார் என்ருல், 'தெரியவில்லை' என்கிறீர்கள்!''

''நான் என்ன செய்கிறது எஸ். ஐ. ஸார்? தெரிந்தால்தானே சொல்லலாம்?''

''பாலுவாக இருக்கும் என்று ஊரே அபிப்பிராயப்படுகிறது.''

''இருக்கலாம். ஆனல் அவனை நான் பார்க்கவில்லை.''

''சரி. சொல்லா விட்டால் போங்கள். எனக்கு நன்ருகத் தெரிந்து விட்டது, குற்றவாளி யாரென்று....!''

"அப்படியானல் கோபு விஷயம்?"

"பார்க்கலாம். இப்போதைக்குக் கூடவே கொண்டு போகிறேன். முடிந்தால் விடுதலை செய்து அனுப்புகிறேன்."

அதிகாரி ஜவான்களுடனும் கோபுவுடனும் புறப்பட்டுச் சென்ருர்.

ராஜு நெடுமூச்செறிந்தான்.

மூன்று நாட்கள் ஆகியும் கோபுவைப் பற்றித் தவகல் இல்லை. ராஜு மெல்ல எஞ்ஜினியரை அணுகி வினவினுன்.

"ராஜு, கோபுவைப் பற்றிய உன் கவலை வீண். சொல்ல வேண்டாம் என்றே இருந்தேன். நலிந்த உடம்பில் உன் மனசுக்குச் சிரமம் தரக்கூடாது என்பது எனக்கு. அங்கே கொண்டு போனவுடனேயே ஒரு வாக்குமூலம் பெற்றுக் கொண்டு அவனை விடுதலை செய்து விட்டார்களாம். இவ்வளவுக்குப் பிறகாவது அந்தப் போக்கிரிப் பயல் இங்கே வந்து உனக்கும் உன் அம்மாவுக்கும் ஆறுதலாகக் குடும்பத்திலே ஒட்டிக் கொண்டானு? நீ என்னவோ அவனுக்காகக் கரைகிருயே? வேலையைப் பார்!"

'கோபு விடுதலை பெற்றுவிட்டான்' என்ற செய்தி ஒன்றே அவனுக்கு அமுத மழையாக இருந்தது. அந்தச் செய்தியைத் தெரிவிக்கத் தாயைத் தேடிச் சென்ருன்.

அப்போது தபாற்காரன் கடிதம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்துச் சென்ருன். திருச்சியில் உள்ள நண்பர் ஒருவர் எழுதியது. "இங்கே ஒரு பெண்ணை நேற்றுக் கண்டேன். உன் உறவினளான பூரணி போலவே இருக்கிருள். ஆனல் அவளை வாழுங் காலத்தில் நான் பார்த்தது. இப்போது அடையாளம் தெரியவில்லை. ஆயினும் துணிந்து பேச்சுக் கொடுத்தேன். சரியாகப் பதில் சொல்லவில்லை. நான் விடவில்லை. அவள் பின்னே சென்று இருப்பிடத்தை அறிந்தேன். சில குழந்தைகளும் பருவமடைந்த ஒரு பெண்ணும் அவள் ஆதரவில் இருப்பதாக விசாரித்தறிந்தேன். எதற்கும் நீ உடனே கிளம்பி வரவும்," என்ற விஷயம் அக் கடிதத்தில் அடங்கியிருந்தது.

அதைப் படித்து முடித்ததும் பெருநிதியைக் கண்ட தரித்திரன் போல் துள்ளிக் குதித்தான் ராஜு. உடல் நிலையெல்லாம் பறந்தே போய்விட்டது.

தாயிடம் விடைபெற்றுப் புறப்பட்ட ராஜு இரவுதான் திருச்சியை அடைய முடிந்தது. இருட்டில் எங்கே சென்று யாரைத் தேடுவது?

காலையில் நண்பரோடு கிளம்பினுன். இருவரும் குறிப்பிட்ட இடத்தை அடைந்தனர். குறுகிய சந்து; இடிந்து கொண்டிருந்த பழைய வீடு. அதிலே பூரணியின் குடும்பம் வறிய நிலையிலே உழன்று கொண்டிருப்பதை ராஜு கண்டான். குழந்தைகளை நோக்கி, "அம்மா எங்கே?" என்ருன்.

"கடைக்குப் போயிருக்கிருள்," என்று பதில் வந்தது. அதே மூச்சில், "அதோ வந்துவிட்டாளே!" என்றன குழந்தைகள்.

ராஜு திரும்பிப் பார்த்தான். பூரணியேதான். அவனைக் கண்டதும் அவள், "ஐயோ ராஜு!" என்று வீரிட்டாள். அவள் கையில் இருந்த கூடை கீழே விழுந்தது. அதில் இருந்த அரிசி, உப்பு, புளி, மிளகாய், எண்ணெய் எல்லாம் கீழே நாற்புறமும் சிதறி ஓடின.

"ஐயோ ராஜு! மோசம் போய் விட்டேனடா! கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்து விட்டேனடா! பாவி பாலு பத்மாவைக் கொண்டுபோய் விட்டானே!......"

"ஐயோ, பத்மா!" என்று விண் முட்டும் குரலில் அலறினுன் ராஜு.

(தொடரும்)

என் முதல் கதை

ரா. ஆறுமுகம்

இருபத்தைந்து வருடங்கள் இருக்கும். அப்பொழுது வயது பதினாறு. மதுரையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் முதல் கதையை எழுதி, சென்னைப் பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பி வைத்தேன். ஒரு வாரத்திற்குள் பத்திரிகை ஆசிரியர் அதை எனக்குத் திருப்பி அனுப்பி விட்டார். அதற்காக நான் வருத்தமோ, கவலையோ அடையவில்லை. அதே கதையை வேறொரு பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு, இரண்டாவது கதை ஒன்றை எழுதி முதல் பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பினேன். அதையும் அவர் திருப்பிவிட்டார். நானும் சளைக்காமல் அதை இன்னொரு பத்திரிகைக்குத் தள்ளிவிட்டு, மூன்றாவது கதையை முதல்வருக்கு அனுப்பினேன். மூன்றாவதற்கும் அதே கதிதான் ஏற்பட்டது. இப்படியாக ஐந்து வருடங்களில் சுமார் இருபது கதைகள் எழுதி, அவற்றைப் பல பத்திரிகைகளுக்கும் அனுப்பி, ஆசிரியர்களுடைய 'நன்றி' யுடன் திரும்பப் பெற்றுப் பத்திரமாக வைத்துக்கொண்டேன்.

என் படிப்பு முடிந்ததும் சென்னையிலுள்ள இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றில் என் சகோதரர் வேலை வாங்கிக் கொடுத்தார். காலஞ்சென்ற எழுத்தாளர் திரு கு. ப. ராஜகோபாலன் அவர்களைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு அங்கு சென்ற சில மாதங்களில் கிடைத்தது. தினம் நானும் அவரும் கடற்கரைக்குச் செல்வோம். அங்கே பல எழுத்தாளர்களும் வந்து கூடுவார்கள். அவர்களெல்லாம் எனக்கு அறிமுகமானார்கள். கு. ப. ரா. என்னைக் கதை எழுதும்படி அடிக்கடி தூண்டிவந்தார். நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அனுப்பித் திரும்பப் பெற்ற கதைகளைப் பற்றி அவரிடம் சொல்லவில்லை. அவருடைய வற்புறுத்தலுக்கு இணங்க ஒரு நாள் சிறுவர்களுக்கான சிறுகதை ஒன்றை எழுதினேன்.

கண்ணன் என்ற சிறுவன் மிகவும் விஷமக்காரப் பையன். அவன் தாயார் எவ்வளவுதான் சொன்னாலும் அவன் கேட்பதே இல்லை. வீட்டிலிருக்கும் சாமான்களையெல்லாம் அடித்து உடைத்து நொறுக்கி விடுகிறான். தன் பையனின் இம்சை பொறுக்க முடியாத தாய், அவனைப் பயமுறுத்துவதற்காக அவன் கண்களில் வெங்காயத்தைப் பிழிந்து விடுகிறாள். நாள் முழுதும் அழுது துடிக்கிறான் பையன். மாலையில் அவன் தந்தை வந்ததும் விஷயத்தைத் தெரிந்து பையனைக் கூப்பிட்டுச் சமாதானம் செய்து, கண்களைக் கழுவி, ஊதி விட்டு, கண்ணைத் திறக்கச் சொல்கிறார். பையனும் கண்ணைத் திறக்கிறான்.

ஆனால், என்ன பரிதாபம்! கண்பார்வையை இழந்து விட்டான். ''கண் தெரியவில்லையே....'' என்று கதறுகிறான். தாயாருக்கு அது ஆச்சரியத்தையும் திகிலையும் உண்டாக்குகிறது. அதற்கு முன் எத்தனையோ குழந்தைகளுக்கு அவ்விதம் செய்து ஒரு விபரீதமும் ஏற்பட்டதில்லை. மேலும், கண்ணில் வெங்காயம் பிழிவது ஒரு வகையில் குளிர்ச்சி யளிக்கும் என்று கேள்விப்பட்டுமிருந்தாள்.

தன் பையனின் கண்களைத் தானே அவித்துவிட்ட தாயின் மனம் என்ன பாடுபடும்? அவளும் அவனோடு சேர்ந்து அழுது துடிக்கிறாள். உடனே தந்தை, டாக்டரிடம் ஓடுகிறார். டாக்டர், பையனின் கண்களைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, வெங்காயம் ஏதோ ஒரு வகை விஷவெங்காயமாய் இருந்திருக்க வேண்டுமென்றும், ஒரு வாரத்தில் குணமாகி விடுமென்றும் மருந்து போடுகிறார். அதன்படியே பையனுக்கும் கண் பார்வை மீண்டும் கிடைத்து விடுகிறது. அன்று முதல் பையனும் திருந்தி விடுகிறான். பெற்றோர்களுக்கும் அவனிடம் என்றுமில்லாத பிரியம் ஏற்படுகிறது. "கண் இழந்த கண்ணன்" என்ற இக்கதை 1930-ஆம் வருஷம் 'சுதேசமித்திரன் வாரப் பதிப்'பில் சிறுவர் பகுதியில் வெளியானது.

கதை சாதாரணமாக இருந்தாலும், அதில் தாயின் மனத்துடிப்பு மற்றவர்களின் மனத்தையும் உருக்குவதாக இருந்ததால், அது பத்திரிகையில் இடம் பெற்றது என்று நினைக்கிறேன். அதோடு எனக்குச் சன்மானமும் மூன்று ரூபாய் கிடைத்தது. இருபது வருடங்களுக்கு முன் அந்தச் சிறிய தொகை கிடைத்ததில் ஆச்சரியமில்லை.

உடனே நான் பத்திரிகையை எடுத்துக் கொண்டு போய் கு. ப. ரா.விடம் காட்டினேன். நான் கதை அனுப்பியதை அவரிடம் ஏற்கனவே சொல்லாததால் அவருக்கு ஆச்சரியமாகவே இருந்தது. "பேஷ், என்னுடைய முதல் கதையும் சுதேசமித்திரனில் தான் வெளியானது. உங்கள் முதல் கதையும் அதே பத்திரிகையில் வந்திருக்கிறது. என்னைப்போல் நீங்களும் பெயர் எடுக்கவேண்டும். மேலும் மேலும் எழுதுங்கள்," என்று ஆசீர்வதித்து உற்சாகப் படுத்தினார்.

பல இளம் எழுத்தாளர்கள் கதைகளை எழுதிக்கொண்டுவந்து அவரிடம் காட்டுவார்கள். அவற்றையெல்லாம் அவர் பொறுமையாகப் படித்துப் பார்த்து, சில திருத்தங்கள் சொல்வார்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கையில், அனுப்பித் திரும்பி வந்த கதைகளையே சில திருத்தங்களுடனும், தலைப்புக்களை மாற்றியும் பல பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். அவையனைத்தும் 'மள மள' வென்று பிரசுரிக்கப்பட்டன. என் கதைகளில் அநேகமாய் கிராமியக்காட்சிகளே சித்திரிக்கப் பட்டிருக்கும். அதற்குக் காரணம், நான் பத்து வயது வரைக் கிராமத்தில் வசித்ததேயாகும்.

என் முதல் கதை இருபது வருடங்களுக்கு முன் வெளியானது. இதுவரை இருநூறு கதைகளுக்கு மேல் பிரசுரமாகியிருக்கின்றன. ஆனால் எனக்குப் புகழ் அளித்தது "களத்து வாசலில்" என்ற சிறு கதைதான். 'சந்திரோதயம்' என்ற பத்திரிகையின் ஆண்டு மலரில் வெளியான அக்கதை, பின்னர் 'கதைக் கொத்து' என்ற புத்தகத்திலும் இடம் பெற்ற போது, பல தினசரிப் பத்திரிகைகள் புகழ்ந்து விமரிசனம் செய்தன. அக்கதையில் வந்த சம்பவங்கள் உண்மையாகவே நடந்தவை. அது என் மனத்தில் பத்து வருடங்களுக்குமேல் ஊறிக்கிடந்து வெளிப்பட்டதால்தான் அதற்கு அவ்வளவு சக்தியிருந்தது என்பதை உணர்ந்தேன். அம்மாதிரிக் கதைகளை எழுதிவந்த கு. ப. ராவும் அதைப் படித்து விட்டு ஆச்சரியப் பட்டார்.

ஆகவே, என் முதல் கதை "கண் இழந்த கண்ணன்" என்றாலும், புகழ் தேடித் தந்த கதை "களத்து வாசலில்" என்றே சொல்ல வேண்டும். அதனாலேயே இன்றும் பத்திரிகாசிரியர்கள் என்னை அம்மாதிரிக் கதைகளையே எழுத வேண்டுகிறார்கள். என்னை இந்தப் பணியில் ஊக்குவித்த அமரர் கு. ப. ரா.வை நான் மறக்கவே முடியாது. ★

மனை

எழுதியவர்:

இளமை முதலே இணைந்திருந்து பழகிய ஓர் இளம் கன்னியிடம் அவள் உள்ளத்தை விலையாகப் பெற்றுத் தன் உள்ளத்தை விற்றுவிட்டு, விதியின் விரட்டலால் பல காதம் கடந்து வசித்தான் அவன். காதல் மட்டும் இருந்தால் போதுமா? அதை வெற்றிப் பாதையில் செலுத்தப் பொருள்என்ற துடுப்பும் வேண்டுமல்லவா? அதை ஈட்டத்தான் நெடுவழி விரைந்தான் அவன்.

வண்டு

'மஹி'

★ அந்தக் காதலர்களைப் பிரிக்கிறது காலம். பிரிவின் பரிவுக்குத் தூதனுப்புகிறான் காதலன். தூது வண்டின் மூலம். வண்டிற்கும் ஒரு காதலி—அதுதான் மல்லிகைப் பூம்பாவை. இடையே ஒரு திருப்பம். அந்தத் திருப்பம் அக் காதலர்களின் இன்பக் கதையையே அல்லவா ஏடு திருப்பி விட்டது....!

இரண்டாவது ஆண்டு முடிய இன்னும் சில நாட்களே பாக்கி இருந்தன. ஓய்வு கிடைத்திருந்த ஒரு மாலையில், சோலையில் அமர்ந்து, ஓடிப்போன காலத்தை ஒரு கணக்கில் அடக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். கண்கள் மலரத் திறந்துதான் இருந்தன. எதிரில் உள்ளவை தெரியாத ஒரு அகநோக்கு; ஆழ்ந்த சிந்தனை.

நினைவுகள் காட்சி வடிவு பெற்றன.

"என்னை இங்கே தனியே விட்டு ஏகாதீர், அத்தான்!" என்றாள் அவள்.

"பொன்னே, மலரே, புதுத்
தென்றல் மாருதமே!
பொன்னைத் திரட்டிப் பொதி
யேற்றி உன்னருகில்
இன்னம் இரு ஆண்டில்
இங்குறைவேன் நிச்சயமாய்...."
என்றான் அவன்.

"இரு ஆண்டுகளா? அத்தனை யுகங்களா?...."

"வருநாளின் இன்பத்தின் வருகைதனை எண்ணிவிடில், இரு ஆண்டும் இரு கணமாய் இது போலே ஓடிவிடும்!"

"ஈராண்டின் முடிவிற்குள் இங்கு வரவில்லையெனில்....?"

"வாராதபோதன்றோ இக் கவலை? வருகின்றேன்!"

"வாராது போனீரோ, வடக்கிருந்து உயிர் விடுவேன்...."

இப்பொழுது புதுப் பிரச்சினை ஒன்று. அனறே தொடங்கி, நடந்தாலும் ஈராண்டுக்காலக் கெடுவிற்குள் காதலியை நெருங்கமுடியாது. முடங்கல் அனுப்பலாம். தூது விடுக்கலாம். யாரிடம்? எப்படி? அவனுக்கு வழி எதுவும் புரியவில்லை. அவன் என்ன, காளிதாசனா—கார்முகிலைத் தூதனுப்ப! கவியாக இருந்திருந்தால், கருங்குருவி, நாரை, காக்கை முதலியவற்றைத் தூது அனுப்பி இருப்பான். கடந்துவிட்ட காலத்தின் கவலையும், வந்த பணி முடியாத ஏக்கமும், காதலியிடம் அளித்த வாக்குறுதியின் பயமும் பெருமூச்சுகளாக அவனிடமிருந்து வெளிப்பட்டன.

'உஸ்' என்ற அந்தச் சத்தத்துடன் மற்றொரு 'ரிங்' என்ற ரீங்காரமும் கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஏதோ ஒரு வண்டு தெற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அதன் அவசரப்போக்கு அவனுடைய மன வண்டின் வேகத்தைப் போல இருந்ததோ?

"வண்டே! வண்டே! எங்கே செல்கின்றாய்?"

"தென்றல் வீசத் தேன்மலர்
பூத்துத்
தெற்கில் நிற்கும் இதழ்த்தேன்
பருக....!"

தன்னைப் போலவே, காதலியிடம் விரையும் வண்டுதான் சீக்கிரமாகத் தன் தூதைச் சுமந்து செல்லும் என்று எண்ணி அவன் வண்டை அண்டினான். தூதுரைக்க வேண்டினான்:

"வையம் மிதித்து வானம் பறந்து
கற்பனை என்னக் கடுகி விரைந்து
சொர்ப்பன மங்கை சொர்ண
நிறத்துக்
காதலி தன்னைக் காத்திரு இன்னம்
மாதமிரண்டில் மங்கையிடத்து
வருகுவேனென்று வண்டே
யுரைப்பாய்!"

நின்று கேட்கக்கூடப் பொறுக்காத வண்டு, வானமெழும்பிப் பறக்கிறது; பறந்துவிட்டது.

பல் காதம் கடந்து தெற்கின் தலைநகரில், திறந்தவெளி மேடைமிசை, பொற்பதுமை போன்ற பெண் ஒருத்தி, வடக்கின் திசை நோக்கி வருத்தத்தை மூச்சாக்கி உட்கார்ந்திருந்தாள்.

நறுமணம் மிகுந்த மலர் மாலை ஒன்று அவளது கைகளில் இருந்தது. வண்டு அவளைக் கண்டவுடன், காதலன் கூறிய அடையாளங்களை நினைத்துப் பார்த்தது.

அதற்குள், வண்டிற்கு தான் தேடி வந்த ஆசை மலர் மகளின் அருகு அமர்ந்து 'வந்துவிட்டேன்!' என்று சொல்லி வாரியணைத்துக்கொள்ள ஆசை எழவே, விரைந்தது. மலரை அதன் தாய் வீடான செடியில் காணவில்லை. 'எங்கே போனாள்?' என்று எண்ணித் தேடிற்று; மல்லிகை மங்கையைக் காணோம்!

அந்தத் துயரத்தில் பறந்து வந்த வண்டு மங்கையின் கைகளில் இருந்த மலர் மாலையைப் பார்த்தது. 'அடடா, மல்லிகைப் பெண் மாலையிலல்லவா இடம் பெற்றுவிட்டாள்!' என்று மனத்திற்குள் வருந்தியவாறு, மல்லிகைக் காதலியை அண்டி அணைந்தது வண்டு. செடியினின்று கிள்ளிவிட்ட காரணத்தால் அம்மலரிலே சொரிகின்ற தேன் இல்லை; மணம் இல்லை. தெய்விகத் தன்மை இல்லை. பிணமாகக் கிடந்த மலரைக் கண்டு வண்டு கதறியது.

இந்நிலையில், காதலனின் பிரிவால் வருந்தும் காரணத்தால் மலர் வாடை வருத்த, மங்கை மலரைக் கசக்கி எறிந்தாள். அந்தோ! மல்லிகைப் பெண்ணாள் சின்னாபின்னப் பட்டுத் தரையில் சுருண்டு விழுந்து விட்டாள்.

காணப் பொறுக்காத இக்காட்சியைப் பார்த்ததும் வண்டின் மனம் துடித்தது. தன் காதலி மடிந்து விட்டதைக் கண்டு தானும் மடிந்துவிட எண்ணியது. அந்த எண்ணம் எனும் காலத்துண்டிற்குள் ஓர் எண்ணம் – தன் காதலியின் இறப்புக்குக் காரணமான இம்மங்கையை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஒரு தீய நினைவு அக்கணமே உதித்தது:

காதலனின் தூதுச் செய்தியை மாற்றி உரைத்தது:

"மங்காய் மங்காய்!
மாதமிரண்டின்
முன்னர் உந்தன் மனமுடைச்
செல்வன்,
சென்னி கவிழ்த்துச் செத்ததைக்
கண்டேன்!"

ரீங்கார மொழியில் நீங்காத கவலைக் கனலை வாரி இறைத்தவுடன், வண்டு நினைத்தபடி நடந்தது.

அந்தக் கணமே மங்கை பதறி விழுந்து மடிந்தாள்.

வண்டின் மனத்தில் மகிழ்ச்சி; தன் காதலியைக் கொன்ற பெண்ணைப் பழி தீர்த்துக்கொண்ட நிறைவு. சற்றைக்கெல்லாம் திருப்தி வருத்தமாக மாறியது. தான் செய்த தவறு தன்னை வருத்

துவதை உணர்ந்தது. பைத்தியம் பிடித்துப்போய், இங்கு மங்கும் பறந்தது. வெண் மலர் மல்லிகையைப்போல நிறங்காட்டும் இடங்களில் எல்லாம் போய் அமர்ந்தது. அவற்றில் சில காட்டு மலர்கள். அவை தந்த தேன் மயக்கம் ஊட்ட அங்கும் இங்கும் அலேந்து பிறகு விண்முட்டிப் பறந்தது.

காலம் வண்டைவிட வேகமாய்ப் பறந்தது.

வடக்கே இருந்து காதலன் திரும்பி வந்தான் – தன் தூது கேட்டுத் தன் காதலி ஆவல் பொங்கக் காத்திருப்பாள் என்ற நினைப்பில்.

ஆனால்...? பாவம், காதல் மங்கையின் பிணத்தைக் கூட அவனால் பார்க்க முடியவில்லையே !

அவன் நெஞ்சு வெடிக்கக் கதறினன். அந்த நேரத்தில் வண்டு வந்து அவனைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

"வண்டே, நான் உன் மூலம் உனுப்பிய தூதை என் காதலியிடம் வந்து சொன்னயல்லவா?"

"சொன்னேன். உடனேயே மடிந்து போனள்..."

"ஆமாம், என்னுடைய வீணன காலதாமதம்தான் என் ஆருயிர்க் காதலியைக் கொன்றுவிட்டது...." என்று எண்ணிச் சித்தம் பேதலிக்க மீண்டும் எங்கோ புறப்பட்டு மறைந்தான்.

சிரித்த ரோஜாமீது அந்த வண்டின் கவனம் லயித்தது. உடனே பறந்தது. காதலி மாண்டதும் மனமொடிந்து எங்கோ மறைந்த அக் காதலனின் நினைவு வந்தது. தன் உயிர்த்துடிப்பான மல்லிகைப் பாவையின் வீழ்ச்சியும் நெஞ்சில் ஒடிற்று. ஒரு கணம் — ஒரு துளி கண்ணீர் !

ஆனல்....

சிரித்த ரோஜா ஏந்தி நின்ற மது, அவ்வண்டை சுவர்க்கத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தது ! ★

ஒரு சொல் கேளீர் :



யார் அறிஞர் ?

ஒரு சமயம் எடின்பர்க் வீதி ஒன்றின் வழியாக பிளாக்கி என்ற அறிஞர் சென்று கொண்டிருந்தார். அவரது கழுத்தைச் சுற்றியிருந்த சுருள் சுருளான, பளபளக்கும் கேசத்தைக் கண்டு யாவரும் வியப்படைவதுண்டு.

தெருவின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த சக்கிலியச் சிறுவன் ஒருவன் அறிஞர் முன்சென்று, "பூட்ஸுக்குப் பாலிஷ் போடட்டுமா ?" என்று கேட்டான்.

அச்சிறுவனின் அழுக்கேறிய கழுவப்படாத முகத்தைப் பார்த்த அறிஞர் அருவருப்படைந்து, "இந்தா, இந்த ஆறு பென்ஸை எடுத்துக் கொண்டு போய், முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவிக் கொண்டு வா !" என்ருர்.

அச்சிறுவன் மறுகணமே அருகிருந்த குழாய்க்குச் சென்று கைகளினல் முகத்தை நன்ருகக் கழுவிக் கொண்டு வந்து அறிஞர் முன் நின்ருன். அவனது பளிச்சென்றிருந்த முகத்தைப் பார்த்து அறிஞர் திகைத்தார்.

சிறுவன் அவர் முன் வந்து, "ஸார், இதோ உங்கள் பணம். உங்களுடைய தலே மயிரை வெட்டிக் கொள்ள உபயோகித்துக் கொள்ளுங்கள் !" என்ருன்.

Pilot
WORLD FAMOUS
PILOT INK
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST. MADRAS-1. FACTORY RED HILLS. MADRAS.

'ராதாஸ்'
உயர்தர ரொட்டிகள், பன்கள்,
பிஸ்கட்கள், பேன்ஸி கேக்குகள்,
தினசரி தயாரிப்பவர்கள்.
Radha's
MEANS
FRESHNESS & DELICIOUSNESS
for
ONE AND ALL
ESTD: 1939.
BAKERS & CONFECTIONERS
RADHA'S
Biscuits
FRESH FROM THE OVEN
REGD NO. 122117
BREAD
RADHA BISCUIT FACTORY
BAKERS & CONFECTIONERS
161, MINT STREET, MADRAS-1
உரிமையாளர்: டி.பி.ஜி.சாமி
ராதா பிஸ்கட் பாக்டரி
பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்
161, தங்கசாலை தெரு, மதராஸ்-1

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருன 'மணிமேகலை'யில் இடம் பெறும் 'ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை'யின் அடித் தளத்தில் அரங்கேறுகிறது இந்நாடகம். இக்காதையின் சத்து: இனவேறுபாட்டை மறுப்பது; உயிர்க்குலப் பணியை வலியுறுத்துவது.

அணைந்த வேள்வி

காட்சி: 1.

காலம்: **சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஒரு நாள் பகல்.**

களம்: **ஆபுத்திரன் இல்லம்.**

பாத்திரங்கள்: **பசு, ஆபுத்திரன்.**

[யாகத்திற் பலியிடக் கட்டப்பட்ட பசு கதறுகிறது.

"அம்மா ஆ"

பசுவின் குரல், உயிர்களை ஒரு கயிறுபோல் கட்டிப் பிணிக்கிறது. நீண்ட பெருமூச்சு வெளிப்படுகிறது. அது, பெருங்காற்றைப் போல் சீறிப் பாய்கிறது.

கோயில் உச்சியில் ஆடும் இலை மணிகள் ஆயிரம் குரல்களைப் போல் ஒலிக்கின்றன.

"அம்மா ஆ..."

அந்தணர் இல்லங்களிற் கூரைகள் ஆடுகின்றன. கர்ப்பத்தில் துயிலும் சிசுக்கள் குரலெடுத்து அழுகின்றன; கர்ப்பிணிகள் நடுங்குகின்றனர்.

"அம்மா ஆ...."

இல்லங்கள் தோறும் கதவுகளைத் 'தடதட' வென்று ஆயிரம் கைகள் தட்டுகின்றன.]

ஆபுத்திரன்: (திடுக்கிட்டு) யார் கதவைத் தட்டுவது?

குரல்: 'அம்மா ஆ....'

ஆபுத்திரன்: கதவைத் தட்டுவது யார்?

குரல்: 'அம்மா ஆ....'

ஆபுத்திரன்: கதவைத் தட்டுவது குழந்தையா?

குரல்: 'அம்மா ஆ....'

ஆபுத்திரன்: அம்மா....!

குரல்: 'அம்மா ஆ....'

ஆபுத்திரன்: என் அன்னை கதவைத் தட்டுகிருள்.

வேற்றுக்குரல்: ஆ....ம்!

[ஆபுத்திரன் கதவைத் திறந்து எட்டிப் பார்க்கிருன்.]

குரல்: 'அம்மா ஆ...'

ஆபுத்திரன்: கதறும் குரல் கேட்கிறது.... கதவைத் தட்டியது யார்?

வேற்றுக்குரல்: உன் இதயத்தில் ஊறும் பாசம் – அது, உன் மனக் கதவைத் தட்டுகிறது.

குரல்: 'அம்மா ஆ....'

(ஆபுத்திரன் கூர்ந்து கேட்கிருன்.)

ஆபுத்திரன்: (தன்னுள்) வேள்விச் சாலையில் பசு கதறுகிறது....!

வேற்றுக்குரல்: உன் அன்னை கதறுகிருள்.

ஆபுத்திரன்: ஆம், என் அன்னை கதறுகிருள்.

குரல்: 'அம்மா ஆ....'

ஆபுத்திரன்: அம்மா ஆ........

[காற்றைக் கிழித்துக் கொண்டு ஆபுத்திரன் வெளியே ஓடுகிருன்.]

காட்சி: 2.

காலம்: **பகல்**

களம்: **வேள்விச்சாலை.**

பாத்திரங்கள்: **ஆபுத்திரன், அந்தணர், பசு.**

[வேள்விச் சாலையில் பசு கட்டப் பட்டிருக்கிறது. முறுக்குக் கயிறு அப்பசுவின் கழுத்தை நெருக்குகிறது. அதன் விழிகளில் நீர் வடிகிறது.

ஆபுத்திரன் ஓடோடி வந்து பசுவைத் தழுவிக் கொண்டு கதறுகிறான் சத்தம் கேட்டு அந்தணர் ஓடி வருகிறார்.]

அந்தணர்: யார் அது? ஆபுத்திரனா? 'ஆ'வைக் கட்டிக்கொண்டு ஏன் அழுகிறாய்? உனக்குப் பைத்தியமா?

ஆபுத்திரன்: (கேலியாக) அந்தணரே, உமக்குத்தான் பைத்தியம், வெறி, கொலைவெறி!

அந்தணர்: தூர்த்தா, என்னையா பழிக்கிறாய்? என்ன செய்கிறேன், பார்!

[அந்தணர் சீற்றத்துடன் பாய, ஆபுத்திரன் தப்பி ஓடுகிறான்.]

காட்சி: 3.

காலம்: **காலை**

களம்: **வேள்விச் சாலை**

பாத்திரங்கள்: **அந்தணர்கள், அந்தணர் குரு, ஆபுத்திரன், அவனுடைய வளர்ப்புத் தந்தை இளம்பூதி, பசு முதலியோர்.**

[வேள்விச் சாலையில் கட்டிக் கிடந்த பசுவைக் காணாமல் அந்தணர்கள் திகைக்கின்றனர்.]

அந்தணர்: பசு எங்கே?

அந்தணர் குரு: ஆபுத்திரன் வேலைதான் அது! பகலில் என்னைப் பழித்தான். இரவில் பசுவைத் திருடினான். இது, அந்தணர் குலத்துக்கே அவமானம்....!

அந்தணர் 2: சண்டாளன்.....!

அந்தணர் 3: நீசன்....!



[சிலர், ஆபுத்திரனைப் பசுவுடன் பற்றி இழுத்து வருகின்றனர்.]

அந்தணர் 4: கையும் களவுமாய்ப் பிடிபட்டான் கள்வன்!

அந்தணர் 1: "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று."

அந்தணர் குரு: அற்புதம்!

[பற்களை நெறுநெறுவெனக்கடித்து, ஒரு மிலாறு கொண்டு ஆபுத்திரனைத் தாக்குகிறார்.]

ஆபுத்திரன்: அந்தணரே, பொறும்!

அந்தணர் 4: தோலை உறியும்!

அந்தணர் 1 : வேத நெறி அறியாதவன் வேள்வியின் எதிரி, தூர்த்தன், துஷ்டன். இவனை அந்தணர் குலம் தீண்டலாகாது !

['அந்தணரே, பொறும்', என்று கத்துகிறான் ஆபுத்திரன். "அம்மா ஆ' என்று வீறிடுகிறது பசு.]

அந்தணர் 1: நகர்ந்து விடுங்கள். பசு முட்ட வருகிறது...!

அந்தணர் குரு : ஹூம்.... இந்தக் குலத் துரோகியை அடித்து நொறுக்காமலா நான் வருவேன் ?

['சுளீர்' என்ற ஒலி யெழுப்பி மிலாறு சுழலுகிறது. ஆபுத்திரனின் உடலில் ரத்தங் கட்டுகிறது.

மூர்க்கத்துடன் ஓடி வந்த பசு குருவின் வயிற்றிற் பாய்ந்து, கொம்புகளால் குத்துகிறது. குரு 'ஐயோ' என்று கதறி, மண்ணிற் சாய்கிறார். அவர் குடரைக் கிழித்துக் கொம்புகளில் ஏந்தி ஓடுகிறது பசு.]

ஆபுத்திரன் : அந்தணர்களே, பசுவா உங்களுக்குப் பகை ? உங்கள் கையால் விதைக்கப் படாமல், இயற்கையன்னையின் மடியில் வளரும் பசும் புல்லை உண்டு, உலகு தோன்றிய நாள் முதல் உயிர்களுக்குப் பால் சுரந்து தரும் பசுவையா வதைப்பது ? இதுவா அருள் ? இதுவா அறநெறி ?

ஆபுத்திரன் : இறந்த அந்தணன் பிணமானான். உங்கள் வேள்வி இவனை எழுப்புமா? இறந்தோரை எழுப்பமுடியாத நீர் பிறந்த உயிர்களைக் கொல்வதா? நீங்கள் கொன்ற அதே கொலை உங்கள் உயிரையும் தொடரும்........!

அந்தணர் 1 : இவன் நாத்தழும் பேறிய நாத்திகன்....!

அந்தணர் 2 : இவன் பிறப்பே இழி பிறப்பு. கூடா ஒழுக்கத்தாற் பிறந்த குலஹீனன். குழந்தையில் இவனுக்குப் பாலூட்டியது பசு. பசுவுக்கும் பரத்தைக்கும் பிறந்தவன் இவன் !

ஆபுத்திரன் : அந்தணர்களே, உங்கள் இருடிகளைப் பற்றி நான் அறிவேன். புராணங்களும் எனக்குத் தெரியும். கேளுங்கள் :

ஆண் மகன் அசலன்
மான் மகன் சிருங்கி
புலி மகன் விரிஞ்சி
புரையோர் போற்றும்

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும்கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-1

**நரிமகன் அல்லனே
கேசகம்பளன் ?
ஈங்கிவர் நுங்குலத்து
இருடி கணங்களென்று
ஓங்குயர் பெருஞ் சிறப்பு
உரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த
அழிகுலம் உண்டோ ?**

[ஆபுத்திரனின் வளர்ப்புத்தந்தை இளம்பூதி வருகிருர்.]

இளம்பூதி: ஆபுத்திரா, என்ன இது ?

அந்தணர் 1: (ஆத்திரம் பொங்க) ஐயா, அந்தணரை அழிக்கவா இவனை வளர்த்தீர் ?

ஆபுத்திரன்: அந்தணரே, சினம் அறிவை அழிக்கும். வேள்வியால் உயிரைக் கொல்வதா ?

அந்தணர் 1: கேள்வியைப் பார்த்தீரா ?

அந்தணர் 1: அந்தணரே ! நம் குருவைக் கொன்றவன் இந்தக் கொலைஞன். இவன் குலத்துரோகி. இவனை உம் அகத்தில் சேர்த்தீரோ ஏழு ஜென்மத்திலும் பிரம்மஹத்தி உம்மை விடாது.

ஆபுத்திரன்: தந்தையே, அவர் வினையால் அவர் இறந்தார். விதைத்ததை அறுத்தார். கொலை விதைத்தவன் கொலையை அறுப்பான், நெல் விதைத்தவன் நெல்லை அறுப்பது போல !

அந்தணர்: பார்த்தீரா, பிராமணரே ? — வேதங்களின் வேள்வி கொலையாம் !

ஆபுத்திரன்: தந்தையே, பசுவைக் கொல்ல நினைத்து, அதை வருத்தினர் அந்தணர். நான் பசுவை மீட்டேன. என்னை ஒறுத்தார். பசுவுக்கும் பாசம் உண்டல்லவா ? அது பாய்ந்து, அந்தணரின் குடரைக் கிழித்தது. அவர் விழுந்தார். வேள்வி அணைந்தது. உயிர்களின் அறம் வென்றது !

['சிவ சிவ' என்று அந்தணர்கள் செவியைப் பொத்துகின்றனர்.]

வளர்ப்புத் தந்தை: ஆபுத்திரா, நீ அந்தணர் இல்லில் வளர்ந்தாய். நான் உன்னை வளர்த்தேன்.

ஆபுத்திரன்: வளர்ப்பதும் காப்பதும் அருள்; உயிர்களின் இயற்கை.

வளர்ப்புத் தந்தை: உன் செயல் அருள்தானு ?

ஆபுத்திரன்: நீங்கள் என்னைக் காத்ததைப் போல நான பசுவைக் காத்தேன்.

அந்தணர் 1: இல்லை, திருடினன்.

வளர்ப்புத் தந்தை: அது குற்றந் தானே ?

ஆபுத்திரன்: கொலை செய்வது குற்றமல்லவா ?

அந்தணர் 3: இவன் நாஸ்திகன். இவனுடன் நம்மால் பேசமுடியாது.

ஆபுத்திரன் : அறிவிலிகள்........!

வளர்ப்புத் தந்தை : ஆபுத்திரா, நான் உன்னை வளர்த்தது அறிவற்ற செயல்தான்....

ஆபுத்திரன் : தந்தையே, நான் சொல்லவில்லை !

வளப்புத் தந்தை : இனி நான் உனக்குத் தந்தையல்ல. என் அகத்தில் கால் வைக்காதே !

ஆபுத்திரன் : தந்தையே, உலகம் அகண்டாகாரமானது! உயிர்களைக் காக்கவே அது பிறந்தது ! சிறிய இல்லத்தில் உங்களுக்கு மகனாக இருந்தேன். இனி பெரிய உலகில் உயிர்களுக்கு மகனாக இருந்து சேவை செய்வேன்.

வளர்ப்புத் தந்தை : ஆபுத்திரா, நான் ஆசீர்வதிக்கிறேன்.... நீ போய் வா....!

ஆபுத்திரன் : (குரல் தழுதழுக்க) தந்தையே, இதோ செல்கிறேன். உங்கள் நன்றியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். உயிர்க்குலம் அழைக்கிறது. நான் செல்கிறேன்.

[வளர்ப்புத் தந்தையாம் இளம்பூதியை வணங்கிப் பிரிகிறுன் ஆபுத்திரன். அப்பெரியவர் விம்மி விம்மி அழுகிறுர்]

அந்தணர் 1: ஐயோ, பைத்தியக்காரப் பிராம்மணரே ! நீர் எதற்காக அழவேண்டும் ? நம் குருவின் மறைவுக்கு அழாத நீர், அந்தக் குடிகேடனுக்காக ஏன் அழுகிறீர்?

வளர்ப்புத் தந்தை : பாசம் என்னவென்று உமக்குத் தெரியாது. அவன் என் மகன். பதினெட்டு ஆண்டுகள் வளர்த்தேன். என் கையால் வளர்ந்தான். அவன் ஒரு ஞானி; அந்தணர் குலத்தில் அவனைப்போல் இனிப் பிறக்கப் போவதில்லை. ஆபுத்திரா ! அந்தோ, ஆபுத்திரா ....!

[ஆபுத்திரனின் வளர்ப்புத் தந்தை இளம்பூதி விம்மி அழுகிறுர்........ பின்னணியில் 'அம்மா ஆ!' என்ற குரல் ஒலிக்கிறது.]

(திரை) ★



மதிப்புரை

கலைஞர் டி. கெ. சண்முகம் அவர்கள் நாடக உலகிலே புதுமையைச் செய்து காட்டினார்; அதில் புரட்சி குரல் கொடுத்தது. உதாரணம்: 'மனிதன்', 'இன்ஸ்பெக்டர்', 'ராஜராஜ சோழன்', 'வாழ்வில் இன்பம்' ஆகியவை. முதலிரண்டு நாடகங்கள் புதுமைத் தளத்தில் புரட்சிக் கருத்துக்களை ஒலிபரப்பின. 'ராஜராஜ சோழன்' நாடகம் பண்டைத் தமிழர் பண்பாட்டுக்கு, சோழகுலப் பெருமைக்கு ஒரு மைல்கல். வாழ்வில் இன்பம் அளிக்கும் வகையில், புதுமணத் தம்பதிகளின் எதிர்கால நல் வாழ்வுக்குப் படிப்பினை ஊட்டும் ரீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது 'வாழ்வில் இன்பம்'. நாடகத் துறைக்கு இம்முயற்சி ஒரு கலங்கரை விளக்கம்.

ரசிகர்களின் பண்புள்ள இதயங்கள் வாழ்த்துரை வழங்கும் 'ராஜராஜ சோழன்', 'வாழ்வில் இன்பம்' ஆகிய இரண்டு நாடகங்களைக் காணத் துடிப்பவர்களுக்கு, மறுமுறையும் பார்க்க ஆசைப்படுகிறவர்களுக்கு இவ்விரு நூல்களும் கைவசம் இருந்தால், சிறப்பாயிருக்குமல்லவா? அதற்காகத்தான், இவ்விரு நாடகங்களும் நூல் வடிவு பெற்றிருக்கின்றன.

ராஜராஜ சோழன்: ஆசிரியர்: அரு. இராமநாதன்; **வெளியீடு:** பிரேமா பிரசுரம், சென்னை-26; விலை ரூ. 2-4-0.

வாழ்வில் இன்பம்: ஆசிரியர்: 'அகிலன்', பழனி பிரசுரம்: சென்னை-5. விலை ரூ. 1-8-0

*

வளரும் தமிழ் இலக்கியத்தில் சிறுகதை வளர்ச்சியின் பங்கு எத்தனை சதவிகிதம் என்ற ஒரு கேள்வியைக் கேட்டுப் பார்ப்போமானால், உரிய பதில்—உண்மையான பதில் சரிவரக் கிடைக்காது. ஆனால், பெருமூச்சுமட்டும் கிடைக்கும். முன்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இலக்கிய எழுத்தாளர் மாநாடு ஒன்று நடந்தது பாருங்கள், அப்போது நம் அருமைத் தமிழ்ச் சிறுகதை வல்லுனர் ஒருவர் மேற் சொன்ன பொருளில்தான் 'பொடி' வைத்துப்பேசினார். எதற்கெடுத்தாலும், மேலைநாடு, மேலைநாடு என்று பேனாவில் எழுதி வெளியிட்டு விட்டால் மட்டும் போதுமா? சிறுகதை வளர, சிறுகதை எழுத்தாளர்கள் வாழ வகை செய்ய வேண்டாமா?

அமரர் புதுமைப்பித்தன் சிறுகதை மன்னன். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றும் எழுத்தாளர்கள் இன்று நம் தமிழ் நாட்டில் பலர் உண்டு. அவர்களுள், திரு ஜெயகாந்தன் குறிப்பிடத் தகுந்தவர்.

''உதயம்'' என்ற சிறுகதைத் தொகுப்பில். 'பிழைப்பு', 'சுமைபேதம்', 'மீனாச்சி ராஜ்யம்' ஆகிய மூன்றும் சிறப்பாக விளங்குகின்றன.

ரிக்‌ஷாக்கார மருதையா, பிச்சைக்காரி மீனாச்சி — இவர்கள் இருவரும் மறக்க முடியாத சித்திரங்கள்.

உதயம்: ஆசிரியர்: ஜெயகாந்தன். **வெளியீடு:** விஜயா பிரசுரம், சென்னை-8. விலை: அணா 12.

*

தமிழகம் வேண்டுமா?: இந்தச் சந்தர்ப்பத்துக்கு நல்ல தொரு கேள்வி தான இது—தமிழகம் எல்லைகளைப் பறி கொடுத்து விட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையிலே—தன் உரிமையை மீட்கப் போராடிக்கொண்டிருக்கும் வேளையிலே. நாம் கோரும் தமிழரசு பற்றிய விரிவான சரித்திரம் இதில் கூறப் பட்டுள்ளது.

தமிழகம் வேண்டுமா? ஆசிரியர்: குடந்தை எஸ். டி. பாலு; **கிடைக்குமிடம்:** பி. கே. நடராஜன், 151. வக்கில் புதுத் தெருவு, மதுரை.

—'பிறைசூடி'

கோஹினூர்

"பாலா"

10. கோஹினூர்!

பூவைமா நகரில் எங்கு பார்த்தாலும் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அதற்குரிய காரணங்கள் அவ்வூர் ஆரம்பப் பள்ளி, உயர்தர ஆரம்பப் பள்ளியாக அன்றுதான் உயர்த்தப்பட்டது; அந்தக் கிராமத்தில் அன்றைக்குத்தான் புதிதாக தபாலாபீஸ் திறக்கப்பட்டது. பிறகு, சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா, என்ன?

புது உலகிலே சஞ்சரிப்பதாக அப்பொழுது பூபாலனுக்குத் தோன்றியது.

'போன வாரம் இதே நேரத்துக்கு அறந்தாங்கி ஜெயிலிலே அடைபட்டுக் கிடந்தேன், ஆண்டவன் புண்ணியத்திலே தலைக்கு வந்தது தலைப்பாகையோடே போயிடுச்சு. நல்லவங்க ஒரு நாளும் கெடுவதில்லைன்னு தமிழ் வாத்தியார் அடிக்கடி பாடம் படிச்சுக் கொடுப்பாங்க — அது நூற்றுக்கு நூறு நிஜந்தான்!.... அந்த சர்க்கஸ்காரன் பலே ஆள்தான்!... நெஞ்சில்லாத, இரக்கமில்லாத அந்தப் பாவிக்கு நெஞ்சுள்ள, இரக்கமுள்ள அல்லி மகளாப் பிறந்திருக்குது.... நத்தை வயிற்றிலே முத்து பிறக்கிற கதைதான்!.... ஆனா, தங்கச்சி பூங்கோதை. பூங்கோதையேதான்! அது உடம்பெல்லாம், அன்பு; பேச்செல்லாம் அன்பு; செய்கையெல்லாம் அன்புதான்! அது மாதிரியேதான் அதோட அப்பாவும்!.... நான் ஏழை வீட்டுப் பையன்; அதுவோ பணக்காரங்க வீட்டுப் பொண்ணு. மலையும் மடுவும் சடுகுடு விளையாடற கதைதான்! ஆண்டவன் பலே கில்லாடிதான்! படைப்பின் புதிர் ரொம்ப அதிசயம். அதைக் காட்டிலும் அதிசயம் வாழ்க்கையின் புதிர்!'

வயதிற்கும் அப்பாற்பட்ட வரம்புக் கோட்டில் நின்று அவன் எண்ணங்கள் ஓடின. சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் முகத்தைப்பார்த்துக் கொண்டான்; புதுச் சட்டை, நிஜார் மாற்றினன். வாரி விடப்பட்ட கிராப்பில் ஒரே ஒரு மயிரிழை அவன் நெற்றியோடு மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தது. சிரித்துக் கொண்டே ஓடினன்; அவனை முந்திக் கொண்டு, ஏப்பம் ஓட்டமாக ஓடியது. ஆறு இட்டிலி, இரண்டு தோசை, ஒண்ணரை டம்ளர் அசல் காப்பி என்றால், காசா லேசா?

சிறுவன் பூபாலன் கீழத்தெருவிலிருந்து ஓடி வந்தான்.

"தம்பி, உன்னை விடுதலை பண்ணிட்டாங்களாமே?.. நல்லவேளை, தம்பி!" என்றார் காந்திஜி நூல் நிலையக் காரியதரிசி சோமசுந்தர ஆசாரி.

"அடடே, மிஸ்டர் பூபாலனா?... உன் பெயர் ஞாபகம் வந்ததும், உடனே எனக்கு நம் ஊர் எழுத்தாளர் ஒருவரின் புனை பெயரும் ஞாபகத்துக்கு வந்துவிடும்!.... டீ சாப்பிடப்பா! அடைக்கலம், இரண்டு டீ போடு ....ம்!.... அப்படியே உட்காரப்பா! பட்டணத்து வாடை அமர்க்களமாய் வீசுதே? ஆமா, நீ மறுபடியும் பட்டணத்துக்கு டேரா தூக்கப் போறியா? உங்க அப்பாரு இங்கேதான் வெள்ளாமை விளைச்சலைப் பார்த்துக்கிட்டு இருக்கப் போறதாகச் சேதி கிடைச்சுதே?.... மெய்யா? அந்த ஷோக்காரனை 'அரெஸ்ட்' பண்ணிட்டாங்களாமே?" என்று கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போனார் பாலகிருஷ்ணன்.

தன் எதிர்காலத் திட்டம் பற்றிய கேள்விகள் எழுந்த போது பூபாலன் நறுக்குத் தெறித்த மாதிரி கூறின பதில் இதுதான்: "ஆமா, எனக்குப் பட்டணம் அறவே பிடிக்கவில்லை. நல்லவங்களுக்கு வரக் காத்திருக்கிற ஆபத்துக்களுக்குக் கணக்கு மில்லே; வழக்கு மில்லே. இதுதான் என் பிறந்த ஊர். இங்கேதான் நான் படிக்கப் போறேன்....அப்பாவோடு நானும் வெள்ளாமை செய்

யக்கூடப் பழகிக் கிடுவேன். எங்களைப் போன்ற ஏழை பாழைங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கிற பெரிய மனிதர்கள்தாம் என்வரை தெய்வங்கள்!''

தப்பித்தோம் பிழைத்தோம் என்று நடந்து வந்தான் பூபாலன். வழியில் அவனுடைய நண்பர்கள் மனோரஞ்சிதம், தங்கவேலு, வீரமணி, சிங்காரம், ராஜாக்கண்ணு, துரைராசன், தியாகு முதலியோர் குறுக்கிட்டார்கள்.

''பலே, முன்பு, நம் ஊர்க்கார எழுத்தாளர் பெயர் திரையிலே வந்தது; இப்போது நம் பூபாலனைப் படத்திலே சந்திக்கப் போகிறோம். பூவைமாநகர் இப்போது தான் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.''

''ஆமா, ஆமா! அது போலவே இந்த ஊர்க்காரங்க எல்லாரும் ஒருவருக்குள்ளே ஒருவர் வம்படிச்சிக்கிடாம, கட்சி மனப்பான்மையை மறந்து, ஒற்றுமையாகி, பூவைமாநகர் என்ற பேரிலே கூட்டுக் குரல் எதிரொலிக்கும் நாள்தான் இந்த ஊருக்கு விடிவு நாளாகும்!'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு எடுத்துச் சொன்னான் பூபாலன்.

அப்பொழுது—

அவன் அருகாமையில் ஒரு பெரிய நாய் வாலைக் குழைத்துக் கொண்டே வந்து நின்றது.

ஒரு கணம் தொடுத்த கண் எடுக்காமல் அந்த நாயைப் பார்த்துக் கொண்டிருந்தான் பூபாலன். 'குபுக்'கென்று கண்கள் கலங்கிவிட்டன. அந்த ஒரு நாள் – கப்பலோட்டிய தமிழனுக்குச் சிரம் வணங்கிக் கரம் கூப்பி அஞ்சலி செய்து திரும்புகையில், கார் விபத்துக்கு ஆளாகி உயிர் துறந்த தாய் நாய் விட்டுச் சென்ற அந்த நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடிய சம்பவத்தை அவன் எப்படி மறப்பான்?...வீட்டுக்கு வந்ததும் அந்த நாய்க்குட்

> காலம் மாறக்கூடியது; மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாருத சமுதாயம் மறைந்து விடும்.
>
> — சி. என். அண்ணுதுரை

டிக்கு உண்டான எதிர்ப்புகளைச் சமாளித்து அதைத் தன்னேடு வைத்துக் கொண்டு வளர்க்கத் திட்டமிட்ட போது, அது காணுமற் போன நிகழ்ச்சியைத் தான அவனுல் மறக்க முடியுமா? இல்லை, காணுமற்போன அவனுடைய அருமை நாய்க் குட்டியை சினிமா ஸ்டுடியோவில் கண்ட கண்கொள்ளாக் காட்சியைத் தான் அவன் மறப்பான? கடைசியில், சர்க்கஸ் காரன் சுகுமாரின் கம்பெனியில் 'பார்' விளையாடினன் அல்லவா? அப்போது, முன் கூட்டியே முடிவிட்ட திட்டத்தின்படி அவன் அந்த நாய்க் குட்டியுடன் தப்பி வாசலுக்கு வெளியே நின்ற பூங்கோதையின் காரில் குதிக்க எத்தனம் செய்த போது, சர்க்கஸ் காரன் குறி வைத்துச் சுட்டதை நீங்களே நினைவு வைத்துக்கொண்டிருப்பீர்களே? அப்பொழுது அவன் மட்டுமே தப்பினன். நாய்க் குட்டி சர்க்கஸ் கூடாரத்தில் அகப்பட்டு விட்டதாக எண்ணியிருந்தான்!.... ஆனல், பாவம், அடுத்த நாள் பத்திரிகையில் தான் தப்பிய விவரத்தைப் பற்றியும் அவனுடைய நாய் சுகுமாரனல் சுடப் பட்டு மாண்டதைப் பற்றியும் படித்தபோது அவனுக்கு மூளை குழம்பிவிட்ட துயரநாட்களை அவன் மறத்தல் சாத்தியமே இல்லை!

'என்னேட அருமை நாய்க் குட்டியைப் பிரிஞ்சு எத்தனை மாசமாயிட்டுது? அது இந்நேரம் உயிரோடே இருந்திருந்தால், பெரிய நாயாக ஆகியிருக்குமே?' என்று மனத்திற்குள் நினைத்துப் பார்த்த பூபாலனுக்கு அழுகை வந்து விட்டது.

விழாக்களைப் பார்த்துவரப் புறப்பட்டான். வழியில். தன் தந்தைக்கு நிழல் தந்துதவும் மிராசுதார் சுகவனத்தைச் சந்தித்தான். மரியாதையாக வணங்கி விட்டு நடந்தான்.

அவனுடைய வீடு இளைஞர் சங்கத்திற்கு அருகே அமைந்திருந்தது. கிராம ஆஸ்பத்திரி டாக்டர் பக்கிரிசாமிப் பிள்ளையிடமும் கதர் கடை நடராஜன் செட்டியாரிடமும் சில நிமிஷங்கள் பேசிவிட்டுத் திரும்பினன்.

அப்பொழுது—

உலகத்து அதிசயங்கள் அத்தனையும் ஒன்று சேர்ந்து கைகுலுக்கிக் கொண்டிருந்தன—ஆ! பட்டணத்திற்குப் புறப்பட்டுச் சென்ற பூங்கோதையும் அவளுடைய அப்பா டைரக்டர் பரசுராமும்!

நிஜம்தான—அல்லி!...அரக்கன் சர்க்கஸ் சுகுமாரின் புதல்வி!

என்ன அதிசயம்! அன்று அவனைக் கைது செய்து விடுவித்த அதே எஸ். ஐ.–அறந்தாங்கி போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்!

"பூபாலன் அண்ணுச்சி! நாங்க இந்த ஊரை விட்டுப் பட்டணத்துக்குப் போன இரண்டு மூணு நாளுக்குள்ளே ரொம்ப ரொம்ப அதிசயங்கள் நடந்து விட்டன.

"சர்க்கஸ்காரன் சுகுமாரன் கள்ள நோட்டு தயாரிப்பவனும்.... அவனுடைய அட்டூழியத்தைப் பொறுக்காமல் அல்லியே அவனைக்காட்டிக் கொடுக்க இருந்துச்சாம். அதுக்குள்ளே அவனைக் காட்டிக் கொடுத்திட்டுது அவன் கிட்டேயிருந்த ஒரு நாய்க்குட்டி!........இது முதல் அதிசயம். அடுத்த அதிசயம் என்னன்ன, அல்லி அவனேட வளர்ப்புப் பெண்ணும்! நீ அங்கே வேலைக்கு இருக்கிறப்பவே அது எல்லா ரகசியத்தையும் உங்கிட்டே சொல்லத்தான் துடிச்சு

தாம்; சமயம் வாய்க்கலையாம்! இப்போது மூன்றும் அதிசயம் நடக்கப் போகுது. ரெடி, ரெடி, பார், பார்!'' என்று சொல்லி விட்டு பூபாலனுக்கு முன்னே வந்து நின்றாள் கோதை.

அவர்கள் முன்னிலையில் இப்பொழுது ஒரு பெரிய நாய் வாலைக் குழைத்துக் கொண்டே 'ஜாம் ஜாம்' என்று வந்து நின்றது.

காண்பது கனவா, நனவா என்றே சிறுவனுக்குப் புரியவில்லை. எதிரில் நின்ற அந்த நாயைக் குனிந்து தொட்டுப் பார்த்தான். அவனை நெருங்கி, அவன் முகத்தை நாக்கால் நக்கியது அது. அன்பு, அன்பு, அன்பு! மறுகணம் அவன் அந்த நாயைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு கூத்தாடினான். இரண்டு கண்களும் இரண்டு லட்சம் கண்ணீர் முத்துக்களைச் சரம் தொடுத்து அவனுடைய நாய்க்கு மாலை போட்டன.

''தெய்வமே, நீ நிஜமாகவே உலகத்திலே எங்கேயோ ஓர் இடத்திலே இருக்கத்தான் இருக்கிறாய்! இல்லையானால், என் அருமை நாய் என்கிட்டே திரும்பவும் கிடைச்சிருக்குமா?'' என்று கூத்தாடினான் பூபாலன்.

''பூபாலன், நாய்தான் ரொம்பவும் நன்றியுள்ள பிராணி. அது செத்துவிட்டதாகப் பேப்பரிலே போட்டிருந்த சேதிகூட அந்தச் சர்க்கஸ்காரன் செஞ்ச சூழ்ச்சியே தானும்! இந்த நாய்க் குட்டியின் நன்றிக் கடனுக்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை. அன்றைக்கு சாவிலேருந்து இதைக் காப்பாற்றினாய்! அந்த நன்றியை இன்னமும் மறக்கல்லே, பாரு!.... சரி, இதோ பார் நாலாவது அதிசயம்!'' என்று கூறிக்கொண்டே ஒரு பத்திரிகையை எடுத்து நீட்டினார் டைரக்டர் பரசுராம்.

பூபாலன் படித்தான்:

— கோஹினூர் —

''பிரசித்திபெற்ற சர்க்கஸ் முதலாளி சுகுமார் கைது செய்யப்பட்டார். அவர் வளர்த்த பெண் அல்லியும் ஒரு பெரிய நாய்க்குட்டியுமே அவரைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவர் பெரியதொரு கள்ளநோட்டுத் தயாரிப்பாளர் என்ற ரகசியத்தை இந்த நாய்க் குட்டி மூலம்தான் போலீஸ் இலாகாவினர் அறிந்தார்களாம். இந்த நாய் மவுண்ட் ரோட் போலீஸ் ஸ்டேஷனில் நின்று குரைத்து, சில சைகைகள் செய்த தன்பேரில், போலீஸ் ஜவான்கள் சிலர் அதைப் பின் தொடரவே, அது சர்க்கஸ் கூடாரத்தை அடுத்த பங்களாவிலிருந்த பாதாளச் சுரங்கத்துக்கு வழி காட்டியது. கூடியிருந்த சில பேர்கள் கைது செய்யப்பட்டனர். சுகுமாரன் அப்பொழுது அறந்தாங்கியில் இருப்பதறிந்து, அந்த போலீசுக்கு தகவல் அனுப்பி உடனே அவனையும் கைது செய்து விட்டார்கள்.

சென்னைப் போலீஸ் இலாகா பராமரிக்கும் 'துப்பறியும் நாய்'களுக்கு இருக்கும் சில பண்புகள் இதற்கும் இருப்பதால், இதைத் தாங்களே வைத்துக் கொள்ள

மயிலுக்கு தோகையும்
மங்கையருக்கு கூந்தலும்
அழகு என்பார்கள்
மாதர் குலத்தின் பொக்கிஷம்

மே இதழில் ஆரம்பம்:

★

'பூவை'

எழுதும்

நீண்ட கதை

ஜாதி ரோஜா

★

அமிர்தம்

எழுதும்

சித்திரத் தொடர் கதை:

மின்னல் ராணி

எண்ணி இந்த நாயின் விவரத்தை அறிய முயன்றார்கள். இது பூபாலன் என்ற சிறுவனின் நாய் என்பதறிந்து, சிறுவனுக்கு வஞ்சனை செய்தவனைக் கடைசியில் பழிவாங்கி விட்ட இந்த நாயின் நன்றிக் கடனைப்பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாக இருக்கிறது. ஆமாம், இந்த நாய்க் குட்டிக்குத் தான் 'கோஹினூர்' என்ற செல்லப் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் போலீஸ் இலாகாவிலே.

நமது நிருபர்.

''தம்பி பூபாலன்! இப்பொழுது தான் நான்கு அதிசயங்கள் நடந்து முடிந்தன. இப்பொழுது ஐந்தாவது அதிசயம் நடக்கவிருக்கிறது. உன்னுடைய நாய் கோஹினூர் சாதித்த நல்ல செயலுக்கு சென்னை அரசாங்கத்தினர் உன் நாய்க்கு ஒரு தங்கப் பதக்கத்தையும் உனக்கு இரு நூறு ரூபாய் ரொக்கப் பரிசையும் எங்கள்மூலம் அனுப்பியிருக்கிறார்கள். கோஹினூரை நீ இஷ்டப்பட்டுச் சென்னை போலீஸ் இலாகாவுக்கு அனுப்பினால், பெருமையுடன் பெற்றுக் கொள்வதாகவும் செய்தி அறிவிக்கும்படி எழுதியிருக்கிறார்கள். ஆனால், உன் கதையை முழுதும் அறிந்த பிறகு, அந்த வேண்டுகோளை உன்னிடம் கூறவே மனம் மருகிற்று. ஆகவே, இந்த கோஹினூர் உன்னுடனேயே இருக்கட்டும்!'' என்று சொல்லிய போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கப் பதக்கத்தை நாயின் கழுத்தில் மாட்டினார்.

வாலைக் குழைத்துச் சிரித்த கோஹினூரை முகத்தோடு முகம் பொருத்திக் கொஞ்சினான் பூபாலன்.

''எல்லோருக்கும் என் வணக்கமும் நன்றியும். எனக்குப் புது வாழ்வு தந்த அன்பு ஜீவன் என் அருமை கோஹினூர். என் உயிருள்ள மட்டும் அதை என்னால் மறக்கவே முடியாது....'' என்றான் பூபாலன், உணர்ச்சி குமிழியிட்ட குரலில்.

''பூபாலன் அண்ணாச்சி! எங்க படததிலே இன்னொரு காட்சி எடுக்க வேண்டியிருக்குதாம். அதிலே நீ, நான், அல்லி, உன் கோஹினூர் எல்லாருமே சேர்ந்து நடிச்சிடுவோம்....ம்! ஓ. கே சொல்லித்தான் தீரணும்....! நாளைக்குப் பட்டணத்துக்குப் பயணப் படணும்....!'' என்று அன்புடன் எச்சரித்தாள் சிறுமி பூங்கோதை.

''தங்கச்சி! உன் பேச்சைத் தட்டிப் பேச எனக்கு ஏது உரிமை?'' என்று கண்களைச் சிமிட்டியபடி எதிர்க் கேள்வி கேட்டான் பூபாலன்.

உடனே எல்லோரும் சேர்ந்து 'களுக்' கென்று சிரித்தார்கள்—ஆமாம்; அந்த கோஹினூரும் சேர்ந்துதான்!

(நிறைவு) ★

முற்கால இந்தியர் அளித்த செல்வங்கள்

'பெனடிக்ட்'

ஆதிமனிதரின் முதற் பாஷை சித்திரக் கலையேயாம். ஒரு தேசத்தின் முன்னேற்றத்தை அளப்பது அத்தேசத்தின் பண்பாடு என்றால், அப்பண்பாட்டை வளர்ப்பது தெய்விகம் பொதிந்த லளித கலைகளேயாகும்.

ஈட்டிய போர் வெற்றிகளும், வியாபாரத்தின் மூலம் பெருக்கிய பொற்குவியல்களும் உயர்ந்த பண்பாட்டை அத்தேசத்தில் வளர்க்க முடியாது. கலாசாரப் பண்பாட்டில், சித்திர – சிற்பக் கலைகள் இலக்கியக் கலைக்குச் சமானம் என்றே கூறல் வேண்டும். சரித்திர மத்திய காலத்தில் இத்தாலி நாட்டில் துடிப்புடன் எழுந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் குறிக்கோளும் கருத்தும் இதுவே. இன்று இத்தாலி என்றும் ஒரு நாடு உண்டு என்பதை உலகம் உணர வைத்தவர் அந்நாட்டுச் சுதந்திர வீரர் விக்டர் இம்மானுவேல், கறிபல்டிஸ் முதலிய வீரர்கள் மட்டுமல்ல. இறப்பியேல், லேயோணா டாவின்ஸி, மிக்கேல் ஆஞ்சலோ போன்ற சித்திரக் கலைஞர்களுந்தான் இத்தாலி நாட்டின் புகழை நிறுவிய அஸ்திவாரக் கற்களாவர். இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாடுகளின் அரசியல் முன்னேற்றம் மங்கிப் போன காலத்தும், மங்காப் புகழுடன் விளங்குபவர் கோன்ஸ்டபிள் மிலற் என்னும் சித்திரக் கலைஞரே யாகும்.

காமத்தினாலும், அதிகார ஆட்சிப் பற்றினாலும் தலைசிறந்து விளங்கிய கிரேக்கு, ரோம், எகிப்து ஆதியாம் தேசங்கள், இக்காலத்தில் தத்தம் பதவிப் பீடத்தில் இருந்து இறங்கித் தலை குனிந்து, புராதனப் பெயர்களாகி விட்ட போதிலும், அத்தேசத்தின் சித்திர–சிற்பக் கலைகளோ உலகம் முடியும் காலத்தும் மங்காத ஒளியுடன் மிளிருமன்றோ!

புராதன இந்திய நாட்டுக் கலைஞர்களால் இயற்றப்பட்ட கலைச் செல்வங்கள், இன்றும் நம்மால் கண்டும் உணர்ந்தும் அனுபவிக்கக் கூடியனவாக விளங்குகின்றன. மக்களின் அகப் பண்பாட்டை வளர்ப்பதற்கு ஏற்ற ஆத்மீகக் கலைகளாக இவை நன்கு அமைந்து ஆங்காங்கு காட்சி புரிகின்றன. நம் தாய்நாடாகிய இப்பரத கண்டம் ஆத்மீக சாதனைகளால் முன்னேறி வருவதற்கு இக்கலைச் செல்வங்களே மூலகாரணமாக இருக்கின்றன.

ஆதிகால இந்திய சிற்ப, ஓவியங்கள் விளப்பமற்ற ஆதாரங்கள் உளதாயிருப்பினும், அவற்றில் பெரும்பான்மையானவை இயற்கையில் கவர்ச்சி பொருந்தியவையாக அமையப் பெற்றிருக்கின்றன. இந்தியாவின் பல பாகங்களில். கலைகளை ஆதரித்து அதன் வளர்ச்சிக்கு உதவியிருப்பதென்

சிங்களத் தீவினுக்கோர் பாலம் சமைக்க அன்று கனவு கண்டான் தமிழன் பாரதி. அவன் கனவு முழுமையான நனவாக – வெற்றிகண்ட கனவாக ஆகும் வாய்ப்பை ஏற்படுத்தவல்ல பொறுப்பு இலங்கைத் தமிழ்ப்பேரறிஞர்களிடம் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்துக்கும் சிங்களத்துக்கும் ஓர் அன்புப்பாலம் கட்டப்பட்டுவிட்ட குறிப்பைச் சரித்திர ஏடுகள் சொல்லும்.

இத்தகைய புனிதத் தொடர்பை இறுகச் செய்து பாரதியின் தீர்க்க தரிசனத்துக்கு வெற்றி காட்ட, யாழ்ப்பாணம் ஓவியக் கலாநிலைய ஆசிரியர் திருவாளர் பெனடிக்ட் அவர்கள் தற்பொழுது தமிழகச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருக்கிறார்; நிலைய வளர்ச்சிக்கு அல்லும் பகலும் உழைத்து வருகிறார்; இலங்கை – இந்தியத் தூதராகவும் பணிபுரிந்து வருகிறார்.

சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட இப்பேச்சை உரிமை பெற்று வெளியிட்டிருக்கின்றோம்.



பது ஆராய்ச்சியினுல் கண்டுபிடிக் கப்பெற்ற ஓலைச் சுவடிகளில் இருந்து தெரிய வருகிறது.

கி.பி. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, சிற்ப ஓவியக் கலை கள் இந்தியாவில் இருந்தன என்ப தற்கு மோஹஞ்சதாரா, ஹாரப்பா போன்ற புராதன நகரங்களிலும், சிந்து நதிக்கரை யோரங்களிலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட் கள் சான்ருக உள்ளன.

பாரசீகம் ஒரு புறமும் சீன மறு புறமும் இருப்பதினுல், அக் காலத்து இந்தியருடைய கருத்து வெளிப் பாட்டுத் தூரிகை வர்ணந் தீட்டல், அவர்களது கருத்தை வெளிப்படுத்தும் முறைகளைக் கையாளும் விதங்களையும் அபி விருத்தி செய்ய ஏதுவாக இருந் தது. முகலாயக் கலையும் பழங் காலந் தொட்டு நிலவி வந்திருக் கிறது. முகலாயக் கலை முறையை நாம் ஆராயப் புகின், தென் பார சிகக் கலை முறையையே வழித் தோன்றலாகப் பெற்றிருப்பதை முகலாயச் சைத்திரிகரின் திறமை, வேட்டை, யுத்தம் போன்ற சித் திரங்களில் காணலாம். '**கிழக் கின் இறப்பியேல்**' எனும் பெயர் வாங்கிய பிஹ்ஷாட் எனும் பிரபல சைத்திரியன் பாரசீகத்தில் இருந் தான். இவன் வழித் தோன்றலின் உதவி கொண்டு, சக்கரவர்த்தி **அக்பர்** முகாலயச் சித்திரக் கலை யைத் தனது அரசவையில் இடம் பெறச் செய்தார். **பருக் அப்பல் சமாட்**, மீர்சாயிட், அலி முதலாம் முஸ்லீம் சைத்திரிகர் களும், பசவன், தாஸ்வாந்த், கேசு தாசன் முதலிய இந்து ஓவியர் களும் இடம் பெற்றிருந்தனர். இதன் காரணமாக, இருபாலரது கலைகளும் ஒன்றித்து ஐக்கியத் துடன் வளர்ந்து வந்தன.

இராஜபுத்திர ஓவியங்களின் சிறந்த பகுதிகள் '**இராக**' '**இரா கினி**' ஓவியம் எனவும், '**நாயக நாயகி**' ஓவியம் எனவும் பெயர் பூண்ட சித்திரங்களாகத் தீட்டப் பட்டு இருக்கின்றன.

இராகங்களின் இலட்சணங்களை விளக்கிக் காட்டும் சித்திரங்கள் '**இராக**' '**இராகினி**' ஓவியம் எனவும், பல வகையான மனே நிலைகளை வெளிப்படுத்தும் சித் திரங்கள் '**நாயக**' '**நாயகி**' ஓவி யம் எனவும் பெறப்படும்.

இந்த நாட்டில் **புத்தர்** பிறந்த திலிருந்து, புத்த சமயம் தோன் றியதுமன்றி, புத்த தத்துவங்கள் உலகமெங்கும் பரவின. புத்த சமயம் பரிணமித்ததும் புத்த சமயச் சித்திரங்களும் வளர்ச்சி பெற ஆரம்பித்தன. கி. பி. 67-ல் சீனச் சக்கரவர்த்தி மீங்ரியின் வேண்டுகோளுக் கிணங்க, **காரி யப் மதுங்க** என்னும் இந்தியப் போதகர் சீனவுக்குப் பல சித்தி ரங்களுடன் சென்ருர் என்று சரித் திரம் கூறுகிறது. இதன் காரண மாக ஜாவா, சயாம், பர்மா, இலங்கை, நேபாளம், சீன, ஜப் பான் முதலாம் நாடுகளில், சில சித்திரங்கள் அஜந்தாக் குகைச் சித்திர முறையை யொட்டித் தோன்றின. இதை விளக்க, இலங்கையின் **சிகிரியா** மலையும் (கி. பி. 427). ஜப்பானில் **கொரி யூஜி** கோவிலும் (கி. பி. எட்டாம் நூற்ருண்டு) சான்றுகளாக இன் றும் உள்ளன.

புத்தச் சித்திரங்களை ஆராயு மிடத்து, அவற்றின் கருத்து வெளிப்பாடு மனத்தைக் கவரும் தன்மையாக அமைந்துள்ளது.

வர்ணந்தீட்டல் வழிகள் சுதேச முறையை யொட்டியதாகவே இருக்கின்றன. பின்னணி வர்ணந் தீட்டல் மிக்க இருட்டாகவும், அதில் வரையப்பெற்ற உருவங்கள் துலாம்பரமாகவும் விளங்கும் வண்ணம் சித்திரிக்கப் பட்டும் இருக்கின்றன. புத்த சைத்திரியர்கள், கைகளின் அபிநய முறைகளை நன்ருகப் பயின்று வரைந்ததால், அவர்களுக்கு ஒரு தனிப் பெருமை ஏற்பட்டது. இதே முறைகளை (இலங்கை) சிகிரியாச் சித்திரங்களிலும் காணலாம். ஆனல், சிகிரியாச் சித்திரங்கள், அஜந்தாச் சித்திரங்களிலும் தரம் குறைவாயிருந்த போதிலும், நுண்ணிய அறிவை ஊட்டக்கூடியதாக அமைந்துள்ளன. துணிகரமான தூரிகைப் பாவிப்பு முறைகள், அவர்களின் ஓவிய ஞானத்தையும், ஆற்றலையும் எடுத்துக் காட்டுகின்றன.

புத்த சித்திர முறையை, **தாராநாத்** எனும் சரித்திர ஆசிரியர், **தேவ, யாக்ஷ, நாக** முறை என மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்திருக்கிருர். இச்சித்திரங்கள், **நாக அர்ச்சுனு** எனும் சைத்திரியனுலும் மற்றும் பிரபல சைத்திரியராலும் தீட்டப் பெற்றிருக்கின்றன. இக்குகைச் சித்திரங்களில் சில **பருத், அமராவதி, சாஞ்சி சிற்ப** அமைப்பை ஒத்தனவாகக் காணப்படுகின்றன.

கடவுள் வழிபாட்டிற்கு உகந்த திருக் கலைகளை அமைத்த தனிப் பெருமை தென்னுட்டிற்கே உரியது என்பது, ஆராய்ச்சிக் கண்களினூடே தெரிகிறது. தென்னிந்தியச் சிற்ப, ஓவியக் கலைகள் பல தத்துவங்களையும், அவற்றின் முடிவாகிய கடவுள் தத்துவத்தையும், அதன் மகிமைகளையும் உலகிற்கே எடுத்தோதி வருகின்றன. இதனுலேதான் இந்தியா ஒரு கவர்ச்சி மையமாக உலகிற்கு இன்றும் விளங்குகின்றது.

விசேஷமாகக் காஞ்சிபுரம், மஹாபலிபுரம் போன்ற திருத்

தலங்களில் வல்லபம் நிறைந்த சிற்பிகளின் கண்ணும் கருத்தும் ஒருமித்து உழைத்த கலைச் செல்வங்கள், காலச் சுழலில் கவலைப்பட்டு உருக்குலைந்து அழிந்து போனலும், எஞ்சியிருக்கும் வெறும் கற்கள், அவர்களின் ஞாபகச் சின்னங்களாகத் திகழ்வதையும் நாம் பார்க்கின்ருேம்.

"முகக்கண் கொண்டு பார்க்கின்ற
மூடர்காள்."
அகக்கண் கொண்டு பார்ப்பதே
ஆனந்தம்"

என்னும் ஞானிகளின் வாக்கிற்கேற்ப, உள்ளத்தின் அழகுணர்ச்சியால் உந்தப் பெற்ற கடவுளினதும், புராதன வரலாறுகளினதும் தத்துவங்களை வெளிப்படுத்தும் **சித்திர - சிற்பங்கள்** எல்லாம் கோயில்களை அழகு செய்து, நமக்குப் பேரின்ப நினைவை உண்டு பண்ணி விடுகின்றன வல்லவா?

இவை மாத்திரமின்றி, தேசங்களின் பரஸ்பர அன்புக்கும், நல்லெண்ணக் கூட்டுறவுக்கும் மிக மிக அத்தியாவசியமாகிய சங்கீதம், சித்திர-சிற்பம், நிர்த்தனம் போன்ற புனிதக் கலைகளின் சீர் சிறப்புக்களையும், மகிமைகளையும் தெளிவாக நாம் ஆராய்ந்து கற்று, நம் வாழ்க்கையில் இவ்வித லளித கலைகளை உறுதுணையாகக் கொண்டு இன்புறவாழ்ந்து, என்றுமழியாத சாந்தி நிலையைப் பெறுவோமாக! ★



ஏன் இந்தப் புனைபெயர்?

'ஜெகசிற்பியன்'

புனைபெயரில் அதிக நம்பிக்கை கொள்ளாத நண்பர் பூவை எஸ். ஆறுமுகம், புனைபெயர் என்ற ஆமை ஓட்டுக்குள் புகுந்து முடங்கி இலக்கிய உலகில் ஏதோ ஒரு தினுசாக நகர்ந்து கொண்டு கிடக்கும் என்னைப் போன்ற அப்பாவிகளை இப்படிச் சந்திசிரிக்க வைக்க நினைத்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை! காரணம் எதுவாயிருந்தாலும், அந்த 'ஆமை ஓட்டுக்குள்' நான் புகுந்து ஆண்டுகள் பதினாறு ஆகிவிட்டதால், என் 'தலையை' சற்றே நீட்டிக் காட்ட இப்போது தைரியம் பிறந்திருக்கிறது.

என்னைப் படைக்கக் கடவுள் எவ்வளவு காலம் யோசனை செய்தாரோ எனக்குத் தெரியாது; என்னை உருவாக்க என் பெற்றோர் எத்தனை இரவுகள் மந்திராலோசனை செய்தார்களோ அதுவும் தெரியாது; நான் பிறந்த எட்டாம் நாள், மாயவரம் சுந்தரம் டாக்கீஸ் அருகாமையிலுள்ள நெடிதுயர்ந்த மாதா கோயிலுக்கு என்னைத் தூக்கிக் கொண்டு போய் ஞானஸ்நானத் தொட்டிலில் கிடத்தும் போது பாதிரியாரிடம் எனக்கு என்ன பெயர் சூட்டியிருப்பதாகச் சொல்லலாம் என்று எனது பெற்றோரும் உறவினர்களும் எவ்வளவு நேரம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டார்களோ—அதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஆனால்—

இதயத்தின் கனவுகளை ஏட்டிலே புதைக்கவேண்டுமென்ற எண்ணம் மொட்டுவிட்ட அந்த 1939-ஆம் ஆண்டு முதல், சுமார் மூன்றாண்டு காலம் வரை எனக்கு ஒரு புனைபெயர் வேண்டுமென்று நான் யோசித்த யோசனை இருக்கிறதே-அப்பப்பா! அதை நினைத்தாலும் இப்போது வயிற்றை முறுக்கிக் கொண்டு சிரிப்பு வருகிறது. அதையெல்லாம் சாங்கோபாங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை; அதற்கு இங்கு 'இடமும்' இல்லை.

1939-ஆம் வருஷம் ஜூன் மாதம் 'நல்லாயன்' என்னும் பத்திரிகையில் 'சுந்தரனின் சோபனம்' என்ற எனது முதல் கதை வெளியான போது, அதில் 'தஞ்சை ஜெர்வாஸ்' என்பதாக வெளிச்சம் போட்டுக் கொண்டேன். (தஞ்சாவூரில் அப்போது நான் படித்துக் கொண்டிருந்ததால், என் இயற்பெயரின் முன்னால் 'தஞ்சை' என்ற வார்த்தை ஒட்டிக் கொண்டு விட்டது!) பிறகு எனது சொந்த ஊரான மாயவரம் வந்த பின், புதுவை 'சர்வ வியாபி'யிலும், மதுரை 'சத்திய தூதனி'லும், 'மாயவரம் ஜெர்வாஸ்' என்ற பெயரில் 'போர'டித்துக் கொண்டிருந்தேன். பிறகு சென்னைக்கு வந்து, சென்னை சித்திர கலாசாலையில் சேர்ந்து ஓவியம் பயில ஆரம்பித்தேன். அப்போதும் 'கதைகள்' எழுதிக் கொண்டுதான் இருந்தேன்; ஆனால், என் பெயருக்கு முன்னால் 'சென்னை' என்று சேர்த்துக் கொள்ளவில்லை. வெறும் 'ஜெர்வாஸ்' என்றே எழுதினேன்.

இப்படியாகத்தானே எனது 'எழுத்து வெறி' வளர்ந்துகொண்டிருந்த போது, அது நசுங்கும்படியான ஒரு சூழ்நிலை உருவாகியது. அது என்ன தெரியுமா? மாளாத மனவேதனையுடன் அதைச் சொல்கிறேன்—'ஜெர்வாஸ்' என்ற எனது கிறிஸ்துவப் பெயர்தான் அந்தச் 'சூழ்நிலை'யை உண்டாக்கியது. ஹிந்துக்களின் பத்திரிகைகளில் எழுதுகிறேன் என்று எனது மதத்தார்கள் என்மேல் சீறினார்கள். கிறிஸ்துவனுக்கு நம் பத்திரிகையில் இடம் கொடுப்பதாவது என்று சில 'ஹிந்துப் பத்திரிகை ஆசிரியர்கள்' மனம் சுளித்தார்கள்! இதனால், என் எழுத்தார்வம் மரணவேதனைப்பட ஆரம்பித்தது.

இந்த வேதனை உச்ச கட்டத்தை அடைந்த போதுதான் எனக்கொரு ஞானோதயம் பிறந்தது: 'நான் ஏன் ஒரு புனைபெயர் வைத்துக் கொள்ளக் கூடாது?'

என் பெற்றோர் என்னை 'பாலையா' என்று செல்லமாக அழைப்பது வழக்கம். அந்தப் பெயரையே என் 'புனைபெயராக' வைத்துக் கொண்டு மீண்டும் எழுத ஆரம்பித்தேன். ஆனால் அந்தப் பெயரில் உப்புச் சப்பில்லை என்ற குறை இருந்தது. எனவே, வேறொரு புனை பெயரைத் தேட ஆரம்பித்தேன்.

நான் ஓவியக் கலை பயின்று கொண்டிருந்த போது என்னுடன் மணியம் என்பவரும் (இப்போது 'கல்கி' பத்திரிகையில் பிரபல சித்திரக்காரராய் இருப்பவர்) பயின்று கொண்டிருந்தார். அவர், அமரர் கல்கி எழுதி வந்த 'பார்த்திபன் கனவு', 'மகுடபதி' என்ற தொடர் கதைகளின் தலைப்புச் சித்திரங்களை வகுப்பறையில் இருந்து கொண்டே எழுதுவார். அதை நான் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன். சித்திர ரஸனைக்காகவா? இல்லை—அந்தக் கதைகளை எழுதும் 'கல்கி' என்ற புனைபெயரைத் திருப்பித் திருப்பிப் படிக்கத்தான்! அந்த மூன்றெழுத்துப் பெயர் என்னை அத்தனை தூரம் கவர்ந்து விட்டது. வைத்தால் இப்படி ஓர் அழகான புனைபெயரை வைத்துக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால் எழுதுவதையே மறந்துவிட வேண்டும்!....

எனக்கு அடிநாள் முதலே, ஆங்கிலக் கவியரசன் ஷேக்ஸ்பியரின் நூல்களைப் படிப்பதில் அபார மோகம். அவனது தலைசிறந்த 'துன்பியல்' நாடகங்களைத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருப்பேன். இயற்கையிலேயே நான் அவலச் சுவைப் பிரியன்! அதற்கு, நான் பிறந்து வளர்ந்து வாழும் சூழ்நிலையும் அனுபவமும் காரணங்களாயிருக்கலாம். எனவே, அவலச்சுவை மன்னனை ஷேக்ஸ்பியரை நான் அடியோடு காதலித்தேன்!....

இந்தச் சமயத்தில், திரு. சுத்தானந்த பாரதியாரின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு நூல்கள் சிலவற்றைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்படிப் படித்த ஏதோ ஒரு நூலின் முன்னுரையில் (விக்தர் ஹியூகோவின், 'இளிச்சவாயன்' அல்லது 'ஏழைபடும் பாடு' என்று நினைக்கிறேன்) ஷேக்ஸ்யியர் என்ற பெயருக்கு 'செகப்பியர்' என்று தமிழுருவம் கொடுத்திருந்தார். (கான்டர்பரி என்ற ஊரின் பெயரை திரு. யோகியாரவர்கள் 'கந்தர்புரி' என்றுதான் எழுதுவது வழக்கம்!) இந்தப் பெயர் மொழி பெயர்ப்பு என்னை வெகுவாக ஆகர்ஷித்து விட்டது. என்னைக் கவர்ந்த உலகப் பெருங் கவிஞன் ஷேக்ஸ்பியர், தமிழில் 'செகப்பியர்' ஆனதை எண்ணி யெண்ணி வியந்தேன். இந்த வியப்புதான் எனக்கு ஓர் அழகான புனைபெயரைத் தேடித் தந்தது. அதுதான் 'ஜெகசிற்பியன்' என்ற பெயர்! இந்தப் பெயரில் ஷேக்ஸ்பியர் என்ற பெயரின் ஒலிமணமும் ஏதோ ஒரு தினுசாக ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று எனக்கு எல்லையற்ற திருப்தி. அந்தத் திருப்தி இன்றும் அழியாமல் இருந்து வருகிறது. இந்தத் திருப்திக்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. எனது புனைபெயர் எந்த ஒரு மதத்தின் சார்புள்ளதாகவும் இருக்கக் கூடாது என்று விரும்பினேன்—நான் கடவுள் நம்பிக்கையுள்ளவனே தவிர, மத நம்பிக்கை அற்றவன் என்பதால்! (மத நம்பிக்கையால்தானே கடவுள் நம்பிக்கை பிறக்கிறது என்று சிலர் கேட்கலாம். அப்படி அல்ல என்று என்னால் வாதிக்க முடியும்.) 1942-ஆம் வருஷம் 'ஜெகசிற்பியன்' என்ற இந்தப் புனைபெயரில் முதன் முதலாக 'நவயுவன்' பத்திரிகையில் எழுதினேன். அன்று முதல் இன்றுவரை அதே பெயரில் எழுதி வருகிறேன்.

இந்த உலகத்தில் நான் என் உயிரைவிட மேலாக நேசிப்பது இரண்டு. ஒன்று, எனது அருமைப் பிள்ளைகள். மற்றொன்று, எனது அழகான புனைபெயர்.

பட உலகம்

விமரிசனம் :

தெனாலிராமன்

கவிகளின் பெயரை வைத்துப் படம் எடுத்துத் திரையிடுவதுதென்பது கிள்ளுக் கீரையான விஷயமல்ல. கவிஞர்களின் வாழ்க்கையில் சுவை மிகுந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்க வேண்டாமா? அத்தகைய சம்பவங்களுக்கு உருவமும் உயிரும் கொடுத்து காமிராவுக்குள் திணித்து வெற்றிகரமாகப் படம் பிடித்துக் காட்ட வேண்டாமா?

இந்த இரண்டு கேள்விக் குறிகளுக்கும் 'வேண்டும்' என்ற பதில் கிடைத்து விட்டால், அப்புறம் படம் 'வெற்றி' என்ற தீர்ப்பை ரசிகர்களிடமிருந்து பெற்றுவிடும்.

தெனாலிராமன் தலை சிறந்த ஒரு விகடகவி. இதை உலகம் அறியா விட்டாலும், நாம் அறிவோம். விஜய நகர சாம்ராஜ்யத்தின் அரசவையை அலங்கரித்த கவிவாணர்களிலே இவர் சிறந்தவர் மட்டுமல்ல, விதூஷகக் கவியுங் கூட.

யாரை ஆட்டிவைக்க மாதுரி இந்த ஆனந்த நடனம் ஆடுகின்றாராம்!
—ஒன்றே குலம்.

ஓர் ஆச்சரியம்—படத்தில் தெனாலிராமனை விகடகவியாக மாற்றும் பொறுப்பு 'மாதா'வுக்கு விழுந்திருக்கிறது. கவிஞர் விகடகவியாக மாறுகிறார். விகடகவி என்ற சொல்லடுக்குக்குக் கைகொடுக்கும் சம்பவங்களைப் படத்தில் பார்க்க முடியவில்லை. தெனாலிராமனை நாட்டுப் பற்று மிகக் கொண்ட தலை சிறந்த கவியாகவும், ராஜதந்திரியாகவும் மாத்திரமே சித்திரிப்பதில் படத் தயாரிப்பாளர்கள் கவனம் கொண்டிருக்கிறார்கள்.

'தெனாலிராமன்' ஜனரஞ்சகமான திரைச் சித்திரம்!—இந்த ஆச்சரியக் குறிக்கு விளக்கம் தரும் அம்சங்கள்: சிவாஜியின் சிறப்பான குணச்சித்திர பாகம்; குறை சொல்ல முடியாத ராமராவின் வேஷப் பொருத்தமும் பேச்சும்; பானுமதியின் ஆடல் பாடல்; நாகையாவின் அற்புதமான நடிப்பு.

சிவாஜி கணேசனுக்குத் தான் முழுக்க முழுக்க வேலை. அவர் தோன்றாத கட்டங்கள் நம் பொறுமையைச் சோதிக்கின்றன. பானுமதியும் ராமராவும் கிருஷ்ண தேவராயரும் கிருஷ்ணாவுமாக சொக்கட்டான் ஆடும் கட்டம், வசந்த மண்டபத்தில் ஆடிப்பாடி மகிழும் பகுதி-இவற்றில் 'காமிரா' போற்றத் தக்க வகையில் பணி புரிந்திருக்கிறது. பானுமதியின் நடனங்களிலே மாற்றம் தோற்றம் தந்திருக்க வேண்டும். தொடக்கத்தில் நம்பியாரின் வேஷப்பொருத்தம் திருப்தியளிக்கவில்லை.

வசனம் ரசிக்கத் தக்க முறையில் எழுதப் பட்டுள்ளது, பெரும்பாலான கட்டங்களிலே. 'பித்துக்குளி'க்கும் கொஞ்சம் பெருமை கொடுக்க வேண்டாமா? 'உலகெலாம் உனதருளால்' என்ற

பாட்டு நினைவில் தங்கும். ஜமுனு விற்கும் படத்தின் வெற்றியில் கட்டாயம் பங்கு உண்டு.

கதையம்சத்தில் உள்ள சில குறைபாடுகள், தெனுலிராமன் புனைந்ததாகப் பாடும் இரண்டொரு இரவல் பாடல்கள், தேவைக்கும் அதிகமான ஆட்டங்கள், பாட்டுகள்–இவை 'விமரிசனம்' என்ற வார்த்தை வளையத்தை விட்டுச் சற்றே விலகியிருந்தால், 'தெனுலிராமன்' சிறந்ததொரு பொழுது போக்குப் படம். —பைரவி

*

சந்திப்பு : 'தாரா'

என் கனவு

ராஜசுலோசனு

மிகத் துரித கதியில் முன்னேறித் திரைப் பட உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று 'ரிசர்வ்' செய்துகொண்ட நடிகைகளுள் திருமதி ராஜசுலோசனு ஒருவர். நட்சத்திர நடிகையின் இதயம் 'உமா' மூலம் பேசுகிறது....!

நான் நடித்த படங்களில் எனக்குப் பிடித்தமான படம் 'நல்லதங்கை'தான். நம் பட்த் தயாரிப்பாளர்கள் மீண்டும் பழைய படங்களையே படமாக்கி வருகிருர்கள். நல்ல வசூலாகும் என்ற நோக்கம்தான் காரணம். கோடை காலம் போய் குளிர் காலம் வருவதைப்போல்,பட உலகிலும் சமூகப் படங்களின் காலம் மறைந்து புராணப் படக்காலம் தோன்றி வருகின்றது.

நான் நடித்துக்கொண்டிருக்கும் தமிழ்ப் படங்கள்: 'ராஜா ராணி', 'படித்த, பெண்', 'ஆசை', 'வாழ்வில் ஒரு நாள்', 'கன்னியின் சபதம்', 'பூலோக ரம்பை', 'அம்பிகாபதி', 'சாரங்கதாரா', 'பத்தினித் தெய்வம்', 'அதிரூப அமராவதி', 'காதலும் கடமையும்', 'நல்ல நாள்', 'கஜலக்ஷ்மி'.

தெலுங்குப் படங்கள்: 'சாரங்கதாரா', 'நீதிபதி', 'அரிச்சந்திரா'.

ஹிந்தி: 'நயா ஆத்மி', 'சோரி சோரி'.

என்னுடைய பொழுதுபோக்கு–படப்பிடிப்பு நேரம்போக மற்ற நேரங்களில் என் மகன் கலையழகனேடு விளையாடிக் கொண்டிருப்பதுதான். நல்ல படங்களாக இருந்தால் ஆங்கில,ஹிந்திப் படங்களுக்கும் போவதுண்டு.

எனக்குப் பிடித்த தென்னுட்டு நட்சத்திரங்கள் ராஜகுமாரியும், பத்மினியும். ஹிந்தி நடிகை நிம்மியையும் எனக்குப் பிடிக்கும்.

எனக்கு தமிழ், தெலுங்கு எழுதப் படிக்கவும், கன்னடத்தில் பேசப் படிக்கவும் தெரியும். கார் ஓட்டுவதில் எனக்கு அலாதிப் பிரியம்.

நம் தமிழ்ப்பட முதலாளிகள், வெற்றி பெற்ற தமிழ்ப் படங்களை ஹிந்தியாக மாற்றி எடுக்கும் போது அதில் நடித்த தமிழ் நடிகர்களைக் கொண்டு எடுத்தால் தோல்வியடைந்து விடும் என்று எண்ணுகிருர்கள். ஆனல், நிச்சயம்

பாவம், என். எஸ். கிருஷ்ணனுக்குக் கை வலித்திருக்கும்; எம். என். கிருஷ்ண னுக்கு முதுகு வலித்திருக்கும்!

— மதுரை வீரன்.

'குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்கலாமா?' என்று கேட்கிருர்கள். அப்பொழுது சினிமாவில் நடிப்பதற்கென்றே தனியான பெண்கள் இருக்கிருர்களா, என்ன? குடும்பப் பெண்கள், மற்ற உத்தியோகங்களைப் பார்த்திடும்போது, சினிமாவிலும் தாராளமாய் ஏன் நடிக்கக் கூடாதாம்? — பேஷாக நடிக்கலாம்.

சினிமாவில் 'இனக்கவர்ச்சி' (Sex-Appeal) அதிகமாக இருக்கிறதே என்று குறைப்பட்டுக் கொள்கிறவர்கள், கடைவீதிகளிலோ, தெருக்களிலோ சற்று நேரம் நின்று பார்த்தால் தெரியும். அங்கு காணும் இனக் கவர்ச்சியை விட, சினிமாவில் ஒன்றும் அதிகமில்லை என்பதைத் தெரிந்துகொள்வார்கள். வணக்கம். ★

வெற்றியடையும் என்று நான் உறுதி கூறுகிறேன். 'சந்திரலேகா', 'ஏக்தா ராஜா', 'மங்களகரா' போன்ற படங்கள் வெற்றியடைந்ததை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஹிந்தி நடிகர்களைக் கொண்டு எடுத்த படங்கள் தோல்வியடைந்திருப்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'உமா'வின் மூலம் நான் ரசிகர்களுக்குச் சொல்ல விரும்புவது: என்னுடைய போட்டோவை அனுப்பும்படி ஏராளமான ரசிகர்கள் கடிதம் எழுதுகின்ருர்கள். எல்லோருக்கும் அனுப்பிவைக்க வேண்டுமென்றுதான் ஆவல். ஆனல் படப்பிடிப்புக்குச் செல்லவே நேரம் சரியாகி விடுவதால், ரசிகர்களுக்குப் போட்டோ அனுப்பிவைக்கும் விஷயத்தை உடனுக்குடன் கவனிக்க முடியவில்லை. ரசிகர்கள் எதிர்பாராத வகையில் அவர்களுக்குப் போட்டோவை அனுப்பிவைப்பேன்.

இனும்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிாவதைத் தடுத்து, நீணடு கருகருவென று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகததிற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இநத அற்புத தைலததை பிரபலப்படுத்துவதற்கென, அழகிறகும் உறுதிக்கும் 15 வருஷ உத்தாவாதம பெறற ஓா அழகிய பான்ஸி கை கடியாரமும, ஒரு மோதிரமும் (நியூ கோலட்), 3 சீசா வாஙகுபவர்களுககு 6 பானஸி கை கடியாரஙகளும் மறறும 6 மோதிரஙகளும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும. திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)

use Germex for all SKIN DISEASES
இருமிநாசமளிக்கும்
ஆற்றும் தன்மையுள்ள
ஜெர்மெக்ஸ்
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி விஷக்கடி சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
Skin Disorders Quickly relieved with GERMEX
எல்லா சரும உபாதைகளுக்கும் ஹிதமளிக்கும் பிரத்யேக மருந்து மூலிகைகளும் கிருமி நாசத்துவ மருந்துகளும் விஞ்ஞான முறைப்படி கலந்து தயாரிக்கப்படும் சிறந்த சரக்கு இது. மிருதுவான சருமத்துவாரங்களுக்குள் ஊடுருவிச் சென்று, புது ஆரோக்கியமான சருமம் வளர ஜெர்மெக்ஸ் உதவி செய்கிறது. ஜெர்மெக்ஸ் மிருகக்கொழுப்பற்றது என்பதற்கு உண்மையான உத்தரவாதம் அளிக்கிறோம்.
படை விவாதி
வலிக்கும் கட்டிகள்.
அரிக்கும் தடிப்புகள்
விஷத் தன்மையான வெட்டுகள்
முகப் பருக்கள்
★ இருமியை கொல்லுகிறது
காயத்தை ஆற்றுகிறது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட்.,
சென்னை-2.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers, "Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone : 2200